வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்


SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 1991 மாசித் திங்கள் 2ம் நாள் (14—2—1960) ஞாயிற்றுக்கிழமை ஷஃபான் 16 | இதழ் 32



கடந்த 4-ந் தேதி அதாவது இலங்கையின் சுதந்திர தினம் யாழ்ப்பாணத்தில் மிகக் காத்திரமாகத் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. முற்ற வெளியில் நடைபெற்ற துக்கதினக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் சிலர் பேசிக்கொண்டிருப்பதைப் படத்தில் காணலாம். (1) கோப்பாய் அபேட்சகர் திரு எம். பாலசுந்தரம், (2) யாழ்ப்பாணம அபேட்சகர் திரு. எஸ் கதிரவேற் பிள்ளை (3) உடுப்பிட்டி அபேட்சகர் திரு கே ஜெயக்கொடி (4) நல்லூர் அபேட்சகர் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.

# தெற்கிலும் வடக்கிலும்

## ஆட்டங் கண்டு விட்டது சமசமாஜக் கட்சி

## தமிழ் அபேட்சகர்களைப் பலியிட்டேனும் சிங்களப் பகுதிகளில் மானங்காக்க முயற்சி

——o——

### திடீர் கொள்கை மாற்றத்தின் மர்மம் இதுதான்

(சுதந்திரன் நிருபர்)

லங்கா சமசமாஜக் கட்சியின் செல்வாக்கு இலங்கையின் தென் பகுதியிலே அடியோடு அஸ்தமித்து வருகிறது. டாக்டர் என். எம். பெரேரா டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா உட்பட கட்சியின் பெருந் தலைவர்கள் எல்லாம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் மண் கவ்வி விடுவார்களோ என்ற சந்தேக நிலை உருவாகி விட்டது. இந்தப் படு பயங்கரமான நிலைதான் மொழிக் கொள்கை, பிரஜா உரிமைக் கொள்கைகளில் சமசமாஜக் கட்சி திடீர்க் குத்துக் கரணம் அடித்தமைக்கு காரணம் என்று சுதந்திரனுக்கு அந்தரங்கமாகத் தெரியவருகிறது.

பல வருடங்களாக ருவான்வெலத் தொகுதிக்கு பாராளுமன்றப் பிரதிநிதியாகவிருந்த டாக்டர் என். எம். பெரேரா அத் தொகுதியை விட்டு விட்டு எட்டியாந்தோட்டைத் தொகுதிக்கு கம்பி நீட்டிய இரகசியம் என்ன?

இரகசியம் என்னவென்றால், ருவான்வெலத் தொகுதியில் போட்டியிடும் யு. என். பி. அபேட்சகரான திரு. பி. இம்புலானை தம்மைத் தோற்கடித்துவிடுவார் என்பதை டாக்டர் என். எம். பெரேரா ஏற்கனவே உணர்ந்துகொண்டதுதான்!

### என். எம்மின் ஓட்டம்

யு. என். பி. கட்சியின் செல்வாக்கைவிட திரு. இம்புலானைக்கு ருவான்வெல தொகுதியில் தனிப்பட்ட செல்வாக்கு அதிகம் வளர்ந்துவிட்டது. சுமார் 10,000 தனிப்பட்ட வாக்குகள் திரு. இம்புலானையின் கையில் இருப்பதைக் கணக்கிட்ட டாக்டர் என். எம். ருவான்வெலையை விட்டு எட்டியாந்தோட்டைக்கு ஓட்டம் பிடித்தார்!

ஆனல் எட்டியாந்தோட்டையில் நிலைமை அதைவிட மோசமாகிவிட்டது. பொரியும் சட்டியிலிருந்து எரியும் அடுப்புக்குள் குதித்த கதையாகி விட்டது!

### அதோகதி

எட்டியாந் தோட்டையில் கொம்யூனிஸ்ட் அபேட்சகரான திரு தர்மசேன ஹிக்கொடைக்கும், யு. என். பி. அபேட்சகரான திரு. ஜி. எல். கொத்தலாவலைக்குமே அதிகப்படியான செல்வாக்கு வளர்ந்து விட்டது. டாக்டர் என். எம். முக்கு விழக்கூடிய வாக்குகளைத் திரு. ஹிக்கொடை பிய்த்து எடுத்துக் கொண்டு வருகிருர். இந்த நிலையில் டாக்டரின் கதி நாளுக்கு நாள் அதோகதியாகி வருகிறது.

டாக்டர் என். எம். பெரேராவுக்கு மட்டுந்தான் இந்தக் கஷ்டசாத்தியமான நிலை என்பதல்ல. தெஹிவளை-கல்கிசைத் தொகுதியில் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் நிலையும் ஈடாட்டம் கண்டுவிட்டது.

யு. என். பி. அபேட்சகரான திரு எஸ். டி. எஸ். ஜயசிங்க டாக்டர் கொல்வினுக்

(12-ம் பக்கம் பார்க்க)

### அகதிகளைக் கப்பலேற்றிய அண்டப்புளுகு!

1958 வகுப்புக் கலவரத்தின் போது கொழும்பில் அநாதைகளாக்கப்பட்டவர்களைக் கப்பலேற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்த உதவியைப் புரிந்தவர் தாமே தான் என யாழ்ப்பாணப் பகுதியில் போட்டியிடும் ஒரு சுயஇச்சை அபேட்சகர் கூறி வருகிருர் என்று தெரிய வருகிறது.

இப்படிக் கப்பல் ஏற்பாடுகள் செய்தமையினுல் ஒரு குறிப்பிட்ட தொகுதியைச் சேர்ந்த மக்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமக்கேதான் வாக்களித்து நன்றிக் கடன் கழிக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிருராம்!

(13-ம் பக்கம் பார்க்க)


## அசுத்த இரத்தம்?

### வேதனை தரும் பல பயங்கரமான நோய்களுக்குக் காரணமாகிறது!



இரத்தத்திலுள்ள அசுத்தங்கள் அகற்றப்படாவிட்டால் அவை அங்கு பெருமளவில்தேங்கிக்கிடந்து நச்சுத் தன்மையை உண்டாக்கி விடுகின்றன. அதனுல் கடுமையான வியாதிகள் பல ஏற்பட ஏதுவாகின்றன.

- வாத நோய்கள்: இடுப்புப் பிடி, சந்து, வாதம், கீல்வாயு, கை கால் பூட்டுகளில் பிடிப்பு—நோவு.
- இரத்த நாள இறுக்க நோய்: இரத்தக் கொதிப்பு, இரத்தக் கட்டுத் தொந்தரவுகள்.
- மந்தமான இரத்த ஓட்டம்: சோர்வு, பித்த மயக்கம், அசதி, நரம்புத் தடிப்பு, நரம்பு சுளுளல் புண், பிளவை, கட்டி.
- சரும வியாதிகள்: பருக்கள் தேமல்கள், சொறி சிரங்குகள் (ECZEMA)
- மூலம்: உள் மூலம், வெளி மூலம், இரத்த மூலம்.




ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(Richelet's Blood Purifier)

இரத்தத்தை சுத்திகரிக்கவும், அதற்கு சக்தியூட்டவுமாக விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது உடம்பில் எந்தப் பாகத்திலுமுள்ள நோய்நஞ்சையும் நீக்கி உடம்பைச் சீர்படுத்துகிறது. உள்ளூர ஏற்பட்ட நச்சுத் தன்மையால் உண்டாகும் நோய்களின் வலிகள்—வருத்தங்கள் படிப்படியாகஒழிக்கப்படுகிறது இம் மருந்தினுல். மேலே சொன்ன எந்த ஒரு வியாதியால் கஷ்டப்படும் நோயாளியும் ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர் உபயோகிக்கவும் பூரண சுகம், பலம், சந்தோஷம் அப்பொழுது நிச்சயம் கிடைக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி விட்டுக் கட்சி மாறும் அங்கத்தவர்களால் தமிழினத்துக்கு தீமைதான்

## அவர்களைத் தெரிவு செய்வது ஆகாது

## தமிழரசுக் கட்சி விடுதலைக்கு பாடுபடுகிறது

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

"அரசியல் அதிகாரங்களை பெரும்பான்மையினராகிய சிங்கள மக்கள் தங்கள் ஏகபோக உரிமையாக்கி தமிழ் பேசும் இனத்தை நசுக்கிக்கொண்டே வருகிறார்கள். தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி அவர்களுக்கு விடுதலை பெற்றுக்கொடுக்கவும் இழந்த உரிமைகளை மீட்டுக்கொடுக்கவுமே தமிழரசுக் கட்சி பாடுபட்டு வருகின்றது"

நல்லூர் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனை ஆதரிக்குமுகமாக சங்கிலியன் தோப்பு முத்திரைச் சந்தையடியில் அணிமையில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

### யாரைத் தெரிவு செய்வது?

"எமது இன்றைய சூழ்நிலையில் ஒன்று சேர்ந்து ஒரே கொள்கையுடன், இலட்சியத்துடன் போராட வேண்டியது அவசியமாகும். இதற்காகவே எமது கட்சி வடக்கு கிழக்கு மாகாணங்களில் 19 தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது.

"கட்சி விட்டுக் கட்சி மாறும் அங்கத்தவர்களையும் சுயேச்சையாளர்களையும் தெரிந்தனுப்பினால் தமிழினத்துக்கு தீமை விளையுமேயன்றி நன்மை வராது. இதை நாம் கவனத்தில் கொண்டு நமது வாக்குகளை அளிக்க வேண்டியது கடமையாகும்

### போராட்டம்

"தமிழ் மக்கள் தங்களது உரிமைகள் கிடைக்கும்வரை தொடர்ந்து போராட்டம் நடாத்த வேண்டும். இவ்வாறு நின்று போராட்டம் நடாத்தினால் வெற்றி பெறுவது நிச்சயம்"

இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண நகர சபை முன்னாள் உறுப்பினராகிய வழக்கறிஞர் அ. செ. மகாதேவா தலைமைவகித்தார்.

டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் கூறியதாவது:

### மொழி முக்கியம்

"தமிழ் மக்கள் தாங்கள் இழந்த அரசியல் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள ஒரே குரலில் நின்று போராட முன்வர வேண்டும். சிங்கள மக்கள் நமது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள இப்படிச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

"பொருளாதாரப் பிரச்னையிலும் பார்க்க மொழிப் பிரச்னையே பிரதானமானதாகும். மொழி பாதுகாக்கப்பட்டால்தான் நமது இனம் வாழ முடியும். ஏனைய கட்சிகளை ஆதரித்தால் நாம் நசுக்கப்படுவோமன்றி மீட்சி பெற முடியாது"

திரு அ. அமிர்தலிங்கம் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:-

### பரீட்சைக் காலம்

"தமிழ் மக்களது பரீட்சைக்காலம் பங்குனி மாதம் 19ம்தேதியாகும். இந்நாளில் எமது இனம் முன்னேற தமிழரசுக் கட்சிக்கே ஆதரவு கொடுக்க வேண்டும் சிங்கள ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து தமிழ் மக்கள் விடுதலை பெற ஒரே கொள்கையை ஆதரித்து மக்கள் தீர்ப்புக் கூற வேண்டும். இன்றைய நமது சூழ்நிலையில் இப்படிச் செய்ய வேண்டியது முக்கியமான கடமையாகும்.

திரு புதுமைலோலன் பேசியதாவது:

### அடிமைத் தளை நீங்க...

"சங்கிலிய மன்னன் ஆட்சி செய்த இவ்விடத்தில் எமது உரிமைக் குரலை எழுப்புவது பொருத்தமானதாயிருக்கின்றது. தனித்து ஆட்சி செலுத்திய தமிழினம் இன்று அடிமைப்பட்டுக் கிடக்கின்றது. நமது அடிமைத் தளையை அறுத்தெறிய தமிழரசுக் கட்சி அபேட்சகர்களையே தெரிந்து அனுப்ப வேண்டும்"

### பேச்சாளர்கள்

கோப்பாய் தமிழரசுக் கட்சி அபேட்சகர் அட்வகேட் திரு. மு பாலசுந்தரம், ஊர்காவற்றுறை அபேட்சகர் திரு. வி. ஏ. கந்தையா, பருத்தித்துறை அபேட்சகர் திரு க. துரைரத்தினம், யாழ் நகர் முன்னாள் மேயர் திரு க பொன்னம்பலம், யாழ்ப்பாணத் தொகுதி அபேட்சகர் திரு சி. கதிரவேற்பிள்ளை, தலைமையாசிரியர் திரு கு. வி. செல்வத்துரை, ஆசிரியர் எஸ். கார்த்திகேசு உட்பட மற்றும் பலரும் பேசினர்.


ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோட்,
கொழும்பு-10.
த. பெட்டி 649



உங்கள் நீடித்த எழிலுக்கு

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.


# அடிமைப்பட்ட இனம் உரிமைக் கிளர்ச்சி செய்வது வகுப்பு வாதமா?

## இளந்தமிழர் இயக்கக் கூட்டத்தில் விளக்கம்

"உரிமைகள் பறிக்கப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு வரும் ஒரு சிறுபான்மை இனம் தனது உரிமைகளைப் பெறவும் விடுதலை வாழ்வை அனுபவிக்கவும் கிளர்ச்சி செய்வது வகுப்புவாதமா? இதைப் போய் வகுப்பு வாதம் என்று வர்ணிப்பவர்கள் கருத்துக் குருடர்கள்"— இவ்வாறு ஆசிரியர் சி. கனகசுந்தரம் கூறினார்.

இணுவில் இளந்தமிழர் இயக்கக் கிளை அணிமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட போது அந்தக் கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. கனகசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

"தமிழினம் உலகெங்கும் பரவி வாழ்கிறது. பரந்து வாழும் தமிழர் இரந்து கெட்டுப் போவதற்குக் காரணம் அவர்களுக்கென்று ஒரு சொந்த அரசு இல்லாததே.

### எது வகுப்புவாதம்?

"ஈழத்தில் உரிமை மறுக்கப்பட்டு அரசியல் அனாதைகளாக்கப்பட்டு இழிந்த நிலையில் இருக்கும் தமிழினம் தன் உரிமை கோரி எதிர்ப்புக் குரல் எழுப்புவது வகுப்புவாதம் என்று வர்ணிக்கப்படுகிறது, இடதுசாரித் தோழர்களால். இழந்த உரிமைகளைப் பெற வேண்டும்; நாங்களும் இந்த நாட்டிலே சரிநிகர் சமானமாக, சிங்கள மக்களுக்கு எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமைகளோடு வாழ வேண்டும், வாழப் போகிறோம் என்றால் அது வகுப்பு வாதமாகுமா?

### யார் வகுப்புவாதிகள்?

"எங்கள் பிரதேசத்தில் திட்டமிட்டு குடியேற்றத்தை அரசாங்கம் செய்து வருவதை எதிர்த்து நாம் கிளர்ச்சிசெய்தால், தமிழினத்தின் அழிவைத்

(15-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசு அபேட்சகர்கள் 19 பேரும் ஏன் பிரதிநிதிகளாக வேண்டும்?

## தமிழினப் பாதுகாப்புக்கு தமிழரசுக்கட்சி போடும் வேலி அப்போதுதான் பலம் பெறும்

### வேலியில் ஓட்டை விழுந்தால் இனத்துக்கு ஆபத்து!

தமிழரசுக் கட்சியினர் 19 அபேட்சகர்களைத் தானே தேர்தலுக்கு நிறுத்தியிருக்கிறார்கள். இவர்கள் 19 பேரையும் தெரிந்து அனுப்பினாலும் அதனால் ஆகப்போவது என்ன? மற்றவர்களைத் தெரிவு செய்வது கூடாது என்று தமிழரசார் ஏன் சொல்ல வேண்டும்? என்று ஒருசிலர் கேட்டுத் திரிவதாகத் தெரிகிறது.

### வேலி

தமிழ் பேசும் இனத்தை அழிவிலிருந்து காப்பாற்ற 19 பேர் கொண்ட வேலி ஒன்றைத்தான் தமிழரசுக் கட்சி போட முயற்சிக்கிறது. 19 பேரும் நின்றால்தான் வேலி பலம் பெறும். இவர்களில் ஒருவர் இருவர்தானும் இல்லாமல் அந்த இடத்தில் வேறு கட்சிக்காரரோ அல்லது கொள்கையற்ற சுயேச்சையாளர்களோ அனுதாபத்துக்காகவேனும் தெரிவு செய்யப்படுவாராயின் வேலியில் ஓட்டை விழுந்தமாதிரியாகிவிடும். ஒரு இடத்தில் தானும் ஓட்டை விழுந்தால் அவ்வளவுதான். வேலி வேலியாக இருக்காது. சில நாட்களில் காலியாகிவிடும். அப்புறம் தமிழ் இனத்துக்கு ஏது பாதுகாப்பு? இதை எண்ணித்தான் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் 19 பேரும் எதிர்வரும் தேர்தலில் தெரிவு செய்யப்படுவது அத்தியாவசியம் என்று தமிழரசுக் கட்சி கூறுகிறது.

மேற்படி கருத்தை அணிமையில் நல்லூர் முத்திரைச் [illegible] ரசுக் கட்சித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் [illegible] துறை அபேட்சகர் திரு கே. துரைரத்தினம் வெளியிட்டார்.

எல்லா எம். பி.க்களையும் இடதுசாரிகளாக அதுவும் சமசமாஜக் கட்சியிலிருந்தே அனுப்ப வேண்டும் என்று வட மாகாணத்தில் செய்யப்பட்டு வரும் பிரசாரத்தின் அந்தரங்கம் சுக்குநூறாக இந்தக் கூட்டத்தில் தகர்க்கப்பட்டது.

### கேள்விகள்

வெற்றி தமக்கே என்று மார்புதட்டித் திரிந்த தோழரின் வாய்ச்சவடால் வெட்ட வெளிச்சமாகிவிட்டதையும் எடுத்துக்காட்டியது கூட்டம். நல்லூரின் புதிய எம். பி. டாக்டர் நாகநாதனேயென்பதை அங்கு கூடியிருந்த மக்கள் தம் ஆதரவுக் குரல்மூலம் உறுதிப்படுத்தினர். சமசமாஜக் கட்சி அபேட்சகர் தோழர் துரைராசசிங்கத்தின் ஆதரவாளர்கள் தொடுத்த கேள்விக்கணைகள் அங்கு தவிடுபொடியாகி மறைந்தன.

### சிறுவனின் பரிதாபம்

அர்த்தமற்றவையும் அனாவசியமானவையுமான கேள்விகள் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு கோஷ்டியினரால் வேண்டுமென்றே அனுப்பி வைக்கப்பட்டன. அந்தக் கேள்விகளைக் கொண்டுவந்து மேடையில் கொடுத்த ஒன்றுமறியாத சிறுவன் திரு அமிர்தலிங்கத்திடம் அகப்பட்டுக் கொண்டு திருதிருவென்று விழித்தான். விடுக்கப்படும் கேள்விகள் அத்தனைக்கும் பதில் சொல்லும் ஒரே ஒரு கட்சி தமிழரசுக் கட்சிதான் என்பதை இந்தக் கூட்டத்திலும் நிரூபித்தனர்.

# முதலிக்குளம், பாவற்குளம் குடியேற்றத் திட்டங்களில் காணி

## முடிவு தேதி மார்ச் 25

முதலிக்குளத்திலும், பாவற்குளத்திலும் குடியேற்றப்படவிருக்கும் விவசாயிகளைத் தெரிவு செய்வதற்கான காணிக் கச்சேரி ஏப்ரல் மாதம் 18, 19, 20-ம் தேதிகளில் நடைபெறும். இதற்கான விண்ணப்பப் பத்திரங்களை மார்ச் மாதம் 25-ம் தேதிக்கு முன்னர் தாம் வாழும் பகுதிக் கச்சேரிக்கு அனுப்ப வேண்டும்.

முதலிக்குளக் குடியேற்றத் திட்டத்தின் கீழ் சுமார் 318 பேர் தெரிவுசெய்யப்படுவர். இவர்கள் மணமானவர்களாக, எஸ். எஸ். ஸி. படித்தவர்களாக இருத்தல் வேண்டும்.

பாவற்குளக் குடியேற்றத்தின் கீழ் சுமார் 100 பேர் தெரிவு செய்யப்படுவர். இவர்கள் திருமலை மாவட்டத்தில் வதியும் முன்னைய கடற்படைத் தொழிலாளர்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கேட்டுப் பாருங்கள்



குயுக்தி

தெ. பரமகுரு, கரையூர்

கே: ஒரு வாலிபன் எப்போது முட்டாள் ஆகிருன்?

ப: தன்னேடு முதன் முதலாகப் பழகும் ஒரு இளம் பெண் தன்னை மனப்பூர்வமாகக் காதலிப்பதாகத் தனக்குள் தானே தீர்த்துக்கொண்டு தத்தளிக்கிருனே. அப்போது அவன் முட்டாளாகாமல் வேறு என்ன ஆகிருன்?

ஃ

க. ஞானமுத்து, மட்டக்களப்பு

கே: இலங்கையின் கல்வி அரசாங்கத்தின் கைக்குப் பூரணமாகப் போய்விட வேண்டுமா அல்லது தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் அதில் பங்கிருக்க வேண்டுமா? இந்தப் பிரச்னையில் தங்கள் அபிப்பிராயம் என்ன குயுக்தியாரே?

ப: நாட்டின் கல்வி இரு சாரார் கையிலும் பங்குபோட்டிருப்பதே நாட்டுக்கும், மக்களுக்கும் நன்மை பயப்பதாகும். அரசாங்கம் கையேற்ருல் கல்வியும் புகைவிரதப் போக்குவரவு, துறைமுகம், பஸ்போக்குவரவு போலத் தோல்விதான் காணும். ஆககபூர்வமான போட்டி வளர்ந்து கல்வித் தராதரம் உயர அரசாங்க பாடசாலைகளுக்கு எதிர்ப் பாடசாலைகளும் அவசியமே.

ஃ

கே. தம்பையா, வெள்ளவத்தை

கே: காதலிலே தோல்வியுற்ற கன்னிகளுக்கும் காளைகளுக்கும் தாங்கள் கூறக்கூடிய புத்திமதியென்ன?

ப: காதல் ஒருவருடைய வாழ்வில் ஒரு முறைதான் பூக்கும் புது மலரல்ல. முதல் காதல் மொட்டாகவே கருகிவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை. உரிய காலத்தில் மரம் துளிர்த்து மீண்டும் பூக்கவே செய்யும். காத்திருக்கலாம்.

ஃ

ஜே. கே பொன்னையா, சாவகச்சேரி

கே: சாவகச்சேரிப் பகுதி கைதடியில் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் பேசிய போது சுதந்திரனில் வருவதெல்லாம் சுத்தப் பொய் என்றும், அதைத் தான் பார்ப்பதில்லையென்றும், பார்த்தால் இரத்த அமுக்கம் தனக்கு ஏற்படுவதுண்டு என்றும் பகிரங்கமாகக் கூறினர். இதுபற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: திரு பொன்னம்பலம் சுத்தப் பொய் பேசிவிட்டார் என்பதுதான் என் அபிப்பிராயமாகும். எப்படியென்று கேட்கிறீர்களா? சுதந்திரனைத் தான் பார்ப்பதிலலையென்று கூறுகிருர். பார்க்காத ஒன்றில் பொய் வருவது இவருக்கு எப்படித் தெரியும்?

ஃ

அனலன், திருமலை

கே: அரசியல் தமிழ் ஒலிபரப்பில் சமசமாஜக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபன ஒலிபரப்பு மிகப் பிரமாதமாயிருந்தது என்று எழுதினீர்களே, 5-2-60ல் மட்டக்களப்பு முன்னைநாள் பிரதிநிதி திரு செ. இராசதுரையின் ஒலிபரப்பைக் கேட்டீர்களா?

ப: கேட்டேன். சமசமாஜக் கட்சியினரான திரு என். பி. தருமலிங்கத்தை அப்படியே ஒரு புறம் தூக்கி வீசிவிட்டார் திரு இராசதுரை. திரு இராசதுரையின் பேச்சு அபாரம், அற்புதம் என்று வர்ணிக்கப்பட வேண்டியது இதை சமசமாஜிஸ்டுகள் பெருந்தன்மையோடு ஒப்புக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்!

ஃ

க. இராணி, மல்லிகைத் தீவு

கே: மூதூர்த் தொகுதியில் போட்டியிடும் திரு துரைநாயகத்தைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன? தாமும் தமிழரசுக் கட்சி அனுதாபிதான் என்று சொல்லிக்கொள்ளுகிருரே?

ப: திரு துரைநாயகம் மிகவும் நல்ல மனிதர். ஆனால் பிறர் தூண்டுதலால் தம் சொந்தப் புத்தியை இழந்து அநாவசியமாகத் தேர்தல் களத்தில் குதித்துவிட்டார்.

தானே நமது வெற்றி தங்கியிருக்கிறது. திரு ஏகாம்பரம் யு. என். பியில் இருந்தபோது நிலையாக நின்ருர். இப்போது தமிழரசுக் கட்சியிலும் நிலையாக நிற்பார் என்ற நம்பிக்கையுண்டு திறமைவாய்ந்தவர் ஆங்கிலத்தில் சிறந்த பேச்சாளர், அனுபவம்வாய்ந்த அரசியல்வாதி. எனவே அவரைக் கட்சி அபேட்சகராக நியமித்ததில் தவறில்லை.

ஃ

சி. வள்ளியம்மை கிரான்

கே: ஒருவருடைய உற்ற சினேகிதத்தை எதன்மூலம் அறியலாம்?

ப: இடுப்பில் இருக்கும் துணி வழுகும்போது நமது கையானது எப்படிச் சரேலென்று அங்கு சென்று ஆடை கழேந்துவிடாமல் பற்றிப் பிடித்து மானத்தைக்

## தமிழருக்கு ஏணி!

('ஏர் முனைக்கு நேர் இங்கு எதுவுமேயில்லை' என்ற மெட்டு)

தாய் மொழிக்கு இன்ன லென்றால் தமிழனே இல்லை
தந்தை செல்வர் வாழ்விலே நீங்குமே தொல்லை

ஈழ நாட்டை ஆளுகின்ற எத்தர்களாலே—நாம்
இன்னலுற்ருேம் மொழியிழந்து சிறுமையினலே—இனம்
வாழவந்த செல்வரது வழிநடந்தாலே—நம்
வறுமை யெல்லாம் நீங்கிடுமே கண்கள் முன்னலே—

சத்தியமே உருவெடுத்த உத்தமஞானி—இவர்
தளர்ந்த உடல் ஈழத்திலே தமிழருக்கேணி—நாம்
எத்தனை நாள் இருப்பதடா இப்படிக் கூனி—இனம்
எழில் பெறவே வேகமுடன் எழுதமிழா நீ!

தோள் புடைத்த வீரமெங்கே துவண்டு போச்சுதா
துவக்குக் கொண்டு உன்னையிங்கே ஆளலாச்சுதா—வெறும்
கால்பிடித்து வாழ்வதிலே காலம் ஓடவா—வழி
காட்டு மெங்கள் செல்வருடன் நீயும் கூடவா-தாய் மொழிக்கு

—வசந்தா

கட்சியின் கொள்கைகளில் மாறுபட்டு அதனல் அவர் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தால் அவர் செயலைப் பாராட்டியிருப்போம். கட்சி தம்மை அபேட்சகராக நியமிக்கவில்லை என்ற காரணத்தால் அவர் கட்சியை இன்று எதிர்க்கின்ருர். இது வடிகட்டிய சுயநலமே தவிரக் கொள்கைப்பற்ருே, கட்சிப் பற்ருே அன்றி இனப் பற்ருே ஆகாது. அவர் கட்டுக்காசையாவது காப்பாற்றிக்கொண்டு திரும்பவும் கட்சியில் வந்து சேர்ந்து கொள்ள வேண்டும் என்று அன்பாக அழைப்போமாக.

ஃ

அ. அன்ரனி ருேச் டி வாஸ் மூதூர்

கே: திரு த. ஏகாம்பரம் முன்பு யு. என். பியில் இருந்தவர் இப்போது தமிழரசுக் கட்சியை நாடி வந்திருக்கிருர். அவரைத் தமிழரசுக் கட்சி ஏற்று ஒரு அபேட்சகராக நியமித்துள்ளது சரியா?

ப: மாற்றுக் கட்சியில் இருந்தவர்கள் மனம்மாறித் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு கட்சியில் சேரத் தாமாகவே முன்வந்ததால் அவர்களை நாம் அகல விரித்த கரங்களோடு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இல்லாவிட்டால் தமிழரசுக் கட்சி எப்படிப் பரந்து விரிந்து [illegible] யடைய முடியும்? [illegible] நம் வசப்படுத்துவதில்

காக்கின்றதோ, அப்படி, நாம் இன்னலுறும்போது யார் விரைந்து வந்து நமக்கு உதவுகிருர்களோ அவர்களே உற்ற சிநேகிதர் ஆவர். இப்படிக் கூறுகிருர் திருவள்ளுவர். இந்த உண்மையை அவசரகாலம் 58ல் சுதந்திரன் காரியாலயம் ஏழு மாதகாலமாக மூடப்பட்டு குயுக்தியார் வேலையில்லாமல் இருந்தபோது கண்டுகொண்டார்.

ஃ

கோ. சுப்பிரமணியம், மட்டக்களப்பு

கே: மட்டக்களப்புப் பகுதியில் நடைபெறும் தேர்தல் கூட்டங்களில் தமிழரசுக்கு எதிரான அபேட்சகர்களை ஆதரித்து பொன்னுத்துரை பி. ஏ என்று ஒருவர் பேசுகிருரே, அவரை உங்களுக்குத் தெரியுமா குயுக்தியாரே?

ப: தெரியாமல் என்ன? முதன்முதலாகச் சுதந்திரனுக்குக் கதைகள் எழுதி, அவை வெட்டித் திருத்திப் பிரசுரமாகி, வளர்ந்தவர் தானே அவர். இப்போது அவர் ஒரு கொம்யுனிஸ்டு. கடந்த வாரந்தான் அவர் பேச்சை முதன்முதலாகக் கேட்க முடிந்தது. நல்ல பேச்சாளர் என்று பாராட்டத் தோன்றியது. ஏனென்ருல் கூடிக் கழுத்தறுக்கும் கொம்யுனிஸ்டு கொள்கைக்கு இணங்க அவர் அழகாகப் [illegible] தையும், யு. என். பி. தாஸரான திரு நல்லையாவையும் எப்படியாவது சேர்ந்து காலைவாரித் தோற்கடித்துவிடுவது என்று திட்டம் போட்டு வெகு சாகசமாகப் பேசி வருகிருர். மயில்வாகனத்தையும் நல்லையாவையும் ஆதரிப்பதுபோல் அவர் பேசும் பேச்சைக் கேட்டால் ஒவ்வொரு கூட்டத்திலும் குறைந்தது 50 ஆதரவாளர்களாவது மயில்வாகனத்தையும் நல்லையாவையும் கைவிட்டுத் தமிழரசுக் கட்சியை ஆதரிப்பார்கள் என்பது திண்ணம். வளர்க அவர் பேச்சுவன்மை. வாழ்க அவர் திருப்பணி!

ஃ

ஆ. தருமலிங்கம், கொழும்பு

கே: ஆலயம் செல்லும் போதும் தம்மை அலங்காரம் செய்துகொண்டு போவது அவசியமா?

ப: மிக மிக அவசியம். "இரக்கப்போகினும் சிறக்கப் போ" என்பது தமிழனுடைய கொள்கை. இரப்பதற்கே சிறப்பாகப் போக வேண்டுமானல் இறைவனைக் காணப் போகையில் அலங்கோலமாகப் போகலாமா?

ஃ

எம். எஸ். பாருக் கல்ஹின்ன

கே: மச்சான் மரிக்காரின் பேச்சையே காணுேமே?

ப: எப்படிப் பேசுவார்? பேச வேண்டிய எல்லாவற்றையும் அவர் ஏழு டெலிபோன்களில் ஏற்கனவே பேசி முடித்துவிட்டாரே.

ஃ

ரா. சோமசுந்தரம், மாஹோ

கே: சேர் பொன்னம்பலம் ராமநாதன், மகாத்மா ஆகியோர் இன்றிருந்தால்?

ப: ஏன் சாகாமல் இருக்கிருேம் இந்த இழிநிலைச் சமுதாயத்தில் என்று கவலைப் பட்டிருப்பார்கள்.

ஃ

எஸ். பசுபதி, காந்தியூர்

கே: வாழ்க்கையில் சந்தோஷகரமான நாட்கள் எத்தனை?

ப: ஒன்றுகூட இல்லை. வாழ்வின் ஒவ்வொரு கணமும் சுகமும் துக்கமும் கலந்த சாம்பார் தான்!

## இரு விழியும் விற்றவர்க்குப் பார்வை ஏது?

[சோமலிங்கம்]

இல்லாத துன்பங்கள் சூழ்ந்து மக்கள்
இடிபட்டு அடிபட்டுச் சாகும் போது
எல்லோரும் எங்கேடா சென்றுவிட்டார்?
ஏன் அவர்கள் அப்போது ஊமையாக
நல்ல பிள்ளை எனப் பெயரை எடுப்பதற்கு
நாட்டு மக்கள் துன்பத்தில் கலக்கவில்லை
சொல்லவில்லை ஒரு சொல்லும் வாய் திறந்து
சொகுசாக வாழ்ந்தார்கள் மக்கள் மாண்டார்.

பெரு வெள்ளம் வந்து மக்கள் வெள்ளம் தன்னை
பெருந் துன்பம் தனில் விட்டுப் போன போதும்
ஒருவார்த்தை அவர் சொல்ல வாய்தான் இல்லை
ஓடி வந்து உறுதி மொழி சொல்லவில்லை
உருமாறி உடை அற்று ஓலமிட்டார்
உறங்குதற்கு வீடு இன்றி ஆடுமாடாய்
திரிகின்ற போது அவர் எங்கோ சென்று
தேர்தலுக்கு வந்துவிட்டார் இன்று இங்கு.

எதை இங்கு தமிழரசு செய்த தென்று
ஏன் இப்போ கேட்கின்ருர் மேடை தன்னில்
அதைக் காண அவருக்குக் கண்தான் ஏது?
அழகுள்ள சித்திரங்கள் என்று சொல்லி
சதைப் பற்றை நீக்கிவிட்டு விழியெடுத்து(த்)
தான் விரும்பும் சித்திரங்கள் வாங்கிவிட்டோர்
எதைக் கொண்டு பார்ப்பார்கள் இந்த நாட்டின்
இரு விழியும் விற்றவர்க்குப் பார்வை ஏது?

அதிர்ஷ்டத்தைச் சோதியுங்கள்
ஆஸ்பத்திரி சுவிப் C.T.C. சுவிப்-காலி ஜிம்கானு 2/- ரூபா சுவிப் இவைகளைப் பெறுவதற்கு தங்கள் விலாசம் எழுதி முத்திரை ஒட்டிய கவருடன் தேவைக்கு போஸ்டல் ஓடர் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.
பூமகள்வாசாஸ்டோர்ஸ்
24, ஜெம்பட்டாத் தெரு
கொழும்பு-13.

அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானல் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

ஸ்பேமடோன் கொம்பவுண்ட்
( Spermatone Compound )

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்
மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25
வி. பி. பி. தனி.
விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

'மோடர்ன் கிலினிக்'
(MODERN CLINIC)
255, காலி ரோட், கொழும்பு-4.
வம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனைக் காட்டிக் கொடுக்காத ஒரே கட்சி தமிழரசுக் கட்சி

## அவனுக்காகப் போராடியது —இது ஒன்றே பெரிய சாதனையல்லவா?

## இணுவில் கூட்டத்தில் பேச்சு

தமிழரசுக் கட்சி சாதித்தது என்ன என்று கேட்பவர்களுக்குஒன்று சொல்ல விரும்புகிறோம். தமிழனைக் காட்டிக்கொடுக்காத கட்சி ஒன்று தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உண்டு என்றால் அது தமிழரசுக் கட்சி ஒன்றுதான்.

தமிழ் பேசும் மக்களுக்காக, அவர்களின் விடுதலைக்காக, தன்மானத்துக்காக, உரிமைகளுக்காக என்றும் போராடி வருகிறது. இது ஒன்றே இமய சாதனையல்லவா?

மேற்கண்டவாறு ஆசிரியர் அம்பலவாணர் கூறினார். உடுவில் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் திரு வி. தர்மலிங்கத்தை ஆதரிக்குமுகமாக இணுவிலில் அணிமையில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் பேசினார்.

இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சி யாழ்ப்பாண அபேட்சகர் திரு எஸ். கதிரவேற்பிள்ளை பின்வருமாறு கூறினார்:

"வாக்குரிமை விலைமதிப்பற்ற பொருள். காசு கொடுத்து சந்தையில் வாங்கக்கூடிய மலிவான சரக்கு அல்ல அது. அதை நாம் மிக கவனமாக உபயோகிக்க வேண்டும். எத்தனை பேர்தான் கேட்டு வந்தாலும் நாம் நன்றாகச் சிந்தித்துத் தக்கவருக்கே அதை அளிக்க வேண்டும்.

"தமிழரின் எதிர்கால நல்வாழ்வுக்கான திட்டங்களை வகுத்துத் தமிழரசுக் கட்சி பணியாற்றி வருகிறது. அக்கட்சி அபேட்சகர்களுக்கு வாக்களிப்பதே பொருத்தம். தமிழ் பேசும் மக்களுக்காக ஒரே குரல் எழுப்பிப் போராட தமிழரசுக் கட்சிக்கு தத்துவம் வழங்க வேண்டியது தமிழ் பேசும் மக்கள் கடமையாகும். அக்கட்சி பல்வேறு தொகுதிகளில் நிறுத்தியிருக்கும் 19 அபேட்சகர்களையும் பிரதிநிதிகளாகத் தெரிந்து அனுப்புவதின்மூலம் தமிழ் பேசும் பொதுமக்கள் தமது கட

(9-ம் பக்கம் பார்க்க)

### தமிழரசுக் கட்சி தேர்தல் ஒலிபரப்பு

தமிழரசுக் கட்சியின் மூன்றாவது தேர்தல் ஒலிபரப்பு 17-2-60ல் நடைபெறவிருக்கிறது.

தமிழ் ஒலிபரப்பு: காலை 7-15 மணிக்கும் அதன் மறு ஒலிபரப்பு இரவு 10-00 மணிக்கும் நடைபெறும்.

ஆங்கில ஒலிபரப்பு: காலை 7-40 மணிக்கும் அதன் மறு ஒலிபரப்பு இரவு 9-00 மணிக்கும் நடைபெறும்.

சிங்கள ஒலிபரப்பு: காலை 7-45 மணிக்கும் அதன் மறு ஒலிபரப்பு இரவு 9-15 மணிக்கும் நடைபெறும்.

### நான்காவது ஒலிபரப்பு

தமிழரசுக் கட்சியின் நான்காவது தேர்தல் ஒலிபரப்பு 29-2-60ல் நடைபெறவிருக்கிறது.

தமிழ்: காலை 6-30 மணிக்கு. மறு ஒலிபரப்பு மாலை 6-45 மணிக்கு.

ஆங்கிலம்: காலை 6-45 மணிக்கு. மறு ஒலிபரப்பு மாலை 7-00 மணிக்கு.

சிங்களம்: காலை 6-15 மணிக்கு. மறுஒலிபரப்பு 7-15 மணிக்கு.

## தமிழினத்தின் இழி நிலைக்கு தலைவர்களே காரணம்

### பட்டம் பதவிக்காக தம் இனத்தை விலைபேசி விற்றார்கள்

### இன்று வாக்கு கேட்டு வருகிறார்கள் விரட்டி விரட்டி அடிக்க வேண்டும்

"இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் இழிநிலை அடையக் காரணகர்த்தராய் இருந்தவர்கள் தமிழ்த் தலைவர்களே. சொந்த நலனுக்காக, பட்டம் பதவிக்காக இனத்தை விலைபேசி விற்றொழிந்தவர்கள் விணர்கள். இன்று மீண்டும் வாக்குப் பிச்சை கேட்டு வீடு வீடாக வருகிறார்கள். 'துரோகிகளே ஓடித் தப்புங்கள்' என்று அவர்களை விரட்டி விரட்டி அடிக்க வேண்டும்" என்று ஆசிரியர் வே. கந்தையா கூறினார்.

ஆசிரியர் கந்தையா அவரங்கால் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் நடந்த கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டத்துக்கு ஆவரங்கால் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணித் தலைவர் திரு க. சின்னத்துரை தலைமைவகித்தார்.

கோப்பாய் தமிழரசுக் கட்சி அபேட்சகர் அட்வகேட் எம். பாலசுந்தரம் இக்கூட்டத்தில் பேசும்போது பின்வருமாறு கூறினார்:

"மாற்றுரை நம்பிக்கெட்ட தமிழினம் இன்னுமின்னும் நம்பிக்கெடப் போகிறதா? கூடாது. நமது பிரதேசத்தை நாம் காப்பாற்றியாக வேண்டும். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து தடுத்து நிறுத்தாமல் விட்டோமானால் நாம் நமது சொந்தப் பிரதேசத்தில் சிறுபான்மையினராகிவிடுவோம். எமது சொந்தப் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பும் உரிமையும் இழந்துவிடுவோம்"!

[illegible] திருஞானசம்பந்தன், அ. இல்லைநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

தலை முடியை சீவுவதல்ல உங்கள் பிரச்னை!
நீங்கள் விரும்புவதுபோல்
தலை முடியைச் சீவுவது எப்படி என்பதுதான்!

நேத்திர லோக
உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

நேத்திரலோக தைலம்

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் நீக்குகிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

டபிள்யு. கே. ஜினதாஸ,
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றோட், புறக்கோட்டை
கொழும்பு

## கொழும்பில் தியாகராஜ உற்சவம்

தியாகராஜ கான சமாஜத்தினரின் ஆதரவில் கர்நாடக சங்கீத மும்மணிகளுள் ஒருவரான ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் உற்சவம் கொழும்பில், வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் இம்மாதம் 12, 13, 14 வெள்ளி சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறவிருக்கிறது. பெரும்பாலான சங்கீத நிகழ்ச்சிகள் இலங்கை வானொலியால் அஞ்சல் செய்யப்படவிருப்பதால் கொழும்பில் உள்ளவர்கள் மட்டுமல்லாமல் நாடெங்கிலுமுள்ள இசைப்பிரியர்களும் இருந்த இடத்தில் இருந்தே உற்சவத்தில் கலந்துகொள்ள முடிகிறது.

12-2-60 வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிகள் மாலை 5 30 தொடக்கம் 11-00 மணி வரை நடைபெறவிருக்கின்றன. இசைப் புலவர் என். சண்முகரத்தினம், திருமதி லலிதா செல்வரத்தினம், தூத்துக்குடி வி. எஸ். சுந்தரம் ஆகியோர் பாடுகிறார்கள். திரு எம் சோமசுந்தரம் புல்லாங்குழல் வாசிக்கிறார்.

13-2-60 சனிக்கிழமை நிகழ்ச்சிகள் மாலை 4-30 தொடக்கம் 11-00 மணி வரை நடைபெறவிருக்கின்றன. திரு டி. எஸ். மணிபாகவதர், திரு எஸ். சத்தியலிங்கம், திருமதிகள் பகவதி ரங்கராஜன் கமலா ஹரிஹர ஐயர் முதலானோர் பாடுகிறார்கள். திரு டி. பி. ஜேசுதாசன் புல்லாங்குழல் வாசிக்கிறார்.

14-2-60 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. காலை நிகழ்ச்சிகளில் வாத்தியக் கோஷ்டியும்தாள வாத்தியக் கச்சேரியும் இடம்பெறுகின்றன. 4-15க்கு மாலை நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன. திரு எஸ். பரம்தில்லைராஜா, செல்வி விஜயலட்சுமி இராஜேந்திரம், திரு எஸ். சோமசுந்தரம் முதலானோர் பாடுகிறார்கள். திரு ஈ சுப்பையா கிளாரினெட் வாசிக்கிறார். திரு எஸ். ராமசாமி ஐயர் புல்லாங்குழல் வாசிக்கிறார். சிங்களக் கலைஞர்களின் வயலின் இசைக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

### கவின் கலை மன்றம்

கவின் கலை மன்றத் தேர்தல்கூட்டம் கடந்த 7-2-60ல் மன்ற அலுவலகத்தில் திரு டி. எஸ். சமாத் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-

தலைவர்: திரு கே. கே சுந்தரராஜா, செயலாளர்: திரு க. லிங்கேசன், பொருளாளர்: திரு வே. இசைக்கிமுத்து துணைச் செயலாளர்-துணைப் பொருளாளர்: திரு க. ஜெகநாதன்.

செயற்குழு உறுப்பினர்கள்: திரு ஜே. பி. ரெபட், திரு டி. எஸ். சமாத், திரு எஸ். ஈ. செல்லையா.

### சோல்பரி . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களும் சம உரிமையோடு வாழ விரும்புகிறார்கள் இல்லையேல் அரசாங்கத்தை எதிர்பார்கள் என்று, சிங்கள அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறி அதை வெகுவாக அதிர்ச்சியடைய வைத்தது தமிழரசுக் கட்சி.




அப்பனே கடவுளே, டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே, உலகம் போற போக்கைப் பார்த்தால் டிங்கிரி டிங்காலே.

இம்முறை உடுப்பிட்டித் தொகுதிக்கு சென்று ஒரு கலக்குக் கலக்கிவிட்டு வருவோம், வாருங்கள். அந்தத் தொகுதியில் போட்டியிடும் தோலர் கந்தையா (மன்னிக்க வேண்டும் தோழர் என்ற வார்த்தை அச்சுப் பிழையால் தோலர் என்று மாறிவிட்டது) அவர்களது நிலை என்னவென்று ஒரு ஆசாமியைப் பிடித்துக் கேட்டேன், இம்முறை திரு கந்தையா தேர்தலுக்கு நிற்கவில்லையே என்று ஆசாமி ஒரே அடியாகச் சாதித்துவிட்டார்.

ஆசாமியை இழுத்துக்கொண்டு பக்கத்துக் கோவிலுக்குப் போய் கற்பூரம் கொளுத்தி சத்தியம் செய்து கொடுத்ததன் பேரில் அவர் ஒருபடியாக விஷயத்தை நம்பிக் கொண்டு, "சில காலத்துக்கு முன்னர் பருத்தித்துறையில் ஒரு அலுவலகம் திறக்கப் போகிறோம். அதில் இருந்து மக்களின் குறை நிறைகளை கேட்டு வெளுத்துக் கட்டிக் காயவிடப் போகிறோம் என்று கொம்யூனிஸ்டுகள் மக்களிடம் பணம் பறித்தார்களே, இப்போ பணத்தையும் காணோம், அலுவலகத்தையும் காணோம். ஆட்களையும் காணோமே" என்று கேட்டார்.

எனவே நான் ஆசாமியைச் சமாதானப்படுத்தி, "நீங்கள் எல்லாம் பெரிய மனிதர். இப்படியெல்லாம் பேசக்கூடாது. அவர் சில காலமாக மேலைத்தேய சிவப்பு நாடுகளில் பிரயாணம் செய்து விட்டுத் திரும்பி வந்திருக்கிறார்" என்று சொன்னேன்.

ஆசாமிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

"அப்படியென்றால் அவர் ருஷ்யாவில போய் தேர்தலுக்கு நிற்கட்டுமே அல்லது சந்திர மண்டலத்துக்குப் போய்க் கேட்கட்டுமே. உடுப்பிட்டியில் அவருக்கு என்ன அலுவல்?" என்று சீறி விழுந்தார்.

நானோ தலை தப்பினால் போதும் என்று ஓட்டமாய் ஓடி உடுவில் தொகுதியை நோக்கி வந்தேன். வந்ததும் வராததுமாக ஒரு பிரகிருதி கைலாகு தந்து உபசரித்து தம்மை எனக்கு அறிமுகம் செய்து கொண்டார். அவர் இன்னொரு தோலர் (இதுவும் அச்சுப் பிழைதான்) ஹன்டி பேரின்பநாயகத்தின் மானவராம். மற்றவற்றை அடுத்த வாரம் காணுங்கள்.

—நாரதர்.

27-1-1860.

"காலத்துக்குக் காலம், சூழ்நிலைக்கேற்றவாறு, தம் கொள்கைகளை மாற்றாது, கடந்த பத்து வருட காலமாக ஒரே கொள்கையோடு தமிழினத்துக்காகப் போராடியது தமிழரசுக் கட்சி" இவ்வாறு கூறிமுடித்தார் திரு. இராசதுரை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோல்பரி அரசியல் திட்டம் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்

## சமஷ்டி அரசமைப்பு உதயமாக வேண்டும் அப்போதுதான் தமிழினத்துக்கு விமோசனம்

### கல்லடி உப்போடை கூட்டத்தில் திரு. இராசதுரை



சோல்பரி ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தை ஒழித்துக் கட்டிவிட்டு அதன் இடத்தில் சமஷ்டி அரசமைப்பை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழ் பேசும் இனத்துக்கு விமோசனம் கிடைக்கும் என்று முன்னாள் மட்டக்களப்பு பிரதிநிதி திரு. செ. இராசதுரை கூறினார்.

மட்டக்களப்பு கல்லடி உப்போடையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் திரு இராசதுரை பேசினார். அவர் மேலும் கூறியதாவது:—

"பாராளுமன்றத்தின் சரித்திரத்தில் முதலில் யு. என். பி. கட்சியினர் ஆட்சி புரிந்தனர். அதை அடுத்து எம். ஈ. பி. கட்சியினர் ஆட்சி புரிந்தனர். இதே காலத்தில், பல்வேறு பிரதம மந்திரிகள் நாட்டை ஆண்டனர்.

#### அரசாங்கம் பயன் இல்லை

"வரப்போகின்ற தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சிபுரியும். யார் பிரதம மந்திரியாக வருவார், என்பது யாருக்கும் தெரியாது. ஆனால், எந்தக் கட்சி பதவிக்கு வந்தாலும், முந்திய அரசியல் கட்சிகளும் பிரதம மந்திரிகளும் எந்த அரசியல் திட்டத்தை அமுல் நடத்தி வந்தார்களோ அதே 'சோல்பரி' அரசியல் திட்டத்தைத்தான் வரப்போகின்ற அரசாங்கமும் பிரதம மந்திரியும் அமுல் நடத்த முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை.

#### அரசியல் திட்டம் மாற வேண்டும்

"எனவே, அரசாங்கம் மாறுவதால் மட்டும் தமிழ் பேசும் இனத்திற்கு ஏதாவது சலுகைகளோ அல்லது விமோசனமோ கிடைக்கப் போவதில்லை. அரசியல் திட்டம் மாற்றப்பட வேண்டும். 'சோல்பரி அரசியல் திட்டம் அமுலில் இருக்குமவரை தமிழ் பேசும் இனத்திற்கு விடுதலை கிடையாது.

"மொழிப்பிரச்னை உட்பட மற்றும் பல இனவாரிப் பிரச்னைகளையும் தீர்க்கக் கூடிய ஒரேயொரு அரசியல் திட்டம், 'சமஷ்டி அரசியல் திட்டம்' தான்.

#### தமிழரசுக் கட்சி இன ஒற்றுமை ஏற்படுத்தியது

"தமிழரசுக் கட்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்து வரும் ஒரு சிலர் தமிழரசுக் கட்சி சாதித்தது என்ன? என்று கேட்கிறார்கள். யாழ்ப்பாணத்துத் தமிழன், மட்டக்களப்புத் தமிழன், கண்டித் தமிழன், கொழும்புத் தமிழன் என்று பிரித்து வைக்கப்பட்ட தமிழினத்தை, ஒன்றுபடுத்தி, இடவேற்றுமையின்றி, தமிழ் பேசும் இனம் என்று ஒன்றுபடுத்தியது தமிழரசுக் கட்சி.

#### அரசாங்கத்தை அதிர வைத்தது

"மொழி உரிமைக்காக, தமிழினத்தின் விடுதலைக்காகத் தமிழ் மக்கள் போராடத் தொடங்கிவிட்டார்கள். மற்ற இனத்தைப் போல,

(4-ம் பக்கம் பார்க்க)

# மலைநாட்டில் தொழிலாளரை சுட்டுத் தள்ளுகிறார்களே!

## ஏன் என்று ஒரு சொல் கேட்கிறார்களா முற்போக்கு வாதிகள், பாட்டாளிகள் நண்பர்கள்?

### தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாப் அஸீஸ்

"மலை நாட்டில் தொழிலாளர்களை ஈவிரக்கமின்றிச் சுட்டுத் தள்ளுகிறார்கள். முற்போக்கு வாதிகள், பாட்டாளி மக்களின நண்பர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் அன்பர்கள் பாராளுமன்றத்தில் வாய் திறந்து ஏன் என்று ஒரு வார்த்தைதானும் கேட்கிறார்களா? மௌனம் சாதிக்கிறார்கள். இவர்களால் தொழிலாளர்களுக்கு என்ன லாபம்?" இவ்வாறு கொழும்பு மத்திய தொகுதியில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிடும் ஜனாப் அஸீஸ் கேட்டார்.

ஜனாப் அஸீஸை ஆதரித்து நடைபெற விருக்கும் கூட்டத் தொடரை இவ்வாரம் முதன் முதலாக கொழும்பு கன்னாரத் தெருவில் தொடக்கி நடத்திய போது அதில் ஜனாப் அஸீஸ் பேசினார். இலங்கை ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். சோமசுந்தரம் தலைமை தாங்கினார்.



ஜனாப் ஏ. அஸீஸ்

ஜனாப் அஸீஸ் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

#### பொலிஸார் செய்த கொடுமை

"மலை நாட்டுத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக இலங்கை ஜனநாயக காங்கிரஸ் கடந்த 20 வருடங்களாகப் போராடி வருகிறது. வாக்குரிமைப் பறிக்கப்பட்டபோது பாராளுமன்ற முன்றலில் சத்தியாக்கிரகம் செய்யப் போன எம்மையெல்லாம் பொலீஸார் கொடுமைப்படுத்தினார்கள். எந்த முற்போக்குவாதிகளாவது தொழிலாளர் தலைவர்களாவது ஆதரவு அளித்தார்களா? [illegible] செய்த கொடுமையை எதிர்த்து விரல் அசைத்தார்களா? கிடையாது.

#### முற்போக்கு திட்டங்களுக்கு ஆதரவு

இந்த நாட்டில் கொம்யூனிஸ்டு கட்சி ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தால் அது முற்போக்கானதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சமசமாஜக் கட்சி அதை ஆதரிக்காது. அதுபோலத்தான் சமசமாஜக் கட்சி கொண்டு வரும் திட்டத்தை கொம்யூனிஸ்டு கட்சி ஆதரிக்காது. நாய் கடி பூனை கடிதான் நடக்கும். இலங்கை ஜனநாயக காங்கிரஸ் நாட்டு நலனிலே, அக்கறை கொண்டது. முற்போக்குத் திட்டத்தை யார் கொண்டுவந்தாலும் அதை ஆதரிக்கும்; ஆதரித்தும்வந்திருக்கிறது. இடதுசாரிகளின் தொழிற் சங்க இயக்கங்களுக்கு ஒத்துழைப்பு தேவைப்பட்ட போதெல்லாம் அதை அளித்தும் வந்திருக்கிறது.

#### யு. என். பி.

யு. என். பி. அரசாங்கம் பதவிக்கு வந்தால் ஸ்திரமான அரசாங்கம் அமைக்கப்படும் என்று டட்லி போன்றோர் பிரசாரம் செய்து வருகிறார்கள். யு என் பிதான் இந்த நாட்டிலே ஸ்திரமற்ற நிலைமை, பரபரப்பான சூழ்நிலை, மக்களிடையே மனப்பிராந்தி எல்லாம் ஏற்படுவதற்கு காரணமாக இருந்திருக்கிறது. இந்த உண்மையையாரும் மறைத்து விட முடியாது.

"சிறுபான்மை மக்களை நசுக்க ஆரம்பித்த அரசாங்கமே யு என். பி. அரசாங்கந்தான். மலை நாட்டுத் தமிழரின் பிரஜா உரிமையைப் பறித்தது. அவர்களுக்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போகச் சதி செய்தது. பொது மக்களைத் துப்பாக்கி கொண்டு சுட்டுத் தள்ளும் பழக்கத்தைத் தொடக்கி வைத்ததே இந்த யு என். பி. அரசாங்கந்தான்.

#### ஜனநாயகம் செத்து விட்டது

சிறுபான்மை மக்களை எப்போது யு என். பி அரசாங்கம் நசுக்கத் தொடங்கியதோ அப்போதே இந்த நாட்டில் ஜனநாயகம் செத்துவிட்டது. சிறுபான்மை மக்களுக்கு உரிமை வழங்காமல் நாட்டில் ஸ்திரமான அரசாங்கத்தை ஏற்படுத்தலாம் என்று சொல்லுவது சுத்தப் பொய். அமைதி நிலவச் செய்யலாம் என்று நம்புவது வீண்"—இவ்வாறு ஜனாப் அஸீஸ் பேசி முடித்தார்.

(13-ம் பக்கம் பார்க்க)

# வாக்காளர் ஜாபிதா தமிழில்தந்தே ஆகவேண்டும்

## கொழும்பு மத்தி அபேட்சகர் வசந்தா அப்பாத்துரை வற்புறுத்து

[சுதந்திரன் நிருபர்]

"கொழும்புவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு எதிர்வரும் பொதுத் தேர்தல் சம்பந்தப்பட்ட மட்டில் பெரும் அநிதி விளைவிக்கப்படுகிறது வாக்காளர் ஜாபிதா தமிழில் இல்லையாம். இதுதான் தமிழ் பேசும் மக்களுக்கு அரசாங்கம் அளிக்கும் மொழி உரிமையா? இதுதான் தமிழின் நியாயமான அளவு உபயோகமா?"—இவ்வாறு கொழும்பு மத்திய தொகுதியில் போட்டியிடும் தமிழப் பெண்மணி திருமதி வசந்தா அப்பாத்துரை மிக ஆத்திரத்தோடு கேட்டார்.

வாக்காளர் ஜாபிதா ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் தயாரித்து விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் தமிழில் மட்டும் இல்லை. ஏன் இல்லை என்ற கேள்வியைத் திருமதி வசந்தா அப்பாத்துரை ரிஜிஸ்டார் ஜெனரலிடம் கேட்டிருக்கிறார்.

காலம் போதாத காரணத்தால்தான் ஜாபிதாக்கள் தமிழில் தயாரிக்கப்படவில்லை என்று தாம் நம்புவதாகவும் சரியான விளக்கம் வேண்டுமானால் தேர்தல் கமிஷனரிடமே கேட்டறிய வேண்டும் என்றும் ரெஜிஸ்டார் ஜெனரல் திருமதி வசந்தா அப்பாத்துரையிடம் கூறியிருப்பதாகத் தெரிகிறது.

எது எப்படி இருந்தபோதிலும் கொள்கை அடிப்படையில் தமக்கு தமிழில் ஜாபிதா தந்தே ஆக வேண்டும் என்று திருமதி வசந்தா அப்பாத்துரை வற்புறுத்தியிருப்பதாக அறிய வருகிறது. ஜாபிதாவை அச்சுப் பதிப்பதற்கு காலம் போதாதென்றால் தமிழில் 'டைப்' செய்தாவது வழங்கியே ஆக வேண்டும் என்று அவர் விடாப்பிடியாகக் கேட்டி[illegible] இல்ல ஜாபிதாவை[illegible] கள ஜாபிதாவையோ அவர் பெற மறுத்துவிட்டார்.

மத்தியஎழுது வினைஞர் பரீட்சை

1960

பரீட்சைத் துணை நூல்கள்

வருடக் கணக்காக அரசாங்க எழுது வினைஞர் பரீட்சைக்கு மாணவரைப் பயிற்றி வெற்றி கண்ட அற்லஸ் ஹோல் தயாரித்துள்ள பரீட்சைத் துணை நூல்கள் உங்களையும் அரசாங்க குமாஸ்தா வாக்கும்.

- தமிழ் விலை ரூ. 5-00
- எண் கணிதம் [ற் கொட்ஸ்] ரூ 5-00
- பொது விவேகம் ரூ. 5-00
- பொது அறிவு ரூ. 5-00
- சரித்திரம் [இலங். உலகம்] ரூ. 5-00
- பூமிசாஸ்திரம் ரூ 5-00 [இலங். உலகம்] ரூ. 5-00
- ஆங்கிலம் ரூ. 5-00
- நவீன வியாசம் (101) ரூ. 5-00

வி. பி. பி. கிடையாது. தபாற்செலவு 35 சதம்.

விபரங்கட்கு:

அற்லஸ் ஹோல்

723, மருதானை றோட், கொழும்பு.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலைநாட்டுத் தமிழரின் முதல்தர விரோதி

# டாக்டர் என். எம். பெரேரா

## பதவிக்கு வந்தால் முதல் வேலையாக நாடு கடத்த நடவடிக்கை எடுப்பாராம்

## தொழிலாளர் தோழர் என்று இவரை இன்னமும் சொல்லிக் கொள்கிருர்களே-விந்தை!

## இன வெறியர் என்ருல் சாலப் பொருந்தும்

மலை நாட்டுத் தமிழ் மக்களின் முதல் தர விரோதி தாம் என்பதை டாக்டர் என். எம். பெரேரா தம்முடைய வாயாலேயே சொல்லிக் காட்டிவிட்டார். தாம் பதவிக்கு வந்தால் இந்தியர்களை நாடுகடத்த நடவடிக்கை எடுப்பாராம். இது அவருடைய முதல் வேலையாக இருக்குமாம். பெலிகல என்ற இடத்தில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் என் எம். பெரேரா இந்த மணியான கருத்தைத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிருர்.

தமிழர் மீது அபிமானம் உள்ளவர் டாக்டர் என். எம். பெரேரா என்று சொல்லித்தான் அவரைச் சுற்றி நிற்கிருர்கள் சில வடமாகாண வாலிபர்கள். தமிழர்களின் முக்கியமான பிரச்னைகளில் எல்லாம் குத்துக்கரணம் அடித்து ஆறி நிற்கும் என். எம். இப்போது மலை நாட்டுத் தமிழர் விஷயமாகவும் தமது உள்ளத்தில் இருந்த அந்தரங்கத்தைத் கக்கிவிட்டார் மலை நாட்டுத் தமிழர்களை-இந்த நாட்டுக்கு முதுகெலும்பு போன்றவர்களை- துரத்தியடிக்காவிட்டால் நாட்டிலே பெரும் பிரச்னையாக இருக்குமாம் அவர்கள் விஷயம்.

### பின் நிற்பாரா?

இன்று மலை நாட்டுத் தமிழர்களைத் துரத்தியடிக்க வேண்டும் என்று விருப்புப் பேசும் டாக்டர் என். எம். இலங்கைத் தமிழர்களையும் இங்கிருந்து அப்புறப்படுத்திவிட்டாலன்றி சிங்களவர்-தமிழர் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது என்று சொல்வதற்குப் பின் நிற்பாரா?

அதுதான் போகட்டும் டாக்டர் என். எம். பெரேராவைத் தொழிற் சங்கத் தலைவர், தொழிலாளர் தோழர் என்றெல்லாம் வர்ணிக்கிருர்கள் சமசமாஜக் கட்சித் தோழர்கள். மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை நாடு கடத்த எண்ணுவது ஒன்றே டாக்டர் பெரேராவின் தலைமைச் சிறப்பையும் தோழமை இலட்சணத்தையும் தெளிவுப் படுத்தப் போதுமானதாக இருக்கிறது.

### வெத்து வேட்டு வேஷதாரிகள்

தொழிலாளர் ஐக்கியம் பற்றி சம சமாஜக் கட்சி தொண்டை கிழியக் கத்துகிறது. நாட்டு ஒற்றுமை பற்றி முழக்குகிறது. தமிழ்-சிங்கள நல்லுறவு பற்றி 'நைசாக' பேசுகிறது. அவையெல்லாம் சத்து, சாரம் அற்ற வெறும் சக்கைப் பேச்சுகள். சமசமாஜிகள் வெத்து வேட்டுகள்; வேஷதாரிகள் என்பது இப்போது புரிகிறதல்லவா!

இன ஒற்றுமையை நாடுபவர்கள் தமிழில் ஒரு சாரரரை நாடுகடத்திவிட்டு சிங்களவர்களுக்கு சாதகமான சூழ் நிலையை உண்டு பண்ணிக் கொடுக்க முயற்சிப் பார்களா? தொழிலாளர் நலனிலே கருத்தாக இருந்து அவர்கள் ஒற்றுமைக்காகப் பாடுபடுபவர்கள் மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களை நாடு கடத்திவிட்டு

கேயாரெஸ்

அந்த இடத்தில் சிங்களத் தொழிலாளர்களை புகுத்தி அவர்களுக்கு மட்டும் வாழ்வளிக்க முனைவார்களா?

### என். எம். அசல் இனவெறியர்

என். எம். இதைச் செய்ய விழைகிருர் என்ருல் அவரை அசல் இனவெறியர் என்று சொல்வதில் என்ன தப்பு? இப்படிச் சொல்லும்போது தமிழராகப் பிறந்தும் இன-உணர்வு சிறிதுமற்றவர்களாக, சூடு சொரணை இழந்தவர்களாக சிங்களத் தலைமையிலுள்ள சமசமாஜப் 'புகழ்' பாடி வடமாகாணத்தில் சுற்றித் திரியும் தோழர்கள் வெகுவாகப் புண்படுவார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆயினும், உண்மையைப் புட்டுக் காட்டி, என் அருமைத் தோழர்களே இப்போது என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டாவாவது அவர்கள் மயக்கம் தெளிந்து சுய உணர்வு பெறலாம் என்பது எமது நம்பிக்கை.

இதோ டாக்டர் என் எம். பெரேரா மலைநாட்டுத் தமிழர்கள் பற்றி வெளியிட்ட கருத்து 8—2—60 டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகையில் வெளிவந்தது. அதை இங்கு அப்படியே தருகிருேம்.

Referring to the problem of Indians in Ceylon, Dr. Perera said there was no possibility for him to hand over Ceylon to the Indians; nor had he any need to do so.

Mr. Dudley Senanayake went round the country saying he would chase out the Indians if he came to power. But it was Mr. Senanayake and others like him who got down the Indians. If Mr. Senanayake's father and uncle had not been able to send the Indians back earlier, how would he be able to do it now?

In 1938, he (Dr. Perera) brought forward a motion in the State Council asking that the doors should be completely closed to Indians as Indian immigration would be an acute problem in the future. But Mr. Dudley Senanayake voted against the motion, stating that he was trying to have the Senanayake estates closed down. His motion was defeated as only five voted for it.

There were eight lakhs of Indians in Ceylon today, said Dr. Perera. No one could send them all, back.

Mr. Dudley Senanayake would not be able to send back even a single Indian by force. He would challenge Mr. Senanayake to do so, if possible. The Indians could be sent back only if the Indian Government agreed to take them in.

If he (Dr. Perera) came to power, the first thing he would do would be to open discussions with the Indian Government to come to an agreement to send back about four lakhs of Indians, while keeping the other four lakhs. In a country where there were 96 lakhs of indigenous people, keeping four lakhs of Indians would not cause any harm.

### இதன் தமிழாக்கம்:

இலங்கையில் உள்ள இந்தியர்கள் பற்றிக் குறிப்பிடுகையில், இலங்கையைத் தம்மால் இந்தியர்களுக்குக் கையளித்துவிட முடியாது என்ருர் டாக்டர் பெரேரா அப்படிச் செய்ய வேண்டிய அவசியமும் இல்லைத் தமக்கு என்ருர் அவர்.

தாம் பதவிக்கு வந்தால் இந்தியர்களை துரத்தியடிப்பேன் என்று திரு டட்லி சேனநாயகா நாடெங்கும் சொல்லிக்கொண்டு திரிந்தார். இவரும் இவரைப் போன்ற ஆட்களுமே இந்தியர்களை இந்த நாட்டுக்கு கொண்டு வந்தார்கள் திரு டட்லி சேனநாயகாவின் அப்பனும் மாமனுமே இந்தியர்களை வெளியேற்ற முடியாது போயிற்று என்ருல் இவரால் எப்படி முடியப் போகிறது இப்போது?

1938 ல் டாக்டர் பெரேரா ஸ்டேட் கவுன்ஸிலில் ஒரு பிரேரணை, அதாவது இந்தியர்கள் இலங்கைக்கு வந்து சேர்வதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்று பிரேரணை, கொண்டு வந்த போது திரு டட்லி சேனநாயகா அதற்கு எதிராக வாக்களித்தார். இந்தியர்கள் இங்கு வந்து குடியேறுவது வருங் காலத்தில் பெரும் பிரச்னையாகிவிடும் என்று கருதித்தான் நான் பிரேரணை கொண்டு வந்தேன் சேனநாயகாவின் தோட்டங்களுக்கு மூடுவிழா வைப்பதற்கு டாக்டர் பெரேரா முயற்சிக்கிருர் என்று சொல்லித்தான் டட்லி சேனநாயகா அந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தார். ஆக ஐந்து பேர் மட்டும் பிரேரணைக்கு சாதகமாக வாக்களித்தனர், அது தோற்றது. இன்று 8 லட்சம் இந்தியர்கள் இலங்கையில் இருக்கிருர்கள் என்றும் அவர்கள் எல்லோரையும் ஒருவராலும் திருப்பி அனுப்ப முடியாது என்றும் சொன்ஞர் டாக்டர் பெரேரா.

(12-ம் பக்கம் பார்க்க)


மொரிஸன் பம்புகள்

14/2





நெருங்கிப் பொருந்திய விவசாயத்திற்குரிய பம்புகள் மண்ணெண்ணெய் பர[illegible]ரமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

**கே. என். அப்துல் காதர் ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,**

312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன்: 2956. தந்தி: MEDAL.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

ராஜா ஸ்டோர்ஸ், 9/B, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.


# தமிழரசு தேர்தல்

## பிரசாரக் கூட்டங்கள்

தமிழரசுக் கட்சித் தேர்தல் பிரசார்ரக் கூட்டங்கள் பின்வரும் இடங்களில் பின்வரும் தேதிகளில் நடைபெறவிருப்பதாகவும் கீழே குறிப்பிடப்படும் பேச்சாளர்கள் அக்கூட்டங்களில் பேச இருப்பதாகவும் யாழ் - பிரதேச தமிழரசுக் கட்சி அலுவலகத்திலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### வட்டுக்கோட்டை

13-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், வி ஏ. கந்தையா, வி. என். நவரத்தினம், எம். பாலசுந்தரம், கே துரைரத்தினம், வி. தர்மலிங்கம், எஸ். கதிரவேற்பிள்ளை, ஏ. அமிர்தலிங்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், செனட்டர் ஜி. நல்லையா.

### ஊர்காவற்றுறை

14-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி செல்வநாயகம், வி. என். நவரத்தினம், எம். பாலசுந்தரம், கே. துரைரத்தினம், எஸ் கதிரவேற்பிள்ளை, ஏ அமிர்தலிங்கம், கே ஜெயக்கொடி, வி. தர்மலிங்கம், வி. ஏ. கந்தையா, செனட்டர் ஜி. நல்லையா, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.

### வவனியா

16-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், கே. துரைரத்தினம், வி. என். நவரத்தினம்.

### கல்முனை, பட்டிருப்பு, மட்டக்களப்பு, கல்குடா.

17-18-19-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், கே. துரைரத்தினம், டாக்டர் ஈ. எம். வி நாகநாதன்;

### மூதூர்

20-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: டாக்டர் ஈ. எம். வி நாகநாதன், திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. கே. துரைரத்தினம்.

### கிளிநொச்சி, கோப்பாய், சாவகச்சேரி.

23-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திரு. செ. இராசதுரை, ஜனுப் மஷூர் மௌலானு, செனட்டர் ஜி. நல்லையா மற்றும் உள்ளூர் சொற்பொழிவாளர்கள்.

### யாழ்ப்பாணம், நல்லூர், உடுப்பிட்டி, பருத்தித்துறை.

24-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திரு. செ. இராசதுரை, ஜனுப் மஷூர் மௌலானு, செனட்டர் ஜி. நல்லையா, மற்றும் உள்ளூர் சொற்பொழிவாளர்கள்.

### உடுவில், வட்டுக்கோட்டை, ஊர்காவற்றுறை.

25-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திரு. செ.

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிலுள்ள சமசமாஜத் தோழர்கள் வெட்கமின்றி கேட்கிறார்கள்:

## அடுத்த பிரதமர் யார்? என். எம்மா, டட்லியா?

### அடிமைத்தனத்தை உறுதிப்படுத்துகிறது கேள்வி தமிழருக்கு உரிமை இல்லை என்பதை உணர்த்துகிறது

### தனிச் சிங்கள நாடு, சிங்கள மொழி, சிங்கள இனம் இதுதான் மாஜிக் கட்சியின் முக்கூட்டு இலட்சியம்

அடுத்த பிரதமர் யார்? என். எம். பெரேராவா, டட்லி சேனநாயகாவா? எடுத்து நீட்டுகிறார்கள் இந்தக் கேள்வியை! வடக்கிலே இந்த ஒலி பலமாகக் கேட்கிறது. யார் எழுப்புகிறார்கள் கேள்வியை? சமசமாஜக் கட்சியில் முன்னமும் ஒட்டிக் கொண்டுள்ள தமிழ்த் தோழர்கள்!

இருவரில் எவர் வந்தாலும் இலங்கைவாழ் தமிழ் பேசும் இனத்தின் சோக வரலாற்றிலே திருப்பம் ஏற்படப்போவதில்லை. துயர் துடைக்கப்படப்போவதில்லை விடுதலை கிடைக்கப்போவதில்லை. அதனால் எவர் வந்தால் நமக்கென்ன என்று தமிழினம் வேண்டா வெறுப்பாக இருந்துவிடுவதற்கும் இல்லை கேள்வி அத்தனை காத்திரமானது. அதில் பொதிந்துள்ள விஷயம் பாரதூரமானது. கேட்பவர்களும் போயும் போயும் தமிழர்களாக இருக்கிறார்கள்!

டாக்டர் என். எம். பெரேரா ஒரு சிங்களவர். டட்லி சேனநாயகாவும் ஒரு சிங்களவரேதான். இந்த இரண்டு சிங்களவர்களில் எந்தச் சிங்களவர் பிரதமராக வரப்போகிறார்? இதுதான் கேள்வியின் உண்மைத் தோற்றம். தமிழ் பேசும் மக்களிடம் இந்தக் கேள்வி கேட்கப்படும்போது இப்படித்தான் இது தொனிக்கிறது:-

#### அடிமை நிலையை உறுதிப்படுத்துகிறது

"தமிழ் பேசும் மக்களே! இந்த நாட்டை ஆளப்பிறந்தவர்கள் சிங்களவர்கள், நீங்கள் என்றென்றைக்கும் ஆளப்பட வேண்டியவர்கள்; அடிமைகளாக இருந்து கைபொத்தி வாய்புதைத்து சேவகம் புரிய வேண்டியவர்கள். யார் உங்களை ஆளவேண்டும் — சொல்லுங்கள்? எந்தச் சிங்களவர்—என். எம். பெரேராவா? டட்லியா?"

தமிழர்களைப் பார்த்துத் தமிழர்களே கேட்கிறார்கள்! அடிமை நிலையை உறுதிப்படுத்தி, ஐயகோ, தமிழர்களைப் பார்த்துத் தமிழர்களே கேட்கிறார்களே!

"ஈழத் தமிழ் நாடே! எட்டப்பன், தொண்டைமான், காக்கைவன்னியன் பட்டியலுக்கு புதல்வர்களை பெற்றுக் குவித்தது போதும்! உள்ளவர்களை நல்லவர்களாக்கு! அவர்கள் நோக்கை மாற்று! போக்கைத் திருத்து. உன் திருப்பணிக்கு அவர்களை ஆக்கு!" என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

#### கேட்க வேண்டிய கேள்வி

சமசமாஜக் கட்சி சிங்களக் கட்சி என்பதைப் பலர் ஒப்புக்கொள்ள மறுக்கிறார்கள். தமிழர்களும் அதில் அங்கத்தவர்களாக இருப்பதைச் சுட்டிக்காட்டி அது ஒரு அகில இலங்கைக் கட்சி என்று தம்பட்டமடிக்கிறார்கள். வட மாகாணத்திலே தேர்தலுக்குத் தமிழர்களை அந்தக் கட்சி நிறுத்தியிருப்பதை எடுத்துக்காட்டி எக்காளமிடுகிறார்கள்.

கட்சிதான் அகில இலங்கைக் கட்சி அதாவது தேசியக் கட்சியாயிற்றே—அதில் தமிழர்களும் இருக்கிறார்களே, அவர்களில் ஒருவர் நாட்டின் பிரதமராக வந்தால் என்ன? தமிழரசு மலையோடு சாங்கேசன்துறையில் மோதுகிறார் திருவாளர் காராளசிங்கம். மலை அசையுமா அல்லது மோதுபவர் மண்டைதான் உடையுமா என்று கேட்டால் காராளசிங்கத்தின் மண்டை அப்படி ஒன்றும் மண்ணாங்கட்டி அல்ல, உடைந்துபோவதற்கு என்று சொல்லிச் சண்டைக்கு வருகிறார்கள் சம

#### சிங்கம்

சமாஜிஸ்டு தோழர்கள். அவர் விஷயத்தில் அவ்வளவு அசட்டு நம்பிக்கை அவர்களுக்கு. அது கூடாது என்று சொல்ல வரவில்லை. அப்படி அவர் மீது நம்பிக்கை கொண்டுள்ள தோழர்கள் தமது கேள்வியை இப்படியும் கேட்கலாமே; அடுத்த பிரதமர் யார்? காராளசிங்கமா? டட்லியா?

#### சமசமாஜக் கட்சியில் தமிழர் சொல் ஏறுது

காராளசிங்கத்தைத்தான் விட்டுவிட்டாலும் மற்றும் சமசமாஜப் பாசறையில் தயாரான பஞ்சபாண்டவர்கள் இருக்கிறார்களே! அவர்களில் ஒருவரைக் குறிப்பிட்டிருக்கலாமே! ஏன் செய்யவில்லை? முடியாது தோழர்களால். ஏதோ சகவாச தோஷத்தால் சமசமாஜக் கட்சியில் ஒட்டிக்கொண்டு தொங்கும் தமிழ்த் தோழர்களின் வால், கட்சியில் ஆடுவதற்கில்லை. சிங்கள ஆதிக்கம்தான் அங்கே தலைவிரித்தாடுகிறது.

#### முக்கூட்டு இலட்சியம்

சிங்கள நாடு, சிங்கள மொழி, சிங்கள இனம்-அடிப்படையில் இந்த முக்கூட்டு இலட்சியத்தை முன்வைத்தே சமசமாஜக் கட்சி இயங்கி வருகிறது. கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேராவுக்கு பிரதமர் பதவியை எப்படியும் பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்பது முக்கூட்டு இலட்சியத்தோடு இடையிட்டு ஒட்டப்பட்டுள்ளது. பிரதமர் பதவி கிடைத்துவிட்டால் அப்புறம் இஷ்டம்போல் எல்லாம் ஆகும் என்ற எண்ணம் அவர்களுக்கு!

#### தோழர்களின் பரிதாப நிலை

நாட்டு ஒற்றுமை, தமிழர்-சிங்களவர் நல்லுறவு, சௌஜன்ய வாழ்வு பற்றியெல்லாம் சமசமாஜக் கட்சி சிங்களத் தலைவர்கள் கொட்டி முழக்குவது மேற்படி காரணத்துக்காகவே தான் என்பது சிலகாலத்துக்கு முன்னர் பலருக்கும் புரியாமல் இருந்தது இப்போது சிலருக்குத்தான் அது புரியவில்லை. அதாவது இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் இரட்சகர்கள் சிங்கள (சமசமாஜத்) தலைவர்கள்தான் என்று [illegible] தனமாக நம்பிக்கொண்டு அந்தக் கட்சி [illegible]

டுக்குள் பக்தி விசுவாசத்தோடு நின்று பாடம் பண்ணிய சுலோகங்களை ஒப்புவிக்கும் தமிழ்த் தோழர்களைத்தான் குறிப்பிடுகிறோம்.

#### மொழிக் கொள்கை

"அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும் ஒரே ஒரு விஷயத்தை. இனத்தைப் பற்றியும் நாட்டைப்பற்றியும் இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்ப்போம் இங்கு மொழியை எடுத்துக்கொள்வோம். சமசமாஜக் கட்சி தமிழருக்கு சமஅந்தஸ்துக்காகப் போராடி வருகிறது என்றும் அதனால் எவ்வளவோ கஷ்டநஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறது என்றும் சில காலத்துக்கு முன்பு பறைசாற்றப்பட்டது. அந்த நிலைமை இன்று உண்டா? இதைத்தான் தமிழ்த் தோழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

#### வடக்கிலே சமஅந்தஸ்து

வடக்கிலே வாடைக் காற்றோடு சமசமாஜிகளின் மொழிக் கொள்கை ஒருவிதமாக வருகிறது. தெற்கிலே தென்றலோடு கலந்து இன்னொருவிதமாக வருகிறது. தேர்தல் விஞ்ஞாபனத்திலே பிறிதொரு விதமாக வருகிறது. அதாவது அவர்களுடைய மொழிக் கொள்கை குழறுபடியாகிவிட்டது. என். எம் பெரேராவின் பதவி மோகம், இன அபிமானம் இப்போது உண்மையைக் கக்க அவரை வைத்துவிட்டன. சமசமாஜக் கட்சி மேலிடத்தாரின் சிங்கள வகுப்புவாதம் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கிவிட்டது. மூடி மறைத்து மழுப்பிவந்தகாலம் கடந்துவிட்டது.

வடக்கிலே தமிழ் பேசும் மக்கள் மத்தியில் தமது மொழிக் கொள்கை தமிழுக்கு சமஅந்தஸ்து வேண்டும் என்பதுதான் அதாவது Parity of Status என்று இன்னமும் சொல்லி வருகிறார்கள்.

#### தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாழ்ந்த அந்தஸ்து

ஆனால் அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலோ அவர்கள் அப்படிச் சொல்லவில்லை. பின்னர் எப்படிச் சொல்கிறார்கள்?—

"சிங்களம் சட்டமூலம் ஆட்சி மொழியாக்கப்பட்டுவிட்டது. தமிழையும் ஆட்சி மொழியாக்க வசதி அளிக்க வேண்டும்." எந்தக் கட்டுப்பாட்டுக்கு அமைய அப்படிச் செய்ய வேண்டும்? அங்கேதான் இருக்கிறது மர்மம். அதாவது "பெரும்பான்மை மக்களின் மொழியான சிங்கள மொழிக்கு உரித்தான ஸ்தானம் பாதுகாக்கப்படும் வகையில்தான் தமிழையும் ஆட்சி மொழியாக்க வசதி செய்து அதன்மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு மொழி உரிமை வழங்க வேண்டும்" என்கிறார்கள்.

சிங்கள மொழிக்கு அதன் உரிமை இது என்று சொல் [illegible] ஆட்சி மொழியாக்கி அர [illegible] அந்த நிலை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சமஷ்டி ஆட்சிதான் சிறந்த பரிகாரம்

இலங்கையில் தோன்றியுள்ள இனவாரிப் பிரச்னைகளைத் தீர்த்து நாட்டில் நிரந்தரமான ஒற்றுமையையும் நல்லுறவையும் ஏற்படுத்த சமஷ்டி ஆட்சி முறைதான் தேவை என்கிறார் வண. பிதா தனிநாயக அடிகளார்.

வண. பிதா தனிநாயக அடிகளார் மதத்துறை, மொழித்துறை, கலாசாரத்துறை, பத்திரிகைத் துறை முதலானவற்றில் எல்லாம் தனக்கெனத் தனிப்பிடம் தேடிக் கொண்ட தமிழறிஞராவர்; தமிழ் பேசும் மக்கள் அனைவரினதும் மதிப்புக்கு உரியவர். இலங்கை பல்கலைக் கழக விரிவுரையாளர். உலக நாடுகள் பலவற்றிற்கும் சென்று ஆங்காங்கு நடைபெறும் அரசியல் முறைகளை உன்னிப்பாகப் பார்த்து அவற்றின் பலாபலன்களை நேரில் தெரிந்து கொண்டவர்.



அவர் சொல்கிறார்:—

"இலங்கைக்கு ஏற்றது சமஷ்டி ஆட்சி முறைதான். சுவிட்சர்லாந்தில் உள்ளது போன்ற ஒரு சமஷ்டி ஆட்சி முறை ஏற்படுத்துவதே சாலச் சிறந்தது.

"தமிழ் பேசும் மக்களை இரண்டாந் தரப் பிரஜைகள் என்று கருதக்கூடாது. ஸ்திரமான ஐக்கியத்தைக் கட்டிக்காக்க முடியும் என்றால் அதற்காகப் பாடுபட வேண்டும்.

"அது சாத்தியமில்லாத பட்சத்தில் சுவிட்சர்லாந்தின் அடிப்படையில் இலங்கையில் சமஷ்டி ஆட்சியை அமைப்பதுதான் பிரச்னையைத் தீர்ப்பதற்கான சிறந்த பரிகாரமாயிருக்க முடியும்"

மையைத்தான் சமசமாஜக் கட்சியினர் இப்போது தேர்தல் விஞ்ஞாபனமூலம் உறுதிப்படுத்துகிறார்கள். தமிழுக்கு சமஅந்தஸ்து என்றது இங்கே இரண்டாம் படிக்கு தாழ்ந்துவிடுகிறது. சிங்களத்துக்கு உரித்தான ஒரு ஸ்தானம் இருக்குமானால், அது பாதுகாக்கப்பட வேண்டுமானால் அந்த ஸ்தானத்தில் தமிழை எப்படி வைப்பது? அப்படி வைத்தால்தான் சமத்துவம் நிலவும்; தமிழுக்கு சம அந்தஸ்து கொடுத்ததாக முடியும். இல்லையேல் தமிழ் தாழ்ந்தபடியிலேயே இருக்கும். இது எவருக்கும் புரிக்கூடியது. கலக்கியடிக்கிறார்கள்: குழப்பித் திரிகிறார்கள் சமசமாஜத் தோழர்கள்.

#### தெற்கில் புதுப் பல்லவி

வடக்கிலே சொல்லும் சம அந்தஸ்தும் தேர்தல் விஞ்ஞாபனத்திலே சொல்லும் தாழ்ந்த அந்தஸ்தும் போகட்டும்—வாருங்கள் தெற்கே. சிங்கள மக்கள் மத்தியிலே சமசமாஜத் தோழர்கள் என்ன சொல்லுகிறார்கள்? காவத்தையில், பக்கலையில், எட்டியாந்தோட்டையில், கேகாலையில் புதுப் பல்லவி ஒன்று பாடப்படுகிறது.

காவத்தைக் கூட்டத்தில் டாக்டர் என். எம். பெரேரா தமது மொழிக் கொள்கை பற்றி திருவாய்மலர்ந்தருளியது என்ன? ஆராய்ந்து பார்த்தால் காலஞ்சென்ற

(11ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே!




ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி

மாதத் தவணைக் கட்டணங்களில் பெறக் கொள்ளலாம்.

இலங்கை பூராவும் விற்பனையாகிறது.

உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்முசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன் : 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்சிலால் நடாத்தப்படுவது

# சுதந்திரன்

SUTANTHIRAN

1960 பெப்ரவரி மாதம் 14-ந் தேதி

194எ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12
தொலை பேசி எண்: 3411. த பெ 1183


## கூட்டுச் சாம்பார் பிரதிநிதித்துவம் கூடாது

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு இன்றுள்ள அரசியல், மொழி, பொருளாதார, பிரதேச நெருக்கடிகள் காரணமாக எதிர்வரும் மார்ச் மாதம் 19-ந் தேதி நி[ல]ழவிருக்கும் பொதுத் தேர்தல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்ருகும்.

பிரஸ்தாப பொதுத் தேர்தலில் தமிழ் பேசும் பொது மக்கள் தேர்ந்தனுப்பும் பிரதிநிதிகள், வழக்கப்பிரகாரம் பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்குள்ள கடமைகளை மட்டும் செய்பவர்களாக இருந்தால் போதாது. அன்றியும், பொது மக்களின் சாதாரண நலவுரிமைகளை மட்டும் பெற்றுத்தரும் பிரதிநிதிகளாக—ஏஜண்டுகளாக—செயலாற்றினாலும் போதாது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அத்தனைபேரும் சுதந்திர வீரர்களாக சுயநலமற்ற தீரர்களாகத் திகழ்ந்து, மிகப் பிரதானமாக இரண்டு முக்கிய காரியங்களைச் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

ஒன்று: சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, சிங்கள மொழித் திணிப்பு, சிங்களக் குடியேற்றம் போன்றவற்றை ஒற்றுமையாகவும், கட்டுக்கோப்பாகவும் அணிவகுத்து, அரணமைத்து எதிர்த்து நின்று, தடுத்து நிறுத்தக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

இரண்டு: தமிழ் பேசும் மக்கள் இன்றுவரை இழந்துவிட்ட நியாயப் பூர்வமான அரசுரிமைகளையும் நிலவுடைமைகளையும் மீட்டுத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் நிரந்தரமான ஒரு இடத்தையும், ஆட்சியதிகாரத்தையும் நிலைநாட்டும் வண்ணம் ஒருவர்க்கொருவர் தோளோடு தோள் நின்று உறுதி தளராது இறுதிவரை போராடி வெற்றியீட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

நாம் தேர்ந்தனுப்பும் பிரதிநிதிகள் ஸ்திரமாகநின்று மேற் கூறிய இரண்டு மகத்தான சாதனைகளையும் நிறைவேற்றி வைக்க வேண்டுமானுல் அவர்கள் ஒரே கட்சியில் உள்ளவர்களாகவும், ஒரே கொள்கையுடையவர்களாகவும், ஒரே தலைவரின் கீழ் ஒன்றுபட்டு இயங்கக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது.

இனந்தெரியாதவர்களையும், இலட்சியமற்றவர்களையும், உதிரிகளையும், உதவாக்கரைகளையும் ஒத்துழைப்புப் பித்தர்களையும், காட்டிக் கொடுக்கும் [க]யவர்களையும், மாறுபட்ட வேறுபட்ட கட்சிகளில் உள்ளவர்களையும் திரட்டி ஒரு கூட்டுச் சாம்பாராக நாம் பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்தால் அது பலவீனத்தைத் தருமே தவிர, பலத்தையும் பலனையும் தராது.

இதையேன் சொல்ல வந்தோம் என்ருல், சில சமயம் தமிழ் பேசும் மக்களில் ஒரு சாரார் தவருக நினைக்கிருர்கள்—சிந்திக்கிருர்கள். அதாவது, எல்லாக் கட்சிகளிலுமிருந்து, எல்லா அபேட்சகர்களிலுமிருந்து வஞ்சகம் இல்லாமல் சிற்சிலரைத் தேர்ந்தனுப்பி வைப்போமே, அப்போது எல்லாக் கட்சிகளிலும் சேர்ந்த எல்லா வகையான பிரதிநிதிகளும் பாராளுமன்றத்தில் இருப்பார்கள் அல்லவா? அப்படி எல்லா வகையானவரும் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகளாக இருப்பது தமிழ் மக்களுக்குப் பெருமையும், வலிமையும் ஆகுமே!—அறியாமையினுலும், அரசியல் ஞானம் இல்லாமையினுலும் ஒரு சாரார் தப்பாகவும், தவருகவும் இப்படி அபிப்பிராயப்படுகிருர்கள்.

ஏற்கனவே நாம் எடுத்துக் கூறிய இரண்டு முக்கியகாரியங்களுள் முதல் காரியத்தைச் சாதிப்பது, அதாவது சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு, சிங்கள மொழித் திணிப்பு, சிங்களக் குடியேற்றம் போன்றவற்றைத் தடுத்து நிறுத்துவது, தனிப்பட்ட உதிரிப் பிரதிநிதிகளாலோ அன்றிப் பல்வேறு திசைகளில் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கும் பல்வேறு கட்சிப் பிரதிநிதிகளாலோ ஆகக் கூடியதல்ல.

இது விஷயத்தில் தமிழ் பிரதேசத்திலிருந்து செல்லும் அத்தனை பிரதிநிதிகளும் ஏகோபித்து ஒரு சங்கிலித் தொடரைப்போல்—ஒரு அணைக்கட்டைப் போல்—ஒரு கட்டை வேலியைப்போல்—கட்டுக் கோப்பாக அமைந்து நின்று தடைபோட வேண்டியது அவசியம்.

சங்கிலித் தொடரில் ஒரு கணு பலவீனமுற்றிருந்தால், சிமெந்து அணைக்கட்டில் ஓரிடத்தில் களி மண்ணைக் குழைத்துப் போட்டிருந்தால் என்ன நடக்கும்?

தமிழ்ப் பிரதேசத்துக்குள், தமிழ் மக்களின் உரிமை வட்டத்துக்குள் அத்துமீறிப் பிரவேசிக்கும் சிங்களக் காட்டெருமையைத் தடுத்து நிறுத்த பத்தொன்பது கருங்காலிக் கட்டைகளைக் கொண்டு ஒரு கெட்டியான வேலியடைக்கத் திட்டமிடப்படுகிறது. இரண்டொரு இடங்களில் கருங்காலிக் கட்டைகளுக்குப் பதிலாக நாணற் புல் தண்டுகளை நாட்டி வைத்தால் வேலி பலமும் பாதுகாப்பும் வாய்ந்ததாகுமா? கருங்காலிக் கட்டைகள் தலை நிமிர்ந்து நிற்க, நாணற் புல் தண்டுகளைச் சவட்டி முறித்து வேலியில் கண்டாயம் அமைத்துக் கொண்டு காட்டெருமை உள்ளே புகுந்து விடாதா?

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியைச் சார்ந்த பத்தொன்பது பேரையும் மொத்தமாக ஏன் தேர்ந்தனுப்ப வேண்டும் என்பதற்குக் காரணம் கூறுகையில் இந்த அழகான வேலி உதாரணத்தைக் கையாண்டிருக்கிருர் தமிழரசுக் கட்சியின் பருத்தித்துறை அபேட்சகர் திரு. கே. துரைரத்தினம் திரு. துரைரத்தினம் சுட்டிக் காட்டியுள்ள இந்தப் பேருண்மை தமிழ்ப் பேசும் மக்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிய வேண்டும்.

அடுத்த படியாக, இரண்டாவது காரியத்துக்கு வருவோம். தமிழ்ப் பேசும் மக்கள் இன்றுவரை இழந்துவிட்ட நியாயப் பூர்வமான உரிமைகளுக்காகப் போராட வேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்தை நடத்துவதற்கும் ஒருமித்த கருத்தும் ஒன்றுபட்ட இலட்சியமும் கொண்ட வீரர்கள் வேண்டும். ஒரேகட்சியில் போட்டியிடும் அபேட்சகர்களைத் தேர்ந்தால்தான் இது சாத்தியமாகும். உதிரிகளை ஒதுக்கிவிட்டுப் பார்க்கும்போது தமிழ்ப் பிரதேசத்தில் போட்டியிடும் முக்கிய கட்சிகளான சமசமாஜக் கட்சி, கொம்யுனிஸ்டு கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சி ஆகியன தமிழ்ப் பிரதேசம் அனைத்திலும் போட்டியிடவில்லை. வடமாகாணத்தோடேயே அவை நின்று விட்டன. கிழக்கு மாகாணத்தை அவை எட்டியும் பார்க்கவில்லை. இந்த நிலையில் அந்தக் கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்களைத் தெரிவது பயனற்றதாகிறது. எனவே தமிழ் பேசும் மக்களுககு எஞ்சியுள்ள ஒரே கட்சி 19 சொந்த அபேட்சகர்களையும் இதுவரை 2 ஆதரவாளர்களையும் நிறுத்தியிருக்கும் கட்சி—தமிழரசுக் கட்சிதான். இக்கட்சியின அபேட்சகர்களைத் தேர்ந்தனுப்புவதன் மூலமே ஒரே கட்சியைக் கொண்ட அதிகப்படியான பிரதிநிதிகளை அனுப்பும் வாய்ப்பும் வசதியும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு கிடைக்க முடியும்.

மேலும் இன்னெரு முக்கிய விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். ஏனைய கட்சிகளைவிட தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிக உயர்ந்த ஒரு இலட்சியத்துக்காகப் போராடுகிறது. ஏனைய கட்சிகள் ஒற்றையாட்சியின் கீழ் சிங்கள அரசாங்கத்திடம் தமிழ்ப் பேசும் மக்களுக்குச் சலுகை வாங்கிக் கொடுத்து, தமிழினத்தைக் கையேந்தி வாழும் ஓர் இனமாகவே சதாகாலமும் வைத்திருக்க விரும்புகின்றன.

தமிழரசுக் கட்சியோ தமிழ் மக்களுக்குச் சுதந்திர சுயாட்சிப் பிரதேசம் ஒன்றை இணைப்பரசாட்சியின் கீழ்ப் பெற்றுக் கொடுக்க விழைகின்றது.

தமிழ்ப்பேசும் மக்கள், ஒரு ஸ்தானம் கூடப் பாக்கியில்லாமல், தமிழ்ப் பிரதேசத்திலுள்ள அத்தனை தொகுதிகளுக்கும் தமிழரசுப் பிரதிநிதிகளையே ஒருமுகமாக தேர்ந்தனுப்புவார்களானுல் சமஷ்டி அரசமைப்பு வேணடும் என்ற தமிழ்ப் பேசும் மக்களின் கோரிக்கைக்கு ஒருசர்வஜன வாக்கெடுப்பு நடத்தியது போலாகும்.

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் சமஷ்டி ஆட்சியமைப்பை ஏகோபித்து வேண்டி நிற்கிருர்கள் என்று அது பொருள்படும். அப்படியான ஒரு நிலைமையை எதிர்வரும் பொதுத் தேர்தல் ஏற்படுத்த முடியுமானுல் உலகத்தின் செவிகளில் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் கேட்பதாகும். தமிழ் மக்களின் அரசியல் ஆதர்ஸம் என்ன என்பது அண்டை நாடுகளின் கண்களில் படுவதாகும்.

தமிழ் பேசும் மக்கள் எழுச்சி பெற்று ஏகோபித்த ஒரு அபிலாஷையை வெளியிடும்போது எந்த அரசாங்கமும் எதிர்த்து நின்று அதை மறுக்க முடியாது. பணிந்து வரத்தான் வேண்டும்; இணங்கித்தான் ஆக வேண்டும்.

ஆசைவார்த்தைகளும், பசப்பு மொழிகளும், அடக்குமுறைகளும் பயனற்றுப் போகுமொரு நிலையை உருவாக்கி, நமது உரிமையை மீட்க வேண்டும் என்ற நாட்டம் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இருக்குமானுல் அவர்கள் செய்யக் கூடிய ஒரே காரியம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அத்தனை பேரையும் தமது பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுப்பதேயாகும்.

# 'சமஷ்டி அரசமைப்பே தமிழர்களின் நிலையான இலட்சியம்'

## 12 வருடங்களுக்கு முன்னர் இப்படிப் பகிரங்கமாக கூறினுர் பொன்னம்பலம்

## இன்று கரணம் அடிக்கிருர்: இவரை எப்படி நம்புவது?

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வெளியிட்டுள்ள "கொள்கைகளும் திட்டங்களும்" என்ற பிரசுரத்தில் "எமது காங்கிரஸின் இலட்சியம் அன்றுபோலவே இன்றும் உள்ளது" என்று கூறிவிட்டு சமஷ்டி அரசியல் இலங்கைக்கு கூடாதென்றும், தமிழருக்குக் கேடானதென்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

சமஷ்டி அரசியல் இலங்கைக்கு கூடாது தமிழருக்கு கேடானது என்பதெல்லாம் தமிழ் காங்கிரஸும் அதன் தனிப் பெருந் தலைவரான திரு ஜீ ஜீ. பொன்னம்பலமும் இன்று கொண்டிருக்கும் புதுக் கொள்கையாக இருக்கலாம். ஆனுல் அன்று தமிழர்களின்—தமிழ்க் காங்கிரஸின்—நிலையான கொள்கை வேருக இருந்தது. இந்த உண்மையை திரு பொன்னம்பலம் இன்று மறந்துவிட்டார். அல்லது வேண்டுமென்றே மறந்துவிட்டது போல் நடிக்கிருர் என்று தோன்றுகிறது.

1947ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், தமிழ் காங்கிரஸ் பிரதிநிதிகள் எழுவர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அந்த ஏழு பேருக்கும் தமிழிலங்கையின் நாறு பகுதிகளிலும் அமோகமான வரவேற்புகள் அளிக்கப்பட்டன.

1947-ம் ஆண்டு டிஸம்பர் மாதம் நடுப்பகுதியில் அவர்களுக்கு கொழும்பில் ஒரு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது. கொழும்பு செண்ட் பீட்டர்ஸ் கல்லூரியில் நடைபெற்ற அந்த வரவேற்புக்கு, கொழும்பு மாநகர்

**சுதந்திரன் அரசியல் விமர்சகர்**

அதற்கு முன்பு கண்டிராத அளவு பெருந்தொகையினராக தமிழ்ப் பேசும் மக்கள் விஜயம் செய்தார்கள். அந்த வரவேற்புக் கூட்டத்திற்கு பேராசிரியர் எப். எச். வி. குலசேகரம் தலைமை தாங்கினுர்.

அந்தக் கூட்டத்திலே திரு பொன்னம்பலம் பேசுகையில் "ஒரு சமஷ்டி அரசமைப்பின் கீழ் சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பதுதான் தமிழர்களுடைய நிலையானஇலட்சியம்" என்று அவரே கூறினுர்.

திரு பொன்னம்பலம் அன்று திரு செல்வநாயகத்தின் சமஷ்டித் தத்துவத்தை ஆதரித்து வந்தது மட்டுமல்ல, "சமஷ்டி ஒன்றுதான் தமிழர்களின் நிலையான இலட்சியம்" என்று தமது திருவாயாலும் சொல்லவே செய்தார்!

பாவம், நிலையான இலட்சியம் எது என்று சொன்னவர் பின்னர் தாமே நிலையற்ற இலட்சியவாதியாகி, இப்போது சமஷ்டி அரசியல் இலங்கைக்குக் கூடாதென்றும் தமிழருக்கு கேடானதென்றும் உளறுகிருர். இந்த உளறலில், 'தமிழ்க் காங்கிரஸ் அன்றும் இன்றும் நிலையான இலட்சியத்தோடு உறுதியாக நிற்கிறது' என்று ஜம்பமடிக்கிருர்!

அன்று திரு பொன்னம்பலம் பேசிய பேச்சு அப்போது கொழும்பில் இருந்து வெளியான "கொழும்பு சிற்றி நியூஸ்" (The Colombo City News) என்ற வாரம் இரு முறைப் பத்திரிகையில் விரிவாக-முன்பக்க முதல் செய்தியாகப்-பிரசுரிக்கப்பட்டது.

1947-ல் டிஸம்பர் மாதம் 17-ந் தேதி வெளியான "The Colombo City News," என்ற பத்திரிகையில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:

"Tamil leaders prepare for partition-Co-operation with the Sinhalese in a federal constitution is the irrevocable Tamil goal declares Mr. Ponnampalam."

"தமிழ்த் தலைவர்கள் பிரிவினைக்குத் தயாராகிருர்கள்—ஒரு சமஷ்டி அரசமைப்பின் கீழ் சிங்கள மக்களுடன் ஒத்துழைப்பதுதான் தமிழர்களுடைய நிலையான இலட்சியம் என்று திரு பொன்னம்பலம் கூறினுர்" என்பதே மேற்படி ஆங்கில வாசகத்தின் தமிழாக்கம் ஆகும்.

மற்ருெரு வாதமும் வேடிக்கையானது:

"எமக்குப் பொதுவான தாய் நாட்டின் ஒன்பது மாகாணங்களிலும் சிங்களவரோடு தமிழர் சம அந்தஸ்துடன் உரிமைகளனைத்தையும் சமமாகப் பெற்று வாழ்வதேயல்லாமல், தமக்குரியது இரு மாகாணங்கள் தான் எனக் கொண்டு அவற்றில் அடங்கி ஒடுங்கிக் கிடக்கக்கூடாதென்பதே."

இப்படியும் கூறப்பட்டிருக்கிறது. இந்தக் கூற்று ஒன்றில் அரசியல் அரிச்சுவடிதானும் அறியாத ஒரு மூட்டாளின் கூற்ருக இருக்க வேண்டும்; அல்லது வேண்டுமென்றே தமிழ் மக்களுக்கு சமஷ்டி யென்ருல் ஒரு கால் விலங்கு என்ற தவருன விளக்கத்தைக் கொடுத்து அவர்களைப் பயமுறுத்தத் திட்டமிட்டுப் புகுத்திய விஷமப் பிரசார தந்திரமாயிருக்க வேண்டும்.

இலங்கையில் சமஷ்டி அரசமைப்பு ஏற்பட்டால் தமிழ் பேசும் மக்கள் வடக்கு

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சித் தலைவர் கரணமடித்த பின்பும்

## ஒட்டி நிற்கும் தமிழர் ஒற்றுமை ஓலமிடுகிறார்

### மாஜிக் கட்சி ஒலிபரப்பில் அப்பட்டமான பொய்

"கெட்டுது போ! கட்சித் தலைவர் கரணமடித்த பின்னரும் ஒட்டி நிற்கும் தமிழர் இப்படி ஓலமிடுகிறாரே—அப்பட்டமான பொய்களை அடுக்கடுக்காக அவிழ்த்து விடுகிறாரே!!" என்று வானொலிப் பெட்டியருகில் நின்ற அன்பர் ஒருவர் சலிப்போடு கூறியது களீர் என்று காதில்பட்டது.

நடந்தது இதுதான்: சமசமாஜக்கட்சித் தோழர் என். பி. தருமலிங்கம் மேற்படி கட்சியின் தேர்தல் பேச்சை வானொலியில் முழக்கினார். இதோடு, முந்திய அவருடைய பேச்சுக்கு இருந்த மவுசும் அடியோடு போயிற்று. ஏன்? அழுத்தி அழுத்தி அவர் கூறியவையெல்லாம் பொய்யாகப் பழங்கதையாகவே இருந்தன.

#### கொள்கை மாற்றம் இல்லையாம்

15 நிமிஷங்களை விழுங்கி அவர் வெளியிட்ட கருத்து எங்கெல்லாமோ சுற்றி வளைத்து கடைசியில் வந்து நின்றது சிறுபான்மை மக்கள் விஷயத்தில்தான். சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகள் சமசமாஜக் கட்சி பதவிக்கு வந்தால் பாதுகாக்கப்படும் என்று அவர் உறுதி கூறினார். இன ஒற்றுமையை ஏற்படுத்தவும் கட்சி பாடுபடும் என்றார். எல்லாவற்றிற்கும் மேலாக தமது சமசமாஜக் கட்சியின் கொள்கையில் மாற்றம் இல்லை என்று அவர் அழுத்திக் கூறினார்.

#### 'காதுகுத்த'ப் பார்த்தார்

அந்தக் கணமே அண்டப் புளுகு. ஏமாற்றுவித்தை இதெல்லாம் என்று பேச்சைக் கேட்டோர் தெரிந்து கொண்டனர். இரண்டொரு தினங்களுக்கு முன்னர் தென்னிலங்கையில் டாக்டர் என். எம். பெரேரா மொழிக் கொள்கையில் பல்டி அடித்ததைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்த தமிழ்ப் பொது மக்களுக்கு தோழர் தர்மலிங்கம் வானொலி மூலம் தமது கட்சியின் 'கொள்கை வைரம்' கூறிக் 'காதுகுத்த'ப் புகுந்தது துணிகர முயற்சி தான்!

#### உளறல்

தமிழ்ப் பொது மக்களை அத்தனை முட்டாள்கள் என்று தப்புக் கணக்குப் போடும் ஒரு தற்குறியைத் தவிர வேறு யார் இப்படி முழுப் பூசணிக்காயை இலைச் சோற்றில் மறைக்க முனைவார்கள்? எத்தனை நெஞ்சழுத்தம் அவருக்கு! இன்னமும் சொல்லுகிறார் கொள்கை மாற்றம் இல்லையாம். சம அந்தஸ்துக்கு சமாதி கட்டிவிட்டு நியாயமான அளவு தமிழின் உபயோகத்துக்கு தாவிய பின்னரும் தோழர் பழைய நிலையிலேயே நின்று உளறுகிறார்.

தமிழ் பேசும் மக்களின் விழியனைய மொழி விஷயத்தில் அவர்களை நடுவழியில் விட்டு விட்டு நழுவியவர்கள் இனி சிறுபான்மை மக்களின் அரசியல் உரிமைகளுக்காகப் பாடுபடுவார்களாம். அந்த இலட்சணமுந்தான் தெரிந்துவிட்டதே.

#### யோக்கியதை அற்றவர்கள்

சமசமாஜக் கட்சி பதவிக்கு வந்தால் அதன் முதல் வேலை 4 லட்சம் தோட்டத் தமிழ் தொழிலாளர்களை நாடுகடத்துவதுதான் என்று டாக்டர் என். எம். பெரேரா தெட்டத் தெளிவாகச் சொல்லிவிட்டார். தோட்டத் தமிழ்த் தொழிலாளர்கள் சிறுபான்மையினர் இல்லையா? அவர்களை நாடு கடத்தி, அத்தோடு 'காடாத்து' வேறு நடத்திக் களிக்க இருக்கும் சமசமாஜக் கட்சிக்கு சிறுபான்மையோர் உரிமைகள் பற்றிப் பேச என்ன யோக்கியதை இருக்கிறது? திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களால் தமிழ் பேசும் மக்கள் சொந்த இடத்திலேயே சிறுபான்மையினராக்கப்பட்டு அதன்மூலம் அரசியல் அநாதைகளாக்கப்படும் அக்கிரமத்தை ஆதரிக்கும் சமசமாஜிகள் சிறுபான்மையோர் உரிமையைத் தாம் பாதுகாப்போம் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

#### ஆசாமிகளுக்குப் புரியவில்லை

இது மட்டுமல்ல, இன ஒற்றுமைக்கும் சமசமாஜக் கட்சியிடம் திட்டம் உண்டு என்று கொட்டி முழக்கினார் தோழர் தர்மலிங்கம். வெறும் வெத்து வேட்டு. கட்சித் தலைமைப் பீடத்தில் உள்ள சிங்களத் தம்பிரான்கள் செய்யும் காரியங்கள் ஒவ்வொன்றும் இன ஒற்றுமைக்கு வேட்டு வைப்பனவாயுள்ளன என்ற உண்மை தமிழ்ப் பொதுமக்களுக்கு ஏற்கனவே தெரிந்துவிட்டது. ஆனால் கட்சியோடு இன்னும் ஒட்டிக்கொண்டு நின்று குட்டக்குட்டக் குனிந்து கொடுத்து ஆமாம் சாமிபோடும் ஆசாமிகளுக்கு அது எங்கே புரியப்போகிறது?

#### ஏவல் பிசாசுகளுக்கு ஒரு சொல்

சமசமாஜ சிங்களத் தலைவர்களுக்கு உள்ள சிங்கள இன அபிமானம், சிங்கள மொழி அபிமானம்—இவற்றில் கால்பங்குகூட அந்தக் கட்சியோடு ஒட்டிக்கொண்டு ஏவல் பிசாசுகளாகத் திரியும் ஏமாளித் தமிழர்களுக்கு தங்கள் மொழிமீதும் இனத்தின் மீதும் இல்லாமல்போயிற்றே என்பதை நினைக்கும்போதுதான் நெஞ்சு வேகிறது.

அவர்களுக்கு மிக்க அன்போடு இங்கு ஒன்று சொல்கிறோம். சமசமாஜக் கட்சிச் சிங்களத் தலைவர்களுக்கு இன்று உங்கள் ஒத்தாசை தேவைப்படுகிறது. அதனால் உங்களைத் தடவிக்கொடுத்து வைத்திருக்கிறார்கள். நாளை அவர்கள் காரியம் ஆனதும் முதல் உதை உங்களுக்குத்தான் தருவார்கள். அப்போதுதான் உங்களுக்கு உண்மை வெளிச்சமாகும்; உணர்வு பிறக்கும். தமிழன் வரலாறே இப்படித்தான் இருந்திருக்கிறது. இதை மறவாதீர்கள்.

—கே. கே. ஆர்




சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என் எம். பெரேரா மொழிக் கொள்கையில் கரணம் அடித்திருப்பதை குத்திக் காட்டுகிறது இந்தக் கூடார்த்தச் சித்திரம். 9—2—60-ல் டைம்ஸ் ஒப் சிலோன் (Times of Ceylon) பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

சுவரிலே இரண்டு அட்டைகள் மாட்டப்பட்டுள்ளன. ஒன்றில் "லங்கா சமசமாஜக் கட்சி, சம அந்தஸ்து" என்று எழுதப்பட்டுள்ளது. மற்ற அட்டையில் "சிங்களம் மட்டும், அத்தோடு தமிழின் நியாயமான அளவு உபயோகம்" என்று தலை கீழாக எழுதப்பட்டுள்ளது.

குத்துக் கரணம் அடித்தவாறு பார்க்கும்போது தலை கீழாக எழுதப்பட்டுள்ளதையும் டாக்டர் பெரேராவால் வாசிக்க முடிகிறது. அதனாலேயே இரண்டும் அதாவது சம அந்தஸ்தும் தமிழின் நியாயமான அளவு உபயோகமும் ஒன்றுதான் என்று டாக்டர் பெரேரா கூறினார் என அவரைக் கிண்டல் செய்திருக்கிறது டைம்ஸ் ஒப் சிலோன் (Times of Ceylon) பத்திரிகை.

### இரு துண்டமாக வெட்டிய பெண்

### உயிர் பெற்று எழுந்தாள்

சர்வதேசப் புகழ் பெற்ற கேரளத்து மாந்திரீகர் பேராசிரியர் விந்தாவும் அவரது மனைவியும் கொழும்பு விவேகானந்த சபையில் 14-2-60 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு மயிர்க்கூச்செறியும் மந்திர விந்தைகள் காட்ட விருப்பதாகத் தெரிகிறது.

கேரள, சீன, அமெரிக்க, ஆங்கில மாந்திரீக முறைகளைக் கையாண்டு பேராசிரியர் விந்தா அற்புதங்கள் செய்து காட்டவிருக்கிறார்.

பெண்ணை இரு துண்டுகளாக வெட்டிப் பின்னர் உயிர் பெறச் செய்வார் என்றும், கடதாசியிலிருந்து வாத்துக்கள், மாலைகள் எல்லாம் உற்பத்தி செய்து காட்டுவார் என்றும் இன்னும் சாதாரண மனிதரால் முடியாத எத்தனையோ காரியங்களை மந்திர சக்தியால் செய்து காட்டுவார் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### தமிழனைக் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மையை நிறைவேற்றலாம்"- இவ்வாறு திரு கதிரவேற்பிள்ளை கூறினார்.

இக்கூட்டத்தில் திருவாளர்கள் கரிகாலன், புதுமைலோலன், வழக்கறிஞர் நடராஜா ஆகியோரும் பேசினார்கள்.


## நன்றி நவிலல்

கடந்த 7—2—60-ல் நிகழ்ந்த எங்கள் திருமணத்தின்போது வாழ்த்துச் செய்திகள், பரிசுகள் அனுப்பியும், நேரில் சமுகம் தந்தும் ஆதரவளித்த யாவருக்கும் எங்களது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லோருக்கும் தனித்தனியே அறிவிக்க இயலாமைக்கு வருந்துகிறோம்.

இங்ஙனம்
என். யோகநாதன்,
(P. W. D. இன்ஸ்பெக்டர், [illegible])
யோ. கமலா

27, ஆஸ்பத்திரி ரோட்,
யாழ்ப்பாணம்.

சி. சி. சி.

## தெங்குப் பசளைக் கலவைகள்



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை நல்ல, பெருவாரி விளைச்சலைப் பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதவும்:-

**கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிடெட்**

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபால் பெட்டி 33. கொழும்பு. CCC625


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தப்பு மாஸ்டர்!

சிறுகதை — எழுதியவர்: "மாலதி"

"மனித மனம் பொல்லாதது தான் மாஸ்டர்!" என்றாள் ஆசிரியை அற்புதம்.

"ஏன் 'ரீச்சர்'?" என்றேன் நான்.

"பாருங்க மாஸ்டர்! மாஸ்டர் கந்தப்புவும் ஒரு ஆசிரியர்—அதுவும் அனுபவமுள்ள ஆசிரியர்; நீங்களும் ஒரு ஆசிரியர்; ஆனால் பயிற்சி பெற்றும் வேலையில்லாமலிருப்பவர் நீங்கள்; அப்படியிருக்க இவருக்கேன் இத்தனை பொருமை?"

"இதைத்தானா சொல்கிறீர்கள்? இது இயற்கை தானே ரீச்சர்! ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை. கரும்புத் தோட்டமொன்று உருவாவதை இலுப்பைப்பூ விரும்புமோ?"

இருந்தாலும் இத்தனை பொருமை கூடாது. இவரென்ன ஆயிரத்தை அள்ளியா தந்துவிட்டார்? பணத்தைப் போட்டுப் பாடசாலையைக் கட்டிவிட்டு இந்த மூன்று மாதத்துக்கும் தண்டத்துக்கு அலைகிறோமே! நினைத்துப் பார்க்க வேண்டாமா?"

"தனக்கு வந்தால் தானே தெரியும் தலையிடியும் காய்ச்சலும்; அவர் இப்படிப் பணத்தைப் போட்டுவிட்டு அலைந்திருக்க வேண்டும் அப்போது தெரியும் வருத்தம். அவர் பயிற்றப்பட்ட காலம், பயிற்சி பெற எஸ். எஸ் ஸி. பாஸ் பண்ணியவர்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு வைத்த காலம். அந்தக் காலமா இது? அறுநூறு பேரிலே பயிற்சி பெறத் தெரியப்பட்டோர் ஆக இருபத்திரெண்டு. பயிற்சி முடிந்ததும் வேலையற்ற, பயிற்றப்பட்ட ஆசிரியர் பட்டியலிலே பெயர் ஏறிக் குந்திவிட்டது. அவ்வளவுதான். போதாதா?"

"என்றாலும் அதது இருக்க வேண்டிய இடத்திலேதான் இருக்க வேண்டும். உங்கள் அந்தஸ்துக்கு நீங்கள் இருக்க வேண்டிய இடம் வேறு மாஸ்டர்........"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? முத்தை அரசகுமாரி தான் அணியவேண்டும். சாதாரண வேலைக்காரி அணியக் கூடாதென்கிறீர்களா?

"அப்படி நான் சொல்லவில்லையே. முத்து, கழுத்திலிருக்கும்போதுதான் மதிப்பைப் பெறுகிறது. கடலிலிருக்கும் போது?.........

"இல்லைத்தான். அதனால் தான் பிறந்த நாட்டிலே தவழக் கூடாதென்கிறேன். அயல் நாட்டிலே பிச்சையெடுக்கலாம்........"

"அப்படிச் சொல்லக் கூடாது மாஸ்டர். ஒருவர் உங்களை இகழ்கிறார் என்பதற்காக உலகமே இகழ்வதாக எண்ணிவிடுவதா? அந்த ஒருவரையும் இந்த உலகம் கண்காணித்துக் கொண்டுதானே வருகிறது? சமூகத்தின் கண்ணிலே ஒரு நாளைக்குத்தான் மண் தூவ முடியும். எப்போதும் அது சாத்தியப்படுமா? சிலரைப் பலமுறை ஏமாற்றலாம். பலரைச் சிலமுறை ஏமாற்றலாம். எல்லோரையும் எந்த நேரமும் ஏமாற்றிவிட முடியுமா? அவருடைய செல்வாக்கைக் கொண்டு உங்களை ஒரு திறமையற்றவராகக் காட்டலாம். எங்கே? இந்தக் கிராமத்துக்கு மாத்திரம். உலகுக்குக் காட்டி விட முடியுமா? ஆனால் உங்களால் அது முடியும். அவரின் வண்டவாளத்தை உலகறியச் செய்ய முடியும். நீங்கள் ஒரு எழுத்தாளர் என்பதை மறந்துவிட்டீர்களா?

"உண்மைதான். ஆனால் இந்தக் கட்டை அந்தப் பிறப்புப் பிறக்கவில்லை 'ரீச்சர்!'........"

எங்கள் சம்பாஷணை இத்துடன் முற்றுப் பெற்றது. கசமுச, கசமுசவென்று குழந்தைகள் கூக்குரலிடத் தொடங்கி விட்டார்கள். இதுவரை இந்தச் சூழ்நிலையை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். யாரிந்த மாஸ்டர் கந்தப்பு? இது புரியாமல்தானே விழிக்கிறீர்கள்?

நான் அன்று ஆசிரிய கலாசாலைக்குப் போயிருந்தேன். அன்றொரு சனிக்கிழமை என்று நினைக்கிறேன்—ஆமாம் சனிக்கிழமைதான். தொழில் வழிகாட்டி வகுப்பு நடந்து கொண்டிருந்தது. முதல் வரிசையிலே அமர்ந்திருந்தார் ஸ்ரீமான் கந்தப்பு. என்னைத் திண்ணையிலே கண்டதும் நிமிர்ந்து பார்த்தாரே ஒரு பார்வை! அப்போது 'ரைகர்! ரைகர்! வேணிங் விறைட்' (Tiger, Tiger Burning Bright) என்ற அடிதான் என் நினைவுக்கு வந்தது. எனக்குள்ளே சிரித்துக் கொண்டேன். இதற்குள்ளே ஸ்ரீமான் கந்தப்பு, ஒரு முதல்தர பயிற்றப்பட்ட ஆசிரியர் என்பதைப் புரிந்து கொண்டீர்கள் தானே! சரி.

* * *

"வணக்கம் அமருங்கள்" ...என்றார் கல்வி அதிகாரி.

"உங்க தலைமையாசிரியர் உங்களைப் பற்றி.....

"என்ன கூறினார்?" என் பதட்டத்தைக் கண்ட அவர் இலேசான சிரிப்பொன்றை உதிர்த்தினார்.

"பயப்படாதீர்கள். நல்ல மாதிரியாகத்தான் சொன்னார். உங்கள் ஆளுக்கு நன்ருகப் பிடித்து விட்டது போலிருக்கிறதே!"

நான் பதில் கூறவில்லை. வெறுமனே புன்னகைத்தேன்.

"உங்களிடம் ஒரு வேண்டுகோள்"

"என்ன?" நீங்கள் கூறியது போல...ஒரு மாறுதலை நான் விரும்புகிறேன்."

"நான் கூறினேனா? எப்போது?"

"தலைமையாசிரியர் என்னைப்பற்றிக் குறை கூறிய போது நீங்கள்......"

"ஓ; அதுவா? திருகோணமலைப் பகுதியிலுள்ள ஒரு இரேஷ்ட பாடசாலைக்கு மாற்றலாம் என்று நினைத்தேன். உங்கள் ஆற்றலுக்கு இந்த ஆரம்ப பாடசாலை தகுதியற்றது. ஆனால் அவசியமாகப் படவில்லை. இப்போது ஏன்?"

"அதை நான் விரும்புகிறேன். அத்தோடு என் இடத்துக்கு திரு கந்தப்பு அவர்களை அமர்த்துவீர்களானால் நல்லது......"

"இதற்காகவா? அதற்காக நீங்கள் மாறவேண்டியதில்லையே! சராசரி கூடியிருக்கும்போது; அவரைத் தூக்கிப் போட்டால் போகிறது நான் கவனிக்கிறேன்"

"நான் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு வெளியேறினேன்.

நான் எதிர்பார்த்தது போல எனக்கு மாற்றல் உத்தரவு வரவில்லை. ஆனால் சித்திரை முதலாம் திகதியுடன் திரு கந்தப்பு எங்கள் பாடசாலைக்கே மாற்றப்பட்டார்.

வைகாசி இருபத்திரண்டாம் தேதி.

"மாஸ்டர்!" என்றாள் அற்புதம். "கந்தப்பு மாஸ்டர் லீவு போட்டிருக்கிறாராம். அந்த வகுப்பையும் நீங்கள் தான் பார்க்க வேண்டுமாம். தலைமை ஆசிரியர் சொன்னார்"

"உம்; சரி" நான் வகுப்பறையுள் நுழைந்தேன். மணி பதினொன்றாகிக் கொண்டிருந்தது. 'பேசிட்' டோடு நுழைந்தார் தலைமையாசிரியர்.

'சம்பளம் எடுக்கப் போவதும் நான்தானா? சரி" 'பேசிட்'டைப் புரட்டினேன்: கந்தப்புவும் கையொப்பம் வைத்திருந்தார்.

"நான் அங்கேயே வருகிறேன் மற்றவர்களின் சம்பளத்தை ஒப்படைத்து விடுங்கள்" என்று கூறிவிட்டு நகர்ந்தார் அவர்.

திங்கள்......ஒன்பது மணி! சம்பளப் புத்தகத்தைச் சடுதியாகப் புரட்டிய நான் [illegible]
[illegible]
அவர் கையொப்பம்போட்டு விட்டுப் புத்தகத்தைத் தந்த பின்தானே பணத்தைக் கொடுத்தேன்? ஒருவேளை... கையொப்பம் வைப்பது போல பாசாங்கு செய்து புத்தகத்தை மூடித்தந்திருக்கிறார். நானும் புரட்டிப்பாராமல்......

தலைமையாசிரியர் அழைத்தார்.

"அவரின் சம்பளத்தை ஏன் கொடுக்கவில்லை;"

"நான் நேற்றே கொடுத்து விட்டேனே!......"

"எங்கே புத்தகத்தை..."

புத்தகத்தைப் புரட்டியவர் வெறுப்போடு என்னை நோக்கினார். விஷயத்தை விளக்கினேன்.

"நான் நம்புகிறேன் தம்பி. அவர் இல்லை என்கிறாரே. புத்தகம் சொல்லவில்லையே என்ன விபரீதம் இது உங்களுக்கு மூளை எங்கு போச்சு!

"திட்டமிட்ட சதி இது. ஆசைபோல அவர்களே வாழட்டும். நான் வேறு என்ன செய்ய!......"

"எங்கேயாலது புரட்டிக் கொடுத்து விடுங்கள் பிறகு என்னைக் குறை கூறவேண்டாம். "தலைமையாசிரியர் போய்விட்டார்.

"எங்கே புரட்டுவது? ஐந்து பத்தா? இருநூற்று நாற்பதும் சதக் கணக்கும் புரட்ட வழியுமில்லை—புரட்டப் போவதுமில்லை. வருவது வரட்டும். நேர்மை செத்துவிட்ட போது நான் எதற்கு அதை மறைக்கக் கடன்பட வேண்டும்?" ஆம் இனம் புரியாத ஒரு உணர்ச்சி என்னைக் கிண்டிவிட்டது பேசாமல் இருந்து விட்டேன்.

மேலதிகாரிக்கு 'றிப்போட்' பறந்தது. விசாரணை! விசாரணை! விசாரணை!

தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டேன்

நம்பிக்கை மோசடி!

நீதிமன்றத்திலே வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அதன் பலன்?

குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டேன். நாளை தீர்ப்பு.

ஒரு ஆசிரியன்—ஒரு அறிமுகமான சிறுகதை எழுத்தாளன்—நம்பிக்கை மோசடி!

அத்தனை முகங்களும் என்னைக் குத்தாமல் குத்தின. என் முகத்தில் எதைத்தான் கண்டனவோ? அவைதான் கறுத்தன. மக்களின் வாய் எதை எதையோ பேசிக் கொண்டது. மனம் எதை எதையோ கூறிக் கொண்டது.

கூண்டின் அருகாக வெட்கத்தையும் மறந்து ஓடோடி வந்தாள் அற்புதம் கந்தப்புவின் கண்கள் காணத் தவறுமா? ஒரே குசுப்பு! அத்தனைக் கண்களும் எங்களைத் தான் நோக்கின.

தீர்ப்பு வழங்கப் பட்டது. ஆறு மாதச் சிறைத் தண்டனை! "மாஸ்டர்!"...கதறி விட்டாள் அற்புதம்.

"மனதாலும் நினையாத குற்றத்துக்கு ஆறு மாதமா போதாது!" நான் சிரித்தேன்.

"அழாதீர்கள் சிஸ்டர்!"

"உங்களுக்காக நான் அழவில்லை. நல்லவர்களுக்கு சமூகமும், சட்டமும் கொடுக்கும் பரிசு இது தான்!...... மாலதியை நினைக்கும்போது தான்......" அற்புதம் பொருமிப் பொருமி அழுதாள்.

"அண்ணா!"

"அற்புதம்!"

"உங்களைக் காண அவள் துடித்த துடிப்பு! ஆனால் என்னைப்போல் துணிவில்லாதவள். தனக்குள்ளேயே குமைகிறாள், இந்தத் தீர்ப்பைக் கேள்விப்பட்டால்?

"அவளை நீதான் தேற்ற வேண்டும் பாவம் அறியாதவள். உயிர்க் குயிராக நேசித்தவள். உயிருள்ளவரை—இல்லை ஊழிஉள்ளவரை இந்த ஏழையின் இதயத்தில் ஒரு தனியிடம் அவளுக்காகக் காத்திருக்கும் அவளிடம் சொல். எனக்கு விடைதா!"

அற்புதம் கண்ணீரால் விடை தந்தாள். வெளிக் கடைச் சிறையும் மனம் கோணாது இடம் தந்தது. எனக்காக; இத்தனை ஆயிரம் வாசகர்களில் இரண்டே இரண்டு இதயங்கள் தான் துடித்தன.

ஒருத்தி—எனக்காகப்பிறந்தவள்—என் மாலதி!

மற்றவள் பிறப்பாலன்றி நேசத்தால் தங்கையானவள்— .....அற்புதம்!

* * *

"இன்று உங்களுக்கு விடுதலை. இந்தாருங்கள் 'ரயில்வே வாரண்ட்' இதோ பணமும் உடுப்பும் நீங்கள் போகலாம்"

சிறை அதிகாரி எனக்கு ஒரு விடை தந்தார். அதே நேரத்தில் இன்னொருவருக்காகச் சிறைக் கதவுகள் திறந்து கொண்டு வரவேற்பளித்தன.

தலையை நிமிர்த்தினேன். "ஆ! கந்தப்பு மாஸ்டர்!..." "ஆளைத் தெரியுமா?" யாரோ கேட்டார்கள். கள்ளக் கையெழுத்துப் போட்டு செக் மோசடி செய்த ஆசாமி. மிஸ்டர் கந்தப்பு" 'ஸ்ரீமான் கந்தப்பு!" யார் யாரோ பதிலளித்தார்கள்.

## பரிசளிப்பு விழா

"பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமெனப் பலர் சில வருடங்களாக பயமுறுத்துகின்றார்கள். இது பெற்றோர்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடியதாகும். இப் பயமுறுத்தல்களுக்கு நாம் பயப்படவில்லை" என திருமலை அர்ச் சூசையப்பர் கல்லூரி அதிபர் வண. பிதா. பொண்டர், மேற்படி கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பேசும்பொழுது கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "எமது நோக்கம் நல்ல பிரஜைகளை சிருஷ்டிப்பதுதான்" எனவும் கூறினார். சங். பிதா. லாரன்ஸ் எம். ஜி நீல் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, நீரேகம் சார்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் நீங்கும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூளைச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11



## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மானேஜர்
சுதந்திரன்

தபால் பெட்டி 1183,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிக் கொள்கையில் முழுக்கரணம்!

## சமசமாஜிகளின் தலைகீழ் நிலை

## வடக்கில் சம அந்தஸ்து வாதம்

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாழ்ந்த அந்தஸ்து
### தெற்கில் தமிழின் நியாயமான அளவு உபயோகம்

## கட்சியின் சுயரூபம் வெளிச்சமாகிவிட்டது
### தமிழ்த் தோழர்கள் இன்னமும் வால் பிடிப்பார்களா ?

(7ம் பக்கத் தொடர்ச்சி)

பண்டாரநாயகாவின் நியாயமான தமிழ் மொழி உபயோகமும் தங்களுடைய (சமசமாஜக் கட்சி) சமஅந்தஸ்து கொள்கையும் கிட்டத்தட்ட ஒன்றுதானும். வித்தியாசம் இல்லையாம்.

அவர் சொல்கிருர்:-

"It has now been proved that our policy is the best solution to the language problem. Mr. Bandaranaiake's effort to force our language down the throats of the Tamils resulted in the death of many Sinhalese and Tamils and eventually Mr. Bandaranaike had to concede the reasonable use of Tamil. A Tamil can for instance now be educated in his mother tongue and correspond with the government in Tamil. These were the very things we proposed"

*Ceylon Daily News*
4-2-60

இதன் தமிழாக்கம் வருமாறு:-

**தமிழின் நியாயமான அளவு உபயோகம்**

"எங்களுடைய கொள்கைதான் மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு ஆகச் சிறந்தது என்பது இப்போது நிரூபணமாகி விட்டது! சிங்களத்தைத் தமிழர்களின் தொண்டைக்குள் திணிக்க திரு பண்டாரநாயகா எடுத்துக்கொண்ட முயற்சி பல சிங்களவர்களும் தமிழர்களும் செத்தொழிவதில் முடிந்தது. எனவே கடைசியில் திரு பண்டாரநாயகா தமிழின் 'நியாயமான அளவு உபயோகம்' என்பதற்கு இணங்க வேண்டியதாயிற்று. (இதன்படி) ஒரு தமிழர் தனது தாய்மொழியில் கல்வி பெறலாம் அரசாங்கத்தோடு தமிழில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளலாம். இவற்றையேதான் (சமசமாஜக் கட்சி) நாங்களும் சொன்னோம்"

சிலோன் டெய்லி நியூஸ்
4-2-60

எப்படி இருக்கிறது? வடக்கிலே சமஅந்தஸ்து, தேர்தல் விஞ்ஞாபனத்திலே இன்னொரு (தாழ்ந்த) அந்தஸ்து பற்றி மழுப்பல், காவத்தையிலே நியாயமான அளவு தமிழின் உபயோகம். இது தான் சமசமாஜக் கட்சியின் உறுதியான மொழிக் கொள்கை! பலே!

**சமஅந்தஸ்தும் இல்லை**

டெடிகமைத் தொகுதியில் பெலிகலை என்ற இடத்தில் நடந்த கூட்டமொன்றில் டாக்டர் என். எம். பெரேரா இன்னும் தெளிவுபடுத்தினர் தமது தமிழ் மொழிக்கொள்கையை. தம்மைப்பொறுத்த வரை சமஅந்தஸ்துக்குசாவு மணி அடித்தாகி விட்டது என்பதை தெட்டத்தெளிவாக எடுத்துக் கூறினர். தாம் சிங்களவர் என்பதையும் தமது உள்ளத்தின் அடித்தளத்திலே என்ன இருக்கிறது என்பதையும் டாக்டர் என். எம். பெரேரா சொல்லிக்காட்டினர். டைம்ஸ் பத்திரிகை அந்தச் செய்தியைத் தருகிறது:

"The L. S. S. P. was not for parity but the reasonable use of Tamil, said Dr. N. M. Perera.

"He said it was the L. S. S. P. which first agitated that Sinhalese should be made THE STATE LANGUAGE in Ceylon.

"He too was a Sinhalese and therefore had an aching towards his mother tongue. He had no reason to hand over the sinhalese nation to the Tamils."

*Times of Ceylon*
8-2-60

இதன் தமிழாக்கம்:

"லங்கா சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கை சமஅந்தஸ்து அல்ல-தமிழின் நியாயமான அளவு உபயோகமேஎன்றுடாக்டர் என். எம். பெரேரா கூறினர்.

"சிங்களம் இலங்கையின் அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சியே முதலில் கிளர்ச்சி செய்தது என்ருர் டாக்டர் பெரேரா.

"அவர் தாமும் ஒரு சிங்களவர் தான் என்ருர். அதனுல் தமது தாய்மொழி பற்றி தமக்கும் துடிப்பு உண்டு என்ருர். சிங்கள இனத்தைத் தமிழரிடம் தாம் ஒப்படைக்க எதுவித நியாயமும் இல்லை என்றும் டாக்டர் பெரேரா சொன்னர்"

—டைம்ஸ் ஒப் சிலோன்
8-2-60

**கேள்வியின் அந்தரங்கம்**

அடுத்த பிரதமர் யார்? டாக்டர் என். எம், பெரேராவா, டட்லி சேனநாயகாவா? இப்படிக் கேட்பதன் அர்த்தம் இப்போது புரிகிறதல்லவா? டாக்டர் என். எம். பெரேரா எந்த அளவில் தமிழரையும் தமிழர் தம் தமிழ் மொழியையும் மதிக்கிருர் என்பது தெரிகிறதல்லவா?

'தமிழ் மொழி என்றும் தாழ்ந்த நிலையில் இருக்க வேண்டும்; தமிழர்கள் என்றும் சிங்கள எஜமானர்களால் ஆளப்படும் அடிமைகளாக அடங்கி ஒடுங்கி இருக்க வேண்டும். இதுதான் டாக்டர் என் எம். பேரேராவின் உள்ளத்திலே—சமசமாஜக் கட்சித் தலைவர்கள் மனதிலே வேர் விட்டிருக்கும் எண்ணம்.

**வேஷம்! புளுகு!**

இருந்தும் தமிழ் பேசும் மக்களைத் தம் மாயவலைக்குள் மாட்டி முடிவில் பொடிசூரணமாக்க டாக்டர் என். எம். பெரேராவும் அவர்தம் கட்சித் தலைவர்களும் தமிழர்களுக்காகப் பலதடவைகளில் நீலிக் கண்ணீர் வடித்திருக்கிருர்கள். தாமே தமிழர்களின் இரட்சகர்கள் என்று மார்தட்டிக் கூறியிருக்கிருர்கள். சமஅந்தஸ்துதான் தமது மொழிக் கொள்கை என்று முழுப் பலத்தோடு முழங்கியிருக்கிருர்கள்.

இதெல்லாம் பச்சைப் புளுகு; பகல் வேஷம்; வரிப் புலித்தனம் என்பதை நாம் பலதடவைகளில் சுட்டிக் காட்டியிருக்கிறோம். சமசமாஜிஸ்டுகளின் இறுதி இலட்சியம் ஒன்று; இப்பொழுது அவர்கள் பேசுவதெல்லாம் பின்னல் போய்விடும்; உறுதியெல்லாம் காற்ரோடு கலந்துவிடும் என்று தீர்க்கதரிசனம் கூறியிருக்கிறோம்.

**நீண்ட காலத் திட்டம்**

பெலிகலைக் கூட்டத்தில் நமது கூற்றை நிரூபித்திருக்கிருர் டாக்டர் பெரேரா.



"What the L. S. S. P. agitated for from 1935 was nothing else but what Mr. Bandaranike resorted to at last"

*Times of Ceylon*
8-2-60

அதாவது, டாக்டர் பெரேரா கூறுகிருர்:

"லங்கா சமசமாஜக் கட்சி 1935ம் ஆண்டு தொடக்கம் வற்புறுத்திக் கிளர்ச்சி செய்து வருவது எது தெரியுமா? வேறு ஒன்றுமில்லை! திரு பண்டாரநாயகா கடைசியில் கைக் கொண்ட கொள்கை தான்"

டைம்ஸ் ஒப் சிலோன்
8-2-60

திரு. பண்டாரநாயகா கடைசியில் கைக்கொண்ட கொள்கை தமிழின் நியாயமான அளவு உபயோகம். இதை சமசமாஜக் கட்சி 1935 தொடக்கம் வற்புறுத்தி வருகிறதாம். இடையில் வந்த சம அந்தஸ்துப் பேச்சை எல்லாம் தள்ள வேண்டியது தான் என்று சொல்லாமல் சொல்கிருர் டாக்டர் பெரேரா.

**வஞ்சனை வாடை**

சம அந்தஸ்து பேச்சு வந்த காலங்களில் எல்லாம் அதனோடு கூடவே சமசமாஜக் கட்சிச் சிங்களத் தலைவர்களின் வஞ்சனை வாடையும் வீசத் தொடங்கியது. சில சாம்பிள்கள் இங்கு தருகிறோம்.

"சிங்களச் சட்டம் சிங்களத்தை அரசகரும மொழியாக்கவில்லை. இதை நம்பி நீங்கள் ஏமாற வேண்டாம். திரு பண்டாரநாயகாவினல் மக்களை எப்பொழுதும் ஏமாற்ற முடியாது. தமிழ் மொழிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதால், அது எப்படிப்பட்ட [illegible] தமிழ் மொழிக்கும் அரசகரும மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டிருக்கிறது."

—அம்பாறையில் கொல்வின்.

தினகரன், வீரகேசரி
18—8—58

**சிங்களவர்களுக்கு தூபம்**

தமிழுக்கு அரசகரும மொழி அந்தஸ்துக் கொடுத்து விட்டார் பண்டாரநாயகா என்று ஒரு கட்டுக்கதை சொல்லுகிருர் கொல்வின் ஆர். டி. சில்வா. யாருக்கு? அம்பாறை சிங்கள வெறியர்களுக்கு. "பண்டாரநாயகா அவர்களை ஏமாற்றி விட்டார் என்ற தோரணையில் பேசி அவர்களைத் தூண்டி விடுகிருர் கொல்வின். தமிழுக்கு அரசகரும மொழி அந்தஸ்து கிடைக்காத போதே கிடைத்ததாகக் கதை கட்டி தமிழர்களுக்கு எதிராகவும் பண்டாரநாயகாவுக்கு எதிராகவும் சிங்கள வெறியர்களை ஏவிவிடும் கொல்வினும் அவர்கட்சியினரும் தான் தமிழுக்கு சம அந்தஸ்து என்று அன்ருரு நாள் ஜெபித்தவர்கள்; தமிழருக்காகப் பரிந்து பேசியவர்கள். என்னே இவர்கள் போக்கு!

**உள்ளத்து அந்தரங்கம்**

சமசமாஜக் கட்சித் தூண்களில் ஒருவரான திரு. ரொபேர்ட் குணவர்த்தன இருக்கிருரே, அவரும் ஒரு மணியான கருத்தைத் திருவாய் மலர்ந்தருளியிருக்கிருர்.

"சிங்களத்தை மட்டும் அரசகரும மொழியாக்குவதற்காக தம்மை அதிகாரத்தில் வைத்த சிங்களவர்களையே (பிரதமர்) சுட்டுக் கொன்றுவிட்டார். பிற்பாடு அவர் சிங்களவர், தமிழர்களாகிய இரு தரப்பினரையும் கொன்று தமிழ் மொழிக்கு இடங் கொடுத்துவிட்டார்.

"வகுப்புக் குரோதத்தை நாம் ஒழிக்க விரும்பினல் சிங்களத்தையும் தமிழையும் அரசகரும மொழியாக்க வேண்டும். அப்படிச் செய்தால் தங்கள் பொருளாதார நலனைக் கருதி சிறுபான்மையினர் சிங்களம் படிப்பார்கள். சிங்களம் தானே அரசகரும மொழியாகிவிடும்.

வரக்கப்பொலை கூட்டம்


தினகரன்
11-10-58

**பாசவலை**

ரொபேட் குணவர்த்தனவின் குணநலம் தெரிகிறதல்லவா? தமிழையும் தமிழரையும் பொறுத்தவரை அவரது உள்ளம் எப்படி இருக்கிறது என்பது தெளிவாகிறது அல்லவா? சிறுபான்மையினர் சிங்களம் படிப்பார்களாம். சிங்களம்தானே அரசகரும மொழியாகி விடுமாம்!

சமசமாஜத் தலைவர்கள் முதலில் சிங்களவர்கள். பின்னர்தான் கட்சித்தலைவர்கள்;

(13-ம் பக்கம் பார்க்க)

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்.

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மெஸ்லேர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிகக் குறைவு. மிகப் போட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்ரோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உடை றுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை கருவிகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:
ராஜரத்தினம் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.


முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:
தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்
(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின்பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி 88. கொழும்பு
காட்சிஅறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்
போன்: 78851.

உயர்ந்த சேவை

1½" மோடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.
2" மோடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.
3" மோடல்-மணித்தியாலம் 4800-16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை
ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி
ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ், ரோட்,
யாழ்ப்பாணம். போன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உணவு செல்லவில்லை. உணர்வு கலந்ததால் பேச்சும் எழவில்லை. சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தார் விரைவில் திரையிடவிருக்கும் "பாகப் பிரிவினை" என்ற படத்தில் நம்பியாரும் தாம்பரம் லலிதாவும்.

# தமிழரசு தேர்தல்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இராசதுரை, ஜனுப் மஷூர் மௌலானு, செனட்டர் ஜி. நல்லையா, மற்றும் உள்ளூர் சொற்பொழிவாளர்கள்.

## வவனியா

26-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திரு. செ. இராசதுரை, ஜனுப் மஷூர் மௌலானு, மற்றும் உள்ளூர் சொற்பொழிவாளர்கள்.

## யாழ்ப்பாணம்

27-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. ஏ. கந்தையா, ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், கே. துரைரத்தினம், கே. ஜெயக்கொடி, எம் பாலசுந்தரம், எஸ். கதிரவேற்பிள்ளை, ஏ. சிவசுந்தரம், வி. தர்மலிங்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.

## மன்னர்

27-28-2-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திரு. செ. இராசதுரை, ஜனுப் மஷூர் மௌலானு மற்றும் உள்ளூர் சொற்பொழிவாளர்கள்.

## வட்டுக்கோட்டை

1-3-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. ஏ கந்தையா, வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், கே துரைரத்தினம், கே ஜெயக்கொடி, எம். பாலசுந்தரம், எஸ். கதிரவேற்பிள்ளை, ஏ. அமிர்தலிங்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், செனட்டர் ஜி. நல்லையா.

## கோப்பாய்

2-3-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே வி. செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், வி ஏ. கந்தையா, கே. ஜெயக்கொடி, கே. துரைரத்தினம், வி தர்மலிங்கம், எம். பாலசுந்தரம், செனட்டர் ஜி. நல்லையா, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.

## மாதகல்

3-3-60-ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ் ஜே. வி. செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், வி. ஏ. கந்தையா, வி. என். நவரத்தினம், வி. தர்மலிங்கம், கே. ஜெயக்கொடி, கே. துரைரத்தினம், எம். பாலசுந்தரம், எஸ். கதிரவேற்பிள்ளை, செனட்டர் ஜி நல்லையா, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.

## தீவுப்பகுதி

5,6-3-60-ல் கூட்டம்

பல பேச்சாளர்கள் அடங்கிய குழு ஒன்று அங்கு செல்லும். யார் யார் அந்தக் குழுவில் இடம் பெறுவது என்பது பற்றி 28-2-60-ல் முடிவு செய்யப்படும்.

## மன்னர்

8, 9-3-60ல் கூட்டம்

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம். கே துரைரத்தினம்.

வவனியா, மன்னர் தவிர்ந்த ஏனைய தொகுதிகளில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் அபேட்சகர்கள் 27-2 60ல் யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் காலை 6-30 மணிக்கு கூடுவார்கள். பின்னர் வாக்காளர்கள் வீடுகளுக்கு எல்லோரும் விஜயம் செய்வார்கள். பெண்களும் அந்தக் கோஷ்டியில் செல்வார்கள்.

28-2-60ல் வட மாகாணத் தொகுதிகளில் போட்டியிடும் எல்லாத் தமிழரசு அபேட்சகர்களும் யாழ்ப்பாணம் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் காலை 10 மணிக்கு கூடுவார்கள்.

மேற்படி தகவல்கள் அடங்கிய அறிக்கை யாழ் பிரதேச தமிழரசுக் கட்சி அலுவலகத்திலிருந்து இலங்கைத் தமிழரசுக் கட்சி உதவிப் பொதுச் செயலாளர் திரு எஸ். சின்னத்துரை விடுத்துள்ளார்.

# மலைநாட்டு....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வலோற்காரமாக ஒரு இந்தியனைக் கூட டட்லி சேனநாயகாவால் திருப்பி அனுப்ப முடியாது. முடியுமானல் அவர் செய்து காட்டட்டும் என்று டாக்டர் பெரேரா சவால் விட்டார். இந்திய அரசாங்கம் அவர்களைத் திருப்பி எடுத்துக் கொள்ள இசைந்தாலன்றி இந்தியர்களைத் திருப்பி அனுப்ப முடியாது.

டாக்டர் பெரேராதாம் பதவிக்கு வந்தால் முதலாவதாகச் செய்யப் போகும் வேலை இந்திய அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்து ஒரு உடன் பாட்டுக்கு வந்து 4 லட்சம் இந்தியர்களை வைத்துக்கொண்டு மீதி 4 லடசம் இந்தியர்களையும் திருப்பி அனுப்புவது தான் என்ருர். பல வினங்களைச் சேர்ந்த 96 லட்சம் மக்கள் வாழும் நாட்டில் 4 லட்சம் இந்தியர்களை வைத்திருப்பதால் ஆபத்து எதுவும் நேர்ந்துவிடாது.

எட்டு லட்சம் மலைநாட்டுத் தமிழர்—நம் இனத்தவர்கள் இந்த நாட்டில்இருந்தால் ஆபத்தாம் நாடு கடத்த வேண்டுமாம். பதவி கிடைத்தால் முதல் வேலையாக அதைச் செய்வாராம் என். எம். இதுதான் பேச்சின் சாரம்.

எப்படி இருக்கிறது டாக்டர் பேரேராவின் பொன்மொழி—இல்லைப் புன்மொழி!

# தெற்கிலும் வடக்கிலும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குப் பலமான போட்டி கொடுத்து வருகிருர். இந்த நிலையில் இடதுசாரி வாக்குகளில் கணிசமான அளவினை கொம்யுனிஸ்டு அபேட்சகர் திரு கே. கே. ஏ. ஈ. பிரிட்டோ ஏற்கனவே பிடுங்கி எடுத்துக்கொண்டார். திரு பிரிட்டோ தெஹிவளை—கல்கிசை அர்பன் சபையின்முன்ஞள் உதவித் தலைவராவார் தற்போதையத் தலைவரான மேஜர் குணரத்ன திரு பிரிட்டோவுக்காகப் பகிரங்கமாக வேலை செய்கிருர். இந்தச் சூழ்நிலையில் வெற்றி கொம்யுனிஸ்டு அபேட்சகர் திரு பிரிட்டோவுக்கும் யு. என். பி அபேட்சகர் ஜயசிங்காவுக்கும் இடையேதான் ஊசலாடுகிறது.

இந்த உண்மை நிலையை அறிந்துகொண்ட டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் முகம் கடந்த பத்து நாட்களாகச் செத்து மடிந்துவிட்டது!

### மானங்காக்கும் முயற்சி

இந்த இருபெரும் சமசமாஜக் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்ல, தென் இலங்கையின் எல்லா இடங்களிலும் சமசமாஜக் கட்சியின் செல்வாக்கு படுத்துவிட்டது. தோல்வி, தோல்விக்குமேல் தோல்வி, படுதோல்வி நிழலாட ஆரம்பித்துவிட்டது.

இறுதி முயற்சியாக என்ன செய்யலாம், எப்படியாவது மானத்தைக் காப்பாற்ற வேண்டுமே என்ற பரபரப்பு நிலையை அடைந்துவிட்டார்கள் கட்சித் தலைவர்கள். தமிழ்ப் பகுதியில் போட்டியிடும் அபேட்சகர்களைப் பலியிட்டாவது சிங்கள மக்கள் மத்தியில் வெற்றியீட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டன மேலிடத்துத் தெய்வங்கள்!

சமசமாஜக் கட்சியின் படு பயங்கரமான, பரிதாபகரமான நிலையைத் தெரிந்து கொண்டார் டாக்டர் என். எம். பெரேரா. கொழும்பு முனிஸிபல் சபைத் தேர்தலில் தோல்வியின் கசப்பை நேரடியாக உணர்ந்தவர் அல்லவா அவர்?

எனவே கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டாவது நிலைமையைச் சீர்செய்வது என்ற கடைசி நேர முடிவுக்கு வந்துவிட்டார்.

### இரகசியம் இதுதான்

தமது மொழிக் கொள்கை பிரஜாஉரிமைக் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வந்து சிங்கள மக்களைத் திருப்திப்படுத்திஞலொழிய தாமும் தமது கட்சியும் தப்பிப் பிழைக்க முடியாதென்பதை உணர்ந்துகொண்ட சமசமாஜத் தலைவர்கள் "தமிழுக்கு சம அந்தஸ்து" என்ற கொள்கையிலிருந்து நழுவி 'பண்டாரநாயகாவின் நியாயமான அளவு உபயோகம்" என்ற கொள்கைக்கு வந்துவிட்ட இரகசியம் இதுதான்.

கொள்கையில் எப்படித்தான் இவர்கள் திலர்க்குத்துக்கரணம் அடித்தபோதிலும் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பெரும் பெரும் தலைகள் எல்லாம் தேர்தலில் உருளப்போவது திண்ணம்.

### கொல்வின் பேச்சு

இதை நன்கு உணர்ந்து கொண்டமையிஞல்தான் டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா சமீபத்தில் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசுகையில்:

"Our party is the only one which has six or seven others who can hold the post of president unlike other parties which have none to fill the vacancy if something happens to their leader"

என்று பேசியிருக்கிருர். இதன் தமிழாக்கம் வருமாறு:

"ஏனைய கட்சிகளைப்போல் அல்லாது எங்கள் கட்சியில் மட்டுந்தான் தலைமைப் பதவியைத் தாங்கக்கூடிய ஆறு ஏழு பேர் இருக்கிருர்கள். ஏனைய கட்சியில் தலைவருக்கு ஏதாவது சம்பவித்தால் தலைவர் பதவியை நிரப்புவதற்கு வேறு யாருமே இல்லை"

இந்தப் பேச்சில் "ஏதாவது சம்பவித்தால்" என்ற சொற் பிரயோகத்தின் பொருள் என்ன? அதாவது எதிர்வரும் பொதுத் தேர்தலில் டாக்டர் என். எம். பெரேரா தோல்வியுறக் கூடும் என்பதையும், அப்படித் தோற்கடிக்கப்பட்டால் பிறர் இருக்கிருர்கள் என்பதையும் கட்சி ஆதரவாளர்களுக்கு கூறித் தெம்பு ஊட்டுகிருர் டாக்டர் கொல்வின்.

மொத்தத்தில் சமசமாஜக் கட்சியின் நிலை தளர்ந்துவிட்டது, ஆட்டங் கண்டுவிட்டது, தேர்தலில் அது குடைசாயப்போகிறது என்பதையே கட்சியின் கொள்கைத் தடுமாற்றம் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துவிட்டது.

# ஐயாசாமி குருக்கள் மறைவு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் காலஞ்சென்ற சுப்பிரமணிய குருக்கள் இரத்தினக் குருக்களின் மருமகஞன பீதாம்பரக் குருக்கள் ஐயாசாமிக் குருக்கள் கடந்த வியாழக்கிழமை இயற்கையெய்திஞர்.

சிலகாலமாக நோய்வாய்ப் பட்டிருந்து இயற்கையெய்தியுள்ள ஐயாசாமிக் குருக்கள் மனைவி சொர்ணம்மாளையும் புதல்வர்கள் வைத்தியநாதக்குருக்கள், விஸ்வநாதர் ஆகியோரையும் புதல்விகள் அன்னபூரணி அம்மாள், மீஞம்பாள், சரஸ்வதி அம்மாள்! தர்மாம்பாள் ஆகியோரையும் விட்டுச் சென்றிருக்கிருர்.

ஐயாசாமிக் குருக்கள், சுதந்திரன் முன்ஞள் அக்கவுன்டன்ட் திரு நடராஜன் ஐயரின் மாமஞர் ஆவர்.

# மரகதம்

**சினிமா விமர்சனம்**

வெற்றிப் படங்கள் பலவற்றைத் தயாரித்து வெளியிட்ட பக்ஷிராஜா எம். எஸ். ஸ்ரீராமுலு நாயுடுவின் டைரக்ஷனில் உருவான துப்பறியும் படம் மரகதம்.

ஜமீன் ராஜாவைக் கொலை செய்தவர் யார்? உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கவும் அநியாயமாகக் குற்றம்சாட்டித் தண்டனை விதிக்கப்பெற்றவரை நிரபராதி என்று நிரூபிக்கவும் துப்புத் துலக்கப்படுகிறது.

கடைசிக் கட்டத்தில் 'துப்பு' துலக்கப்படுகிறதே தவிர மற்றப்படி முன்னதாகவே விஷயம் அப்பட்டமாகத் தெரிந்துவிடுகிறது. அதஞல் கடைசிக் கட்டங்களின் விறுவிறுப்பு பாதிக்கப்பட்டுப்போகிறது. நடிகர் சந்திரபாபு தோன்றுவதிலிருந்து துப்பறியும் கதை நகைச்சுவைக் கதைப் பாணியைத் தழுவிக் கொள்கிறது பயன்? சிரிக்க முடிகிறது. ஆனுல்...?

கைப்புண்ணுக்கு டைரக்டர் ஸ்ரீராமுலு கண்ணுடி தேடினட்டாலும் காதல் கட்டங்களில் தன் டைரக்ஷன் திறமையைக் காட்டியிருக்கிருர் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கச்சிதமாக இணைப்பு ஏற்படுத்தியிருக்கிருர்.

[illegible] வோடு நகைச்சுவை விருந்து அளிக்கிருர்கள். பாவச்சந்தர் தமதுபபண்ட்டநடிப்பை பலே ஜோராக வழங்குகிருர். சிவாஜியும் பத்மினியும் காதலர்களாக வருகிருர்கள் என்ருல் அவர்கள் நடிப்பைப்பற்றிப் புதிதாக ஒன்றும் சொல்ல வேண்டியதில்லையே! சொக்க வைக்கிருர்கள். ஓ. ஏ கே. தேவர் கொஞ்ச நேரமே திரையில் தோன்றிஞலும் நடிப்பின் முத்திரை பதித்துச் செல்கிருர். வெள்ளைக்கார நீதிபதித் துரையாக வந்தவர் "வணக்கம்", "சத்தியமே ஜெயம்" என்று கூறுகிருர். அவருடைய நடிப்பு மிக மிக இயற்கையானது அபாரம் என்று சொல்லலாம்.

பாடல்கள் எல்லாம் பெரும்பாலும் கர்நாடகப் பாணியில் ரஞ்சகமாக அமைந்திருக்கின்றன பத்மினியின் ஆடல்—அது தனி ரகம். ஆடலையும் பாடலையும் இடமறிந்து புகுத்தியிருந்தால் இன்பம் இரட்டிப்பாக இருக்கும்.

டி. எஸ். டி. சாமியின் கதை சுவையானது. முரசொலி மாறனின் வசனமும் முறையானதுதான். சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் கிங்ஸ்லி முதலான திரைகளில் காண்பிக்கப்படுகிறந்து படம்.


## ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை 1960

### சாதாரண விஞ்ஞான தூயகணிதப் பயிற்சிகள்

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு அற்லஸ் ஹோல் புதுப் பாடங்கள் தயாராகிவிட்டன

★ தமிழ்ப்பாஷை ★ பொதுவிஞ்ஞானம்
★ எண்கணிதம் ★ தூய கணிதம்
★ பொது விவேகம் ★ பூமிசாஸ்திரம்
சரித்திரம்

பரீட்சை விபரங்கட்கும் புதிய பாடத் திட்டத்திற்கும் இன்றே எழுதுங்கள்.

# அற்லஸ் ஹோல்,

723, மருதானை, த. பெட்டி 649.
கொழும்பு—10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டி அரசமைப்பே....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு மாகாணங்களுள் அடங்கிக் கிடக்க வேண்டும் என்ற தவறான அபிப்பிராயத்துக்குப் பதிலிறுக்கும்முகமாக மட்டக்களப்பு முன்னாள் பிரதிநிதி திரு செ. இராசதுரை வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவின் ஒரு பகுதியைத் தனிப் பெருந் தலைவரின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

திரு இராசதுரை கூறியதாவது:

"சமஷ்டி அரசமைப்புக்கு எதிராக இன்னுமொரு நியாயம் கூறுகின்றார்கள். தமிழ் அரசு ஏற்பட்டால் தமிழ் பேசும் மக்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒதுக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. இது ஒரு மோசமான கூற்று. கனடாவில் வாழும் ஆங்கிலம் பேசும் மக்களும், பிரெஞ்சு மொழி பேசும் மக்களும் தமக்குள்ளே போரிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார் டேர்ஹாம் பிரபு. இச் சச்சரவுகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கு ஒற்றையாட்சி அரசமைப்பே பரிகாரம் என்று தீர்ப்புக் கூறினார் இசுனல் காலக்கிரமத்தில் பிரெஞ்சு மொழி பேசும் சிறுபான்மையினர் ஆங்கில மொழியைப் படித்து ஆங்கில இனத்துடன் இரண்டறக் கலந்து (அழிந்து) விடுவார்கள் என்று பிரபு நம்பினார். ஆனால் தமது மொழியையும், கலாச்சாரத்தையும் இவ்வாறு அழிந்தொழிய விட முடியாது என்று பிடிவாதமாக நின்றார்கள்; பிரஞ்சு மக்கள். தமது தனிப் பண்புகளை அழிவிலிருந்து காப்பாற்றுவோம் என்று திடங்கொண்டார்கள். சிறுபான்மையினரின் மகத்தான நெஞ்சுறுதியின் விளைவாக 1867ல் கனடாவில் சமஷ்டி அரசமைப்பு உதயமாயிற்று. பிணக்குகள் மறைந்து, பிரஞ்சு மக்களும், ஆங்கில மக்களும் சகோதரர்களானார்கள். பிரதேச சுயாட்சி பெற்று (பிரஞ்சுக்) கியூபெக் மாகாணத்திற்குள் மாத்திரம் இன்று பிரஞ்சு மக்கள் ஒடுங்கிக் கிடக்கவில்லை.

"இலங்கையின் பரப்பில் மூன்றில் இரண்டு பங்குள்ள சின்னஞ்சிறு சுவிட்சர்லாந்தில் 26 பிரதேச அரசுகள் இருக்கின்றன. நான்கு வெவ்வேறு மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இருந்தும் அங்குள்ள ஜெர்மன், பிரஞ்சு இத்தாலிய மக்கள் தத்தம் முடுக்குகளுக்குள்தான் ஒடுங்கிக் கிடக்கவில்லை.

"மொழிவாரியில் பிரிக்கப்பட்ட இந்தியாவில் ஒவ்வொரு மொழி பேசும் இனமும் தத்தம் இராச்சியத்திற்குள் பதுங்கி வாழவில்லை. ஏராளமான தென்னிந்தியர்கள் டில்லியில் மத்திய அரசாங்கத்தில் உயர் பதவிகளில் இருக்கிறார்கள்.

"எனவே வேறெந்த அரசமைப்பு உபாயங்களிலும் பார்க்க, சிறுபான்மை உரிமைகளைப் பாதுகாக்கவல்லது சமஷ்டி ஆட்சி முறையாகும். சமஷ்டி இணைப்பிலுள்ள ஒரு இராச்சியத்தில் சிறுபான்மையாயிருப்பவர்கள் தமது மொழி வழங்கும் இராச்சியத்தில் பெரும்பான்மையோராயிருப்பார்கள் ஆகையால் இணைப்பில் உள்ள எந்த ஒரு பிரதேச அரசும் தான்தோன்றித்தனமாக நடக்க முடியாது.

"பரஸ்பர நல்லெண்ணமும் பரிபூரண ஒத்துழைப்பும் காட்டாதிருக்க முடியாது. எந்தவொரு இனமும் ஏனைய இனங்களிடம் நெறிதவறி நடக்கவும் முடியாது"

மேற்படி வாசகத்தைப் படித்த பின்பாவது தமிழ் காங்கிரஸும் அதன் தனிப் பெருந் தலைவரும் கொண்டுள்ள தவறான விளக்கங்களை விட்டொழித்து சமஷ்டியின் உயர்வை பகிரங்கமாக ஒப்புக்கொள்ள முன்வர வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

(தொடரும்)

## சமாதான நீதிபதி குமாரசாமி

வட்டுக்கோட்டை, சித்த வைத்திய கலாநிதி திரு க குமாரசாமி யாழ்ப்பாணப் பிரிவுச் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பகுதி நீதிபதி திரு ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில், சமாதான நீதிபதியாகச் சத்தியப் பிரமாணஞ் செய்துகொண்டார்.

இவர் அகில இலங்கைச் சித்தாயுள் வேத வைத்திய சங்கத்திற்கு 1949ம் ஆண்டு முதல் தலைவராக இருந்து பெரும்பணி புரிந்து வருகின்றார். நல்ல பண்பாடும் பரோபகார சிந்தையும் படைத்தவர் சிறந்த பொதுசன ஊழியர். இவர் மரபினர், யாழ்ப்பாணத் தமிழ் அரசர் காலம் முதல் வாழையடி வாழையாக வைத்தியப் பெரும் பணி புரிந்து வருகின்றனர்.

இவரது பாட்டனாரும், பிரசித்திபெற்ற வைத்தியரும், சைவப் பெரியாரும், நூற்றைந்து ஆண்டுகளுக்கு மேலாக உலகில் வாழ்ந்தவரும் ஆகிய உயர்திரு அப்பா அமைத்த வட்டுக்கோட்டைச் சிவன் கோயிலுக்கு மானேஜராக இருந்து கோயிற் கருமங்களைத் திறம்பட நடாத்தி வருகின்றார்.

வட்டுக்கோட்டை காந்திச் கிராமாபிவிருத்திச் சங்கம், ஜனசமூக நிலையம் முதலியவற்றிற்குக் கடந்த பதினொரு ஆண்டுகளாகத் தலைவராய் இருந்து தொண்டு புரிந்து வருகின்றார். வட்டுக்கோட்டை இந்து சமய அபிவிருத்திச் சங்கத் தலைவரும் இவரே. வட்டுக்கோட்டை மகளிர் மன்றத்திற்கென ஒரு நெசவுப் பாடசாலையையும் அமைத்துள்ளார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கல்வி கற்ற இவர், முன்பு உறுதி மொழி ஆணையாளராக இருந்தார். தம் மரபினர் போல இவரும் யாழ்ப்பாணப் பகுதியில் பிரசித்தி பெற்ற மனோவைத்திய நிபுணர் ஆவர்.

## மலைநாட்டில் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. எஸ். சோமசுந்தரம் பேசுகையில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் அபேட்சகர்கள் ஐவர் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்து அவர்கள் எல்லோரும் பிரதிநிதிகளாக ஏன் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதை விளக்கிக் கூறினர்.

தமிழரசுக் கட்சி சார்பில், கல்முனையில் போட்டியிடும் ஜனாப் மஷூர் மௌலானா பேசுகையில் இலங்கை ஜனநாயக காங்கிரஸ் ஆற்றிய பணிகள் பற்றியும் ஜனாப் அஸீஸின் திறமைகள் பற்றியும் எடுத்துக் கூறினார். அவரைக் கொழும்பு மத்திய தொகுதி அபேட்சகராக வாக்காளர்கள் தெரிவு செய்யவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அன்பர் பூபதிதாசர் உட்பட மற்றும் பலரும் கூட்டத்தில் பேசினார்கள்.

---

## மொழிக்....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது இனம் மேலோங்கி வாழ வேண்டும் என்பது அவர்களது எண்ணம். சிங்கள மொழி ஆள வேண்டும் என்பது விருப்பம். நாடு தமது ஆகவேண்டும் என்பது ஆசை. தமிழ்பேசும் மக்களுக்கு விரிப்பது வெறும் பாசவலை.

இதைப் புரிந்து கொள்ளாமல் அந்த வலையில் மாட்டிக் கொண்டு மாரடிக்கும் தமிழ்த் தோழர்களுக்காக வருந்துவதைத் தவிர வேறு வழியில்லை. தமிழ்த்தாய் தான் அவர்களையும் பெற்றெடுத்தாள். என்ன செய்யலாம்!

---

## அகதிகளை....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் அகதிகளைக் கப்பலில் ஏற்றி அனுப்பி வைக்க பிரதிபலன் கருதாமல் உதவியவர்கள் யாரென்பதையும், சுய இச்சை அபேட்சகர் ஏற்பாடு செய்த கப்பலுக்காக கொடுக்கப்பட்ட—இல்லை, கொள்ளையடிக்கப்பட்ட— அரசாங்கப் பணம் எவ்வளவு என்பதையும் புள்ளி விவரங்களுடன் அடுத்த வாரச் சுதந்திரனில் காண்க.

இதில் வேடிக்கை என்னவென்றால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்குத் தமிழ் அகதிகளை ஏற்றி அனுப்பிய கப்பல்களுக்கு அரசாங்கத்திடம் சுளை சுளையாகப்பணம் அறவிடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து சிங்கள அகதிகளைக் கொழும்புக்கு ஏற்றி வந்த கப்பல்கள் அரசாங்கத்திடம் கப்பல்கட்டணம் அறவிடாமல் இனமாக ஏற்றி வந்திருக்கின்றன.

தமிழர்களுக்கு தமிழர் செய்த உதவி எப்படிப்பட்டதென்பது இதிலிருந்தே புலனாகிறதல்லவா?

ரஸமான விவரங்களையும் அதிர்ச்சி தரும் தகவல்களையும் அறிய அடுத்த வாரச் சுதந்திரனை எதிர்பாருங்கள்.

—ஆசிரியர்.

# வேண்டுகோள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வருங்கால வாழ்வைப் பெருமளவு நிர்ணயிக்கும் முறையில் எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையும். ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதியும் மக்கள் தமது குடியுரிமை, மொழியுரிமை தாம் வழி வழிவாழும் இடவுரிமை ஆகிய அனைத்திற்கும் மேலாக கூட்டாட்சிஅடிப்படையில் தமக்கென ஒரு தமிழரசை நிறுவும் உரிமைக்கு ஓர் உறுதுணையாய்—ஓர் அடித்தளமாய் இத் தேர்தல் அமையும். இந் நல்வாய்ப்பினை நாம் உண்மையாகப் பெற விரும்பின் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரையும் தெரிவு செய்ய வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் ஒரே கொள்கை அடிப்படையில், ஒரே இயக்கத்தைச் சார்ந்து ஒரு கொடிக்கீழ் ஒன்றுபட்டு நின்று போர்க்குரல் எழுப்பின் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை எவருமே புறக்கணிக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு முக்கிய குறிப்பை கூறியேயாக வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருக்க விரும்பின் ஓர் அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். எமக்கின்று ஏற்பட்டிருக்கும் சாபக்கேடு என்னவெனில் தமிழரில் சொந்த வருமானம் உள்ளவரிடம் இலங்கையில் தமிழ்ப் பேரினம் தனது தனித் தன்மையை இழந்து அழிந்துபோகாது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம்—அதற்கான உணர்வு போதியளவு இல்லை. அதே நேரத்தில் தமிழ்ப் பேசும் இனத்தின் நலனிலும் நல் வாழ்விலும் நாட்டம் கொண்டுள்ள ஆண்கள் பெண்கள்—இருபாலாரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்திற்காக தமது முழு நேரத்தையும் செலவு செய்ய பண பலம் இல்லை; அதாவது வருமானம் இல்லை.

இந் நிலையில் தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணியில் ஈடுபாடும் கொண்டவர்களையே அபேட்சகர்களாய்த் தெரிவு செய்ய வேண்டும். அத்தோடு அவர்களுக்காக தேர்தல் பிரசாரம் செய்து பணமும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் இனத்திடம் நிதி உதவியையும் மற்றும் இன்னோரன்ன உதவிகளையும் வேண்டி நிற்கின்றது. கட்டுக்கோப்போடு கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இயன்றவரை பணியாற்றியுள்ளது. வருங்காலத்திலும் அதன் பணி தொடர்ந்து சிறப்புற வேண்டின் ஈழத்தில் தமிழ் பேசும் இனம் தொடர்ந்தும் தமிழ் பேசும் இனமாகவே வாழ வேண்டின் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு தாராளமாக நிதி தந்து உதவுங்கள் என்று வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:

16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,

கொழும்பு—3.

கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
5-வது வாரம்!
ஜெமினி கணேசன்-ஜமுனா-ராஜம்-நாகையா
கண்ணாம்பா-டி. ஆர். ராமச்சந்திரன்-சகஸ்ரநாமம்
நடித்த
நல்ல தீர்ப்பு
திரைக்கதை வசனம்: முரசொலி மாறன்
நடனம்: குசலகுமாரி-ராகினி
செல்லமஹால் 4-வது வாரம்!
குமாரி—ஸ்ரீராம்—நம்பியார் நடிக்கும்
யானை வளர்த்த வானம்பாடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவை அமுதம்: 22

# பருவத்தே பயிர் செய்

"ஊதும் துருத்தி வாயாலே சுழலும் காற்று வருவானேன்?

கொல்லன் பட்டறையில் துருத்தியைக் காண்கிறோம். அது இயங்கும்போது உள்ளிருக்கும் காற்றுச் சுழன்று சத்தமிட்டுக் கொண்டு வெளிவரும்; வெளியே உள்ள நெருப்பை வேகமாக எரியச் செய்யும். இந்த நெருப்பினுள் கொல்லன் இரும்பை வைப்பான். அது சிவந்து பழுப்படைந்ததும் வெளியே எடுத்துச் சம்மட்டியால் அடித்து தனக்கு வேண்டிய ஆயுதத்தைச் செய்வான். நெருப்பைக் கண்டதும் இரும்பும் பாகாய் இழகி விடுகிறது கொல்லன் விரும்புவதுபோல் வளைந்து கொடுக்கிறது.

இது எமக்கு ஓர் உதாரணம். நாம் குழந்தைகளாய் இருக்கும்போதே நல்ல பழக்கங்களைப் பழக வேண்டும். மனதைசுத்தமாக வைத்துக் கொண்டு வாழ வேண்டும். வஞ்சனை, பொறுமை லோபம் முதலிய தூய குணங்களை சிறுவயதிலேயே பழகிக் கொண்டால் பின்பு அவைகளை அகற்ற முடியாது வருத்தப்படுவோம். இரும்பினுள் காய்ச்சிப் பின் சம்மட்டியால் அடிப்பதுபோல்நாமும் துன்பப்பட்டு கசையடி வாங்க நேரிடும்.

மழைக் காலத்தில் நிலம் குளிர்ந்து வயல்கள் ஈரலிப்பாக இருப்பதைப் பயன் படுத்திக் கொண்டு உழவன் நெல்லை விதைத்து நல்ல அறுவடை செய்கிறான். இளமையில் எமது மனமும் ஈரலிப்பான வயல்களைப் போலவே இருக்கும். இந்தச் சமயத்தில் எமது மனத்தில் புகுத்தப்படும் பரிசுத்தமான எண்ணங்களும் நற்கல்வியும் எமது வாழ்வை மலர வைத்து எமக்குப் பெருமை தரும்.

சந்தர்ப்பங்கள் எம்மைத் தேடி வருவதில்லை. அவை வராவிட்டாலும் நாமாக அவைகளைத் தேடிப் போக வேண்டும். கடந்து போன காலம் மீண்டும் திரும்பி வராது அதனால் கிடைக்கும் சந்தர்ப்பங்களையாவது நல்லபடி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பயிர் வளரக் காலம், நிலம், நீர், பசளை முதலியன எப்படி அவசியமோ அப்படியே நாமும் வளர கல்வி, குணம், செல்வம் முதலியன அவசியம். இவைகளை உரிய பருவத்தில் பெற்றுக் கொள் என்கிறாள் ஔவைப் பாட்டி.

—ஏ. ஜீ. ஆனந்தன்




# வண்டமிழும் வடமொழியும்

—மதியமுதன்—

அன்புள்ள மலருக்கு!

வணக்கம். மலர், உன் வண்ணமடல் மலர்ந்தது. மட்டிலா மகிழ்ச்சி. பல வாரங்கள் சென்ற பின் பதில் தருகிறான் அண்ணா என்று, கோபங் கொள்ளாதே. உடல் நிலை பாதிக்கப்பட்டதால் சில வாரம் ஓய்வெடுத்தேன், அவ்வளவு தான். நிற்க,

வட மொழி, வண்டமிழுடன் கலந்த "மணிப் பிரவாள நடை"யால் எப்படி யண்ணா நந்தமிழன்னை மாசுபட்டு மடிகிறாள்; எனக்கேட்டிருந்தாய். இது ஒவ்வொரு தமிழனிடமும் எழவேண்டிய கேள்வி என் தங்கையிடம் எழுந்ததில் வியப்பில்லையல்லவா? நீ தங்கையாகக் கிடைத்ததையிட்டு நான் உளம் பூரிப்படைகிறேன். ஆம்! உன் போன்ற செல்விகளாயினும் செந்தமிழ் காக்கப்படட்டும்! கன்னித் தமிழ் கடிமணம் வீசட்டும்!!

மலர்! இதோ உன் கேள்விக்கு பதில். படித்துவிட்டுப் பதில் எழுது.

"தமிழ்" என்றால் இனிமை. அதுவும் அமிழ்தைவிட இனிமையானது. என்று தோன்றியதோ அன்று முதல் கன்னித் தன்மையுடன் செம்மையும், செறிவும் பெற்று வாழ் வாங்குவாழும் மொழி. மொழி, உலகில் வழங்கும் மொழிகட்குத் தலை மொழி தமிழ் மொழி.

"தமிழ்" தோன்றி ஆயிரமாயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. அறிஞர்களாற் பாராட்டப்பட்ட தமிழுடனும், பின்புந் தோன்றி வழங்கிய பண்டைய மொழிகள் வழக்கிறந்து போயின. இவற்றில் எபிரேயம், எகிப்தியம், கிரேக்கம், பெர்சியன், சமஸ்கிருதம், இலத்தின் என்பன சிலவாகும். இவை தொன் மொழிகளாயினும் பேச்சு வழக்கிறந்தவையாகும். ஆனால், இனிமை மிக்க இன்ப மெல்லோசை எழுப்பும் தமிழோ இளமை அழியாது நம்மோடு இணைந்து வாழ்வதை நோக்கின் தமிழின் சிறப்புப் புலப்படும்.

"தமிழ்" இவ்வளவு சீருடன் வாழ்வதற்கு அதன் இலக்கண அமைப்பே காரணமென்பர் மொழித்துறைச் செல்வர். அன்னைமேற் பற்றுக் கொண்ட செந்தமிழ் மக்கள் தந்தமிழ் வாழ வேண்டுமென்று வாழ்த்திய நிலை-இடைக்கால 'ஆரியம்' போன்ற வட மொழித் தாக்குதலையும் வென்று வாழ்கிறாள் தமிழன்னை; அத்தோடு தானும் வாழ்ந்து, தன்னினமும் வாழ வழி வகுத்திருக்கிறாள். தமிழறிவு சான்றோர் இப்படிச் சாற்றுகின்றனர்.

"தமிழை"ப் புகழ்ந்து போற்ற விரும்பிய தமிழரும், பிறரும் போற்றிப் புகழச் சொற்கள் கிடையாது திணறுகின்றனர். எழுத்தாளர், பாவலர், நாவலர், "தமிழ்" என அழைப்பதிற் சுவையில்லையாம். அதனாற்தான் வண்டமிழ், செந்தமிழ், இன்தமிழ், தென்தமிழ், பைந்தமிழ், தனித்தமிழ், சங்கத் தமிழ், தண்டமிழ், என்றெல்லாம் அழைக்கப்படுகின்றனர் போலும். இது அவர்கள் தமிழ்மேற் கொண்ட காதலையே காட்டுகிறது. இப்படியாகத் தமிழைப் புகழ்ந்தால் மட்டும் போதாது. இன்னும் தமிழின் சிறப்பு பல்கிப் பெருக மா பெருந் தொண்டு புரியவேண்டும். தமிழ் தனித்தியங்க வல்லதென்பதையும் உணரவேண்டும்.

'எந்த மொழியும் தனித்தியங்கும் ஆற்றலை இழந்துவிடின் அம்மொழி, செம் மொழி எனச் சிறந்தோரால் போற்றப்படமாட்டாதென்பது உலகறிந்த உண்மையாகும். ஒரு மொழி தனித்தியங்கு மாற்றலை எப்போது இழந்துவிடுகிறதென்றால் அம் மொழி பிற மொழிக் கலப்பால் அதன் தூய்மை நலத்தை இழக்க நேரும் பொழுதேயாம்".

[செந்தமிழ்ச் செல்வி—சிலம்பு—32 பக்கம் 217]

"தமிழ்" தன் தூய்மையை இழந்து அருகி வருகிறது. தமிழைக் காக்கும் பொறுப்பை நாம் உணர வேண்டும். தனித்தியங்கா மொழியுடன் பிற மொழி சேருங்கால் முதல் மொழி வேற்று மொழியாகி விடுகிறது. இப்படி வந்ததுதான் மலையாள மொழி. வட மொழிக்கப்பால் சேர நாட்டுத் தமிழ் இப்படியாகியது. வட மொழிப் புராண, இதிகாசங்கள் தமிழ் மொழியிலே மருவின.

தமிழர்கள் கூடத் தமிழன்னைக்குத் தீங்கிழைத்துள்ளனர். வட மொழியைக் கடவுள் மொழியாகக் கட்டியழுதிருக்கின்றனர். ஆங்கிலங் கற்பதே சிறந்த நாகரிகம் எனக் கருதினர். புலவர்கள் தமிழுடன் வட மொழியைக் கலப்பதைத்-தமிழ்ப் புலவர் களுக்கு [illegible] கருதினர். தமிழுக்குக் குழி தோண்டும் "மணிப்பிரவாள நடை"யைக் கொண்டு வந்தனர் தமிழுக்கு அவமானச் சின்னமே வட மொழிதான் மலர்!

"தமிழ்" வளம் பெற்றுச் சிறப்புற்று விளங்கக் காரணம் வட மொழி. அது இல்லாவிட்டால் தமிழ் வாழா மொழியாகப் போகும். இப்படி எண்ணப்பட்ட ஒரு காலமும் இருந்தது. அப்போது—

"தமிழை"த் தாய் மொழியாகக் கொள்ளாத "கால்டுவெல்" என்பவர் கூற்று இதோ படியுங்கள்!

"தமிழ் மொழி விரும்பினால் வட சொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்த்திருப்பதோடன்றி அவற்றின் உதவியில்லாமல் மிகவும் மேம்பட்டு வருமுற்றுமிளிரும் ஆற்றலும்வாய்ந்ததாகும்."

[கால்டுவெல் ஒப்பிலக்கணம்—60 பக்கம்]

"தமிழ"னே தமிழைப் பற்றி அறியாத நேரத்தில் "கால்டுவெல்" பெரியார் தமிழ் ஆராய்ச்சி செய்து தமிழ்ப் பணிபுரிந்தார். இப்படியிருந்துங்கூட தமிழன் இன்னும் ஏன் உணர்கிறானில்லை. அந்தோ!......பரிதாபம்! தமிழன்னை என்ன நினைப்பாளோ?......

மலர், நின் வினவுக்கு இவ்வளவு தெளிவான விடையைக் கண்டு எப்படி யெப்படி மகிழ்ச்சியடைவாயோ? உன்னைக் கண்டாயினும் உலகம் திருந்தட்டும்! தமிழ் தனித்தியங்கித் தரணியாளட்டும்!! மறு மடலில் மற்றவை.

வாழ்க வண்டமிழன்னை!

அன்புள்ள அண்ணா

வள்ளுவர் குரல்: 10

# பிறவிப் பெருங் கடல்

அளந்து அளவிட முடியாதது பெருங் கடல். பிறவியும் அப்படித்தான். பிறப்பும், இறப்பும், இறப்பும் பிறப்பும் தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். அதனாலேதான் பிறவி, எவ்வளவினது என்று அளக்க முடியாமல்—பெருங் கடல்போல—இருக்கின்றது.

ஒருவன் தனிமையாகப் பெருங்கடலை நீந்திக் கடப்பது அருமை; புணை ஒன்றைத் துணையாகக்கொண்டால் எளிதிற் கடந்துவிடலாம். அஃதேபோல், பிறவியாகிய பெருங்கடலைக் கடக்க உதவும் புணை எது?

"இறைவன் அடி" என்கின்றார் தமிழ்மறை தந்த திருவள்ளுவர். எல்லாவற்றுக்கும் காரணமும் முதலுமாகிய இறைவன் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்கள், அத்திருவடிகளே புணையாகப் பிறவிப் பெருங் கடலைக் கடப்பர்; நினைக்காதவர், கடக்கமாட்டாது பிறந்திறந்து வருந்துவர்.

பிறவிப் பெருங்கடல்
நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடி சேராதார்"

—தமிழ்மறை 10

—பா. ஆறுமுகம்

## வளர்மதி புதிய மருமக்கள்

2755 நா. ஜெயசீலன், காங்கேசன்துறை

2756 செல்வி ஏ. அருளம்மா, ஓமந்தை

2757 ப. குசவநாதன், ஊர்காவற்றுறை

2758 வே. தர்மராசா, கரவெட்டி

2759 அப்துல்லத்திப் உஸ்மான், மருதானை

3760 எம். யு. அபுல் ஹஸன், கெக்கிரவ

2761 எம். எஸ். தங்கையா, பாதுக்க.

# எது தமிழ்?

பல்லாயிர மாண்டுகட்கு முன்னே பாங்குடனே தோன்றிப் பார் புகழச் சீர்பெற்று வளர்ந்து எல்லாராலும் இன்று வளம் மிக்க பழம் மொழியெனப் போற்றப்படும் ஒரு மொழி உண்டென்றால் அதுவே தமிழ்.

இயற்கை ஒலிகளையும் செயல்களையும் அடிப்படையாகக் கொண்டு பிறந்ததால் என்றும் இறவாத தன்மையும் குன்றாத இளமையுங் கொண்டு நாள் ஒரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக விருத்தியடைந்துவரும் ஒரு மொழியுண்டென்றால் அதுவே தமிழ். மூவேந்தர் காலத்தில் மூன்றெழுத்து நகரில் முச் சங்கங்களிலும் இச்சையுடன் உலாவி முக்கனிகளின் சுவை போன்ற முப்பிரிவுகளை உள்ளடக்கி ஒளி வீசி வாழ்ந்து வரும் ஒரு மொழி உண்டென்றால் அதுவே அமிழ்தத் தமிழ்.

அகில உலகமெங்கும் அள்ளிப் பருகிக் கொண்டிருக்கும் சாதி சமய வேறு பாடற்ற—காலங் கடந்த—ஒப்புயர்வற்ற உத்தம நூலாம் தெள்ளு தமிழ்க் குறளை அன்று வள்ளுவப் பெரியார் எழுதிய மொழி எதுவென்றால் அதுவே எம் இன்பத் தமிழ். ஒரு காலத்திலே அரியாசனத்திலிருந்து பல நாடுகட்கும் தன் கலை மணம் கமழச் செய்து யாவரும் ஏற்றிப் போற்ற வீற்றிருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற பல மொழிகளின் தோற்றத்திற்கும் காரணமாகி இன்றும் எழில் பொங்க இலங்கிக் கொண்டிருக்கும் ஒரு மொழியுண்டெனில் அதுவே எந் தமிழாம் செந்தமிழ்.

வள்ளுவரின் குறளிலே, கம்பரின் காவியத்திலே, ஔவையின் பாக்களிலே, இளங்கோவின் சிலம்பிலே; சயங்கொண்டார் பரணியிலே, புகழேந்தியின் வெண்பாவிலே, மற்றும் பல தொற்றமிழ்ப் பனுவல்களிலே—பாரதியார் பாடல்களிலேயெல்லாம் பாயருவி நீர் போல் பாய்ந்து விளையாடி இன்னும் பாரதிதாசன் கவிதைகளிலே, மற்றும் பல இளந் தமிழர் எண்ணங்களிலே — எழுத்துக்களிலே — பேச்சுக்களிலெல்லாம் ஒலிபரப்பிக் கொண்டிருக்கும் ஒரு மொழியுண்டென்றால் அதுவே எம் அருமைத் தமிழ்.

இத்தனை காலமும் எத்தனையோ இடைஞ்சல்களையும் இன்னல்களையும் தாண்டி சூதுகளையும் சூழ்ச்சிகளையும் துள்ளிப் பாய்ந்து பலநெருக்கங்களிடையிலும் சுடச்சுட ஒளிவிடும் பொன் போல வளர்ந்து இன்றும் ஒருவித மாறுபாடுமடையாது குன்றாது குறையாது என்றென்றும் வாழ்வேனென உறுதியோடு வாழ்ந்து வரும் ஒரு மொழியுண்டென்றால் அதுவே எம் இன்றமிழ். இத் தமிழ் வளர்க! தமிழ் நாடு வாழ்க! எம்புகழ் பரவுக.

—சோ. இராசேந்திரம்

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத் தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 2.

பெயர்..............................................................

பாடசாலை..............................................................

விலாசம்..............................................................

..............................................................

.............................................. ..............................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

### காயல்பட்டண சமாதான இயக்கம்

தென்னிந்திய நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த காயல்பட்டண வாசிகளால் மட்டக்களப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் ஜனுப் எம். கே. அகம்மதுலெப்பை தலைமையில் 24-1-60-ல் மேற்படி இயக்க அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது.

தேன்மறைக் குர் ஆன், ஜனுப் டி. எம். கே. சுல்தானுல் ஓதப்பட்டபின்னர், தலைவர் தமது முன்னுரையில்;

"இன வெறியும், மொழி வெறியும், நிறவெறியும், கோரத் தாண்டவம் புரிந்த காலத்தில், மனிதப் புனிதர் பூமான் (ஸல்) அவர்கள் அவதரித்து, இத் தீய சக்திகளை முறியடித்தார்கள் பழம் பெருமை வாய்ந்த நம தூரிலே, கட்சி வெறியும், ஆணவமும், மக்களுக்கு மத்தியில் பகையும், காற்று தீ போல் பரவி வருகிறது. இப் பேய்க் காற்றிலிருந்து மக்களை காப்பது எமது கடமையாகும். சாந்தி நபி பெருமான் வீசச் செய்த சமாதானத் தென்றலை நம தூரிலே வீசச் செய்வோமாக" என்று கூறினார்.

தலைவருரைக்குப்பின், எஸ் எம். எஸ் அபுல் ஹஸன் கல்லாலும், சொல்லாலும், தாக்கப்பட்ட நபி மணியின் தியாகத்தை மனத்தில் நிறுத்தி, நமதூரிலே கட்சி வெறியால் பிரிந்து வாழும் மக்களை ஒற்றுமைப்படுத்துவோமாக! இதுவே இவ்வியக்கத்தின் இலட்சியமாகும் என்று கூறினார்.

ஜனுப்களான எம். என். இஸ்மாயில், எஸ். கே. எம். சதக்கத்துல்லா, சின்னத்தம்பி அப்துல்காதிர், டி. எம். கே. எஸ். சுல்தான் ஆகியோரும் இவ்வியக்கக் கொள்கைகள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திலேயே பலர் உறுப்பினர்களாகச் சேர்ந்துகொண்டனர். திரு வி. எம். கே. சின்னத்தம்பி அவர்களுக்கும் நன்றி நவில கூட்டம் இனிது கலைந்தது.

### தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி

அகில இலங்கை தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி அச்சுவேலி கிளை அங்குரார்ப்பணக் கூட்டமும் தமிழரசுக் கட்சிக் காரியாலயத் திறப்பு விழாவும் அச்சுவேலியிலிருக்கும் 'அன்னபவனம்'' என்னும் இல்லத்தில் சென்ற 25-1-60ல் நடைபெற்றது.

கூட்டத்திற்கு பண்டிதர் இராமசுவாமி தலைமை வகித்தார்.

கூட்டத்திற்கு சமூகம் கொடுத்திருந்த கோப்பாய் தொகுதித் தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு எம். பாலசுந்தரம் சமஷ்டி ஆட்சியொன்றினால் தான் இலங்கை வாழ் சிறுபான்மையினத்தவர் தமது உரிமைகளைப் பெற்று வாழ முடியுமென்றும் அதற்கு இளைஞர்கள் முன்னின்று உழைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். பின்னர் திரு வித்துவான் வே. சுநதையா, தா. சிவலிங்கம் என்போர் தமிழரசுக் கட்சியின் இலட்சியம், கொள்கை என்பனபற்றிப் பேசினர்.

அச்சுவேலி தமிழரசு வாலிப முன்னணி உத்தியோகஸ்தர் தெரிவில் கீழ்க்கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு ஜி. வி. பாலசிங்கம், தலைவர்: திரு ந. சிவபாதம், உபதலைவர்: திரு த. சின்னத்துரை, காரியதரிசி: திரு தா. சிவலிங்கம், உபகாரியதரிசி: திரு செ. சிவபாதசுந்தரம், தனாதிகாரி: பொ. இராசலிங்கம். 15 பேர் கொண்ட நிர்வாக சபையினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

### செந்தமிழ் வளர்ச்சி மன்றம்

"ஈழத்திலே சிதைவுற்றுச் சின்னாபின்னமாகிக் கண்ணீர் சிந்தி நிற்கும் தமிழ்த் தாயைத் தமிழர்களாகிய நாம்தான் காப்பாற்ற வேண்டும். தமிழர்கள் சாதிமத பேதமின்றி ஒன்றுபட்டு உழைத்தால் தான் அந்தப் பெரும் பணியை வெற்றிகரமாகச் செய்ய முடியும். ஆனல் அந்த ஒற்றுமையைத்தான் இன்று தமிழர்களிடம் காண முடிவதில்லை 'உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வேறுபாடுகள் வைத்திருத்தல் பாவம்' என்று பைந்தமிழ் பாவலன் பாரதி கூறியதை ஒவ்வொரு தமிழனும் உணர்ந்து என்று ஒன்று படுகிருனே அன்றுதான் தமிழினத்தின் விடுதலைக்கு வழி உண்டாகும்"

சென்ற 31-1-60ல் கிரிலப்பனை கத்தோலிக்க தமிழ் பாடசாலை மண்டபத்தில் திரு எஸ். அன்ரனி பெர்னன்டோ தலைமையில் நடைபெற்ற செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தின் கூட்டத்தில் பேசிய திரு எஸ். ஜே. நசரேன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர். மன்றத்தின் புதிய ஒழுங்குகள் செயலாளரால் வாசித்துக் காட்டப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

### வல்வெட்டித்துறை இளந் தமிழர் இயக்கம்

"இன்றைய நிலையிலே தமிழ் இளைஞருக்கு-குறிப்பாகத் தமிழ் மாணவர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் இழைக்கப்படும் அநீதிகளையும் இன்னல்களையும் போக்கி இளைஞர் சமுதாயத்தின் நலனுக்காகவும் தாய் மொழியாம் தமிழ் மொழியின் பாது காப்பிற்காகவும் இளந் தமிழர் இயக்கம் இறுதிவரை முழு மூச்சுடன் போராடும்."

இவ்வாறு 30-1-60-ல் நடைபெற்ற இளந்தமிழர் இயக்கக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில், அங்குரார்ப்பண வைபவத்தைக் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த திரு. கரிகாலன் கூறினார். மேற்படி வைபவம் வல்வை அ. மி. பாடசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு. ஆ. மகாதேவன் தலைமையில் நடைபெற்றது.

திரு. கரிகாலன் இயக்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் வெகு விரிவாக எடுத்துக் கூறினார். சென்றூர். திரு நல்லையா, திரு. க. துரைரத்தினம் முதலியோர் முக்கிய பேச்சாளர்களாகக் கலந்து கொண்டு வைபவத்தைச் சிறப்பித்தனர். கூட்ட முடிவிலே காந்திஜியின் அமரத்துவத்தை யொட்டி இரண்டு நிமிட நேரம் மௌனம் அனுட்டிக்கப்பட்டது.

அங்கத்தவர்கள் மத்தியில் நடைபெற்ற உத்தியோகத்தர் தெரிவில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-ஆலோசனையாளர்கள்: திரு. தி. இரத்தின சபாபதி, திரு. க. துரைரத்தினம் தலைவர்: திரு. க. இராமச்சந்திரன், செயலாளர்: திரு. ஆ. அகிருபசிங்கம், துணைத் தலைவர்: திரு. செ. சோதிலிங்கம், துணைச் செயலாளர்: திரு. கு. அருச்சுனராசா தனாதிகாரி: திரு. சி. இராசலிங்கம். செயற் குழுவினர்: திருவாளர்கள். சொ. ஐயாத்துரை, வே. பாஸ்கர சுந்தரம் செ. யோகரத்தினம், அரு. தர்மலிங்கம், இ. தேவகுரு.

### இளம் விவசாய சங்கம்

இளம் விவசாய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சென்ற 31-1-60.ல் வாழைச்சேனை அரசினர் மகாவித்தியாலயத்தில் திரு. ரகுபதி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பாடசாலை அதிபர் திரு. செ. இராயதம்பி விவசாயத்தின் நன்மை பற்றிப் பேசினுர்.

பின்னர் கீழ் காணும் கழக உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: செல்வன் சி. மகேஸ்வரம், செயலாளர்: செல்வன் மு. கிருஷ்ண பிள்ளை, துணைச் செயலாளர்: செல்வன் செ. தியாகராசா, பொருளாளர்: செல்வன் க. திருநாவுக்கரசு, கணக்குப் பரிசோதகர்கள்: செல்வன் சி. சின்னத்தம்பி, திரு. கு. சாமித்தம்பி ஆசிரியர்.

### கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் சங்கக் கூட்டம் சென்ற 29-1-60-ல் கல்லூரி மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. அலெக்ஸாண்டர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் செல்வன் வி. கதிர்காமநாதன் பேசுகையில் இந்தியாவின் சுதந்திரத்துக்காக காந்தி, நேரு முதலியவர்கள் எவ்வளவு இன்னல்களுக்குட்பட்டார்களோ அதேபோல இலங்கையிலுள்ள தமிழ் பேசும் இனத்தின் விடுதலையே தங்களின் குறிக்கோள் என்று பாடுபட்டு வரும் தமிழ் தாத்தா திரு. செல்வநாயகத்தையும் மற்றவர்களையும் பாராட்டியதுடன் அவர்களின் குறிக்கோள் வெகு தூரத்தில் இல்லையென்றும் சொன்னார்.

பின்பு கல்லூரி கைப்பந்தாட்டக் கோஷ்டியின் தலைவராக திரு. அருணகிரிநாதன் தெரிவு செய்யப்பட்டதும் கூட்டம் முடிவடைந்தது.

### தமிழ் மாணவர் கழகம்

நு/பிளாய்க்பூல் அரசினர் பாடசாலைத் தமிழ் மாணவர் கழகக் கூட்டம் 28-1-60ல் பாடசாலை மண்டபத்தில் திரு பா. ஆறுமுகம் தலைமையில் கூடியது.

அலுவலாளர் தெரிவிற் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள்பற்றியும், தமிழ் மொழியிலேயே தமிழர் தம் அலுவல்களைச் செய்ய வேண்டிய அவசியம்பற்றியும் தலைவர் தொடக்கத்தில் குறிப்பிட்டார்.

பின்வரும் அலுவலாளர் தெரிவு செய்யப்பட்டனர்:- இணைச் செயலாளர்கள்: செல்வர்: அ. நசூர்தீன், க. சின்னத்தம்பி, பொருளாளர்: செல்வன் சா. இராசேசுவரன்.

செல்வியர் மு. பழனியம்மா, அ. இராசமணி ஆகியோர் தேவாரம் பாடினர்.

### இளைஞர் விவசாயக் கழகம்

[illegible] கண்ணன் இளைஞர் விவசாயக் கழகத்தின் முதலாவது ஆண்டு விழா கழகத் தலைவர் திரு ஆ. முருகேசு தலைமையில் நடைபெற்றது.

வலிகாமம் மேற்கு விவசாயப் போதனாசிரியர் திரு அ. சோமசுந்தரம், ஆசிரியர் த. பொன்னம்பலம் ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

கீழ்க்கண்டவர்கள் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. முருகேசு, உபதலைவர்: கி. செல்வராசா, காரியதரிசி: வி பாலரத்தினம், உபகாரியதரிசி: சி. ஜெயலட்சுமி, தனாதிகாரி: ச. குலவீரசிங்கம், நிர்வாக சபை அங்கத்தவர்கள்: சி. நவரத்தினம், க சண்முக அரசன், சி. சிவப்பிரகாசம், நா. சபாரத்தினம், கு. அப்புத்துரை, திருமதி நா. ஞானம்மா.

### கல்முனை பகுத்தறிவு மன்றம்

கல்முனை பகுத்தறிவு மன்றத்தின் ஆண்டு விழா சென்ற 13-1-60ல் மன்ற பணிமனையில் மன்றத் தலைவர் திரு து. ஏகாம்பரம் தலைமையில் ஆரம்பமாகியது. செயலாளர் யூ. செல்வராசா வருடாந்த அறிக்கையை சபைமுன் சமர்ப்பித்தார். அதன் பின்பு கீழ்க்கண்டவர்கள் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: திரு யூ. செல்வராசா, இணைச் செயலாளர்கள்: திரு எஸ். மேகராசா, திரு சின்னத்தம்பி, பொருளாளர்: திரு சி. பெ. ஜெயரெத்தினம், நிர்வாக சபையினர்: திருவாளர்கள்: கா. இராமனுதன், த. இராசதுரை, கு. ஏகாம்பரம், மு. முத்துலிங்கம், எம். எஸ் சணபதிப்பிள்ளை, வே. வேல்முருகு ஆகியோர்.

கூட்ட இறுதியில் மன்றத்தின் இருப்புப் பணம் ரூபா 800க்கும் புதிய பணிமனை அமைப்பது என்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு அது நிர்வாக சபையினரின் பொறுப்பில் விடப்பட்டது. செயலாளர் உதவி நிதி காட்சியில் கிடைத்த பணம்பற்றிய அறிக்கை சமர்ப்பித்தார்.

### பொங்கல் விழா

கல்முனை பகுத்தறிவு மன்றத்தாரால் மெ. மி. பாடசாலை மண்டபத்தில் பொங்கல் விழா நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு யூ. செல்வராசா தலைமைவகித்தார். திரு கா. இராமனுதன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

பண்டிதர் க. நாகலிங்கம், புதுமைக் கவிஞர் நீலாவணன், ஆசிரியர் ஆறுமுகம் ஆசிரியர் வி. ரி, செல்லத்துரை, துறைநீலன், திருவாளர்கள்: வே. விஞயகம், க. வேல்முருகு, பொ கந்தையா ஆகியோர் தமிழனுக்கும் பொங்கலுக்கும் உள்ள தொடர்பைப்பற்றியும் தமிழன் தன் நிலை உயர என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் பேசினர்கள். திரு த. இராசதுரையால் நன்றி கூறப்பட்டது.

### இந்து கரும ஆலோசனை சபை

"சமய வாழ்வு, சமுதாய வளர்ச்சிக்கு அவசியம். சமய வாழ்வை அடிப்படையாகக் கொள்ளாத சமுதாய வாழ்வு, மாலுமி இல்லா கப்பல் நடுக்கடலில் தத்தளிக்க நேரிடும். இவ்வாறு பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை திருகோணமலை இந்து கரும ஆலோசனை சார்பில் அணிமையில் நடந்த சமயக் கூட்டத்தில் 'திருவெம்பாவை' என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் கூறினர்.

முகாந்திரம் பாலசுப்ரமணியம் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

தேவார மனனப் போட்டியில் பங்குபற்றியவர்களுக்குத் திருமலை நகராண்மைக் கழகத் தலைவர் திரு. பா. நேமிநாதன் பரிசில்கள் வழங்கினர்.

செயலாளர் திரு. எம். பொன்னுச்சாமி நன்றிநவில விழா இனிது முடிவடைந்தது.

## அடிமைப்பட்ட...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தடுத்து தனித் தன்மையைப் பேணிக் காத்து நிற்றல் வகுப்புவாதமாகுமா? யார் வகுப்புவாதிகள்? தமிழரை கீழ் இனமாக மதித்து, அரசாங்க சேவையில் இன அடிப்படையைப் புகுத்தி, தமிழரின் உரிமைகளை மறுப்பவர்கள் வகுப்புவாதிகளா? அல்லது உரிமைகோரி குரல் எழுப்புபவர்கள் வகுப்புவாதிகளா? யார் வகுப்புவாதிகள்?"

இவ்வாறு ஆசிரியர் சி. கனகசுந்தரம் கேட்டார்.

இக் கூட்டத்துக்கு திரு: பெ. கனகசபாபதி தலைமை வகித்தார்.

### எஸ். ஜே. வி. அழைத்தால்...

திரு. கரிகாலன் பேசுகையில், "அரசாங்கத்தின் வகுப்புவாதப் போக்கினுல் முற்றுகப் பாதிக்கப்படுவது இளம் தமிழர்களே. ஆனபடியால் அவர்கள் எல்லோரும் ஓர் அணியாகத் திரண்டு தமக்குவரும் இன்னல்களை எதிர்க்க வேண்டும் 'இதுவே தமிழரின் இறுதிப் போர் எல்லோரும் போராட்டத்தில் இறங்குங்கள்' என்று ஈழத்துக் காந்தி, தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி: செல்வநாயகம் கட்டளை பிறப்பித்தால் அப்போது அப்படியே அணியாகப் போராட்டத்தில் இறங்கத் தயாராக இருக்க வேண்டும்" என்று சொன்னார்.

திருவாளர்கள் சிறீதரன், வி. ஏ. பரமநாயகம், பத்மனுதனம், தி. சி கணேசலிங்கம் ஆகியோரும் பேசினர்.

### நிர்வாகிகள் தெரிவு

இளந் தமிழர் இயக்க கிளை உறுப்பினர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆசிரியர் செ. சோதிப் பெருமாள், துணைத் தலைவர்: திரு. து. தில்லையம்பலம், செயலாளர்: திரு. தி: சி. கணேசலிங்கம், துணைச் செயலாளர்: திரு. ஆ. கணேசலிங்கம், பொருளாளர்: திரு. க. வேதநாயகம்.

மற்றும் நால்வர் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

## முதலிக்குளம்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

களாக இருத்தல் வேண்டும்.

இரு குடியேற்றத் திட்டங்களிலும் விவசாயிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படும், ஒவ்வொரு விவசாயிக்கும் 3 ஏக்கர் வயற் காணியும் இரண்டு ஏக்கர் குடியிருப்புக் காணியும் வழங்கப்படும்.

மேற்கண்டவற்றுக்கான விண்ணப்பப் பத்திரங்களை திருக்கோணமலை தமிழரசுக் கட்சிக் கிளைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்; மற்றும் விபரங்களையும் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டு களியுங்கள்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

சிலோன் டூரிங் சினிமா (அம்பாரை) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

விஜிதா (மஸ்கேலியா) ரிச்மண்ட் (களுத்துறை)

## ஆகிய திரைகளில் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது

நடிகர்கள்:

சிவாஜி கணேசன்
பாலச்சந்தர்
சந்திரபாபு
பாலையா
டி. எஸ். துரைராஜ்
ஓ. ஏ. கே. தேவர்




நடிகைகள்:

பத்மினி
சந்தியா
முத்துலட்சுமி
லட்சுமி பிரபா
ஞானம்
காமாட்சி

முதலியோர் நடித்த
பக்ஷிராஜாவின்

# ★ மரகதம் ★

● ஆசையால் அலைமோதும் ஆடவன் தன் எண்ணங்களை ஆற்றலால் அணை கட்டி அறிவுப் பாதையில் அடிவைத்த அறிவாளியின் அற்புதக் கதை—மரகதம்

● கருத்தறியாத காளைகள் தன் கற்பைக் களவாட கண்ணி வைத்த போதெல்லாம் கடுகளவும் சளைக்காமல், கடமையை கடைபிடித்த காதலனை மணந்த காரிகையின் கதை—மரகதம்.



கதை:
டி. எஸ். டி. சாமி

வசனம்:
முரசொலி மாறன்

தயாரிப்பு டைரக்ஷன்:
எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த [illegible] எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 பெப்ரவரி 14-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது